# ஆங்கிலப் பயிற்சிக்கு பாரதியார் வழி

ம.பொ.சி.

4667

# தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை

## ம. பொ. சி.

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை - 4.

முதற் பதிப்பு : 26, ஜூன், 1979.
சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின்
74-ஆவது பிறந்த நாள்.
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 8-50

வெள்ளையன் பதிப்பகம் வெளியீடு

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# முன்னுரை

"தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை" என்னும் சொற்றொடரானது, தமிழ் மொழிக்கென தலைசிறந்த இலக்கணம் படைத்த முதல்வரையும், தமிழ் இனத்துக்கென தேசிய இலக்கியம் தந்த புரட்சிக் கவிஞரையும் நினைவூட்டுவதாகும். இவர்களுக்கு இடையிலுள்ள காலம் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். தமிழ் மொழியின் முடியும் அடியுமாகக் காட்சியளிக்கும் தொல்காப்பியரையும், பாரதியாரையும் யான் என் இதயத்தில் வைத்துப் போற்றி வருபவன். தொல்காப்பியர் தந்த இலக்கணத்தில் தமிழ் இனத்தின் வாழ்க்கை இலக்கணமாகிய பொருளதிகாரம் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் யான் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவு நூலின் முற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. மற்றுள்ள பெரும்பகுதி பாரதியாரின் இலக்கியம் பற்றியதாகும். பொதுவாக,

எனது பேச்சுக்களும், எழுத்துக்களும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. சில பகுதிகள் தனி ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கொண்டதாகவும் மற்றுஞ் சில பகுதிகள் பொருட்சுவை தரும் விமரிசனமாகவும் அமைந்துள்ளன. இந் நூல் எனது 74-வது பிறந்த நாளையொட்டி தமிழன்னைக்கு யான் அளிக்கும் காணிக்கையாகும்.

யான் எழுதத் தொடங்கிய நாள்தொட்டு எனது நூல்களை வெளியிட்டு வரும் "இன்ப நிலையத்"தார் இந்த நூலையும் நல்ல முறையில் வெளியிட்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன். பதிப்பகத்தின் அதிபர் திரு. சோம. சுவாமிநாதன் எனது நூல்களை வெளியிடுவதிலே மிகுந்த ஆர்வமுடையவர். குறைந்த அவகாசத்தில், சிறந்த முறையில் வெளியிட்ட அவரைப் பாராட்டுகிறேன்.

26-6-1979. ம. பொ. சிவஞானம்

# பதிப்புரை

சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களுடன் கடந்த 35 ஆண்டுகளாக அருகிருந்து பழகும் பாக்கியம் பெற்றிருப்பதை நான் பெரும் பேருகக் கருதுகிறேன்.

சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களின் நூல்களை வெளியிடுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 1947-ல் ஆரம்பிக்கப்பட்ட இன்ப நிலையத்தின் மூலம் கடந்த 32 ஆண்டுகளாக அன்னாரின் எழுத்தோவியங்களை தொடர்ந்து பிரசுரித்து வருகிறேன்.

எதையும் தமிழன் என்ற இன உணர்வோடு பார்த்து ஆராயும் தனித் திறமை சிலம்புச்செல்வரின் தனியுரிமை.

பாரதியாரின் எழுத்தோவியங்களை இதுவரை வேறு எவருமே அணுகாத முறையில், தமக்கே உரிய தனி வழியில் இந்நூலில் உள்ள பல கட்டுரைகளில் சிலம்புச்செல்வர் விமர்சித்துள்ளார். தொல்காப்பியத்தைப் பற்றியும் புதிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளார்.

"தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை" என்னும் இந் நூலை சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களின் 74-வது பிறந்த நாளன்று இன்ப நிலையத்தின் மூலம் வெளியிட அனுமதியளித்த சிலம்புச்செல்வர் அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும்.

சென்னை
26—6—79

**சோம சுவாமிநாதன்**
உரிமையாளர்; இன்பநிலையம்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தொல்காப்பியம், இலக்கணம் மட்டுமல்ல; வாழ்க்கை இலக்கியமுமாகும்! | ... | 5 |
| 2. | களவியல், தமிழர் வாழ்க்கை நெறியா? | ... | 19 |
| 3. | 'சிற்றின்பம்' என்பது சரிதானா? | ... | 28 |
| 4. | வள்ளற் பெருமான் பாடிய அகப்பாடல்கள் | ... | 39 |
| 5. | தொல்காப்பியர் வழியில் பாரதி பாடிய அகப் பாடல்கள் | ... | 46 |
| 6. | புலவர்களுக்கு ஒரு வார்த்தை! | ... | 53 |
| 7. | பாரதியார் பாடாதவை | ... | 59 |
| 8. | கட்சி அரசியலும் கவிஞர் பாரதியாரும் | ... | 89 |
| 9. | பாரதியார் இலக்கியத்திலே தீண்டாமைக்கு எதிர்ப்பு! | ... | 95 |
| 11. | பாரதியாரின் தீர்க்க தரிசனம்! | ... | 109 |
| 12. | யாதுமாகி நின்றார் பாரதியார்! | ... | 121 |
| 13. | மூவேறு பக்திகளைப் பிணைத்த முதற் கவிஞன் பாரதி | ... | 127 |
| 14. | தேசாபிமானத்தை வென்ற மனிதாபிமானி பாரதி! | ... | 136 |
| 15. | பாரதி ராம பக்தரா? கிருஷ்ண பக்தரா? | ... | 141 |
| 16. | பாரதி பாதையிலே நாம்! | ... | 145 |
| 17. | மகாகவி பாரதி பாடிய பாஞ்சாலி சபதம் | ... | 156 |

# தொல்காப்பியம், வறட்டு இலக்கண மட்டுமல்ல; வாழ்க்கை இலக்கியமுமாகும்!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கும் எனக்கும் சரித்திர ரீதியான ஒரு தொடர்பு இருந்து வந்திருக்கிறது. இப்படிச் சொல்வதால், நான் இந்தப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவனே என்று உங்களுக்கு ஐயம் ஏற்படலாம். ஆரம்பக் கல்வியைக்கூடப் பள்ளி மூலம் முழுமையாகப் பெறும் வாய்ப்பை இழந்துவிட்ட யான், இந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவனுக இருக்க வழி ஏது, விதி ஏது? என்னுடைய இலக்கியப் பணிக்கு இந்தப் பல்கலைக் கழகம் ஒரு முன்னேடியாக இருந்து வருகிறது என்பதனையே உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

நான் சிலப்பதிகாரம் பற்றி முதன் முதலாகப் பேசினேன் என்ருல், அது இந்தப் பல்கலைக் கழகத்தில்தான்—21—11—46ல்தான். அப்போது இப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாக இருந்த முதுபெரும் புலவர்களால் வரவேற்கப்பட்டு, சிலப்பதிகாரம் பற்றிப் பேசினேன். அந்தப் பேச்சை முன்னேடியாகக் கொண்டுதான் சிலப்பதிகாரப் பிரசார இயக்கமே உருவானது எனலாம். அந்த இயக்கந்தான் என்னைச் "சிலம்புச் செல்வர்" ஆக்கியது.

இன்று பூம்புகாரிலே சிலப்பதிகாரக் கலைக்கூடம் நின்று நிலவக் காரணமானது.

## 'தொல்காப்பியம்பற்றி இன்றுதான் பேசுகிறேன்!'

அதுபோல, தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியம் பற்றியும் முதன்முதலாக இன்றுதான்—இங்குதான் பேசுகின்றேன். இதுவரை சிலப் பதிகாரம் போன்ற இலக்கியங்களைப் பற்றித்தான் பேசி வந்திருக்கிறேன். இலக்கண நூல் ஒன்றைப் பற்றி இன்று தான் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகிறேன். என்னைப் போன்று முறைசாராக் கல்வி மூலம் புலமை பெற்றவர்கள் தொல்காப்பியம் போன்ற நூலில் பயிற்சி பெறுவது கடினம். எந்த ஓர் இலக்கிய நூலையும் ஆசிரியர் எவரிடமும் யான் பயின்றது இல்லை. அதுபோன்றதுதான் எனக்குள்ள இலக் கணப் பயிற்சியும். இலக்கணப் பயிற்சியிலே எழுத்ததிகார மும், சொல்லதிகாரமும் என்னைக் கவர்ந்ததில்லை. தொல் காப்பியத்திற்குள் நுழையு முன்பே எழுத்திலும் சொல்லி லும் சிறிதளவு பயிற்சியை யான் பெற்றுவிட முடிந்தது. அந்தக் குறைந்த அளவுப் பயிற்சியே நான் எழுத்தாளனுவ தற்குப் போதுமானதாக இருந்தது. ஆனால், பொருளதி காரப் பயிற்சியின்றி இலக்கிய ஆராய்ச்சி நடத்துவது சாத்தியமில்லை. குறிப்பாக, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, ஐம்பெருங்காப்பியங்கள் ஆகிய இலக்கியங்களை ஆராயத் தொல்காப்பியத்திலுள்ள பொருளதிகாரப் பயிற்சி தேவைப்படுகிறது. அது காரணமாகத்தான் எனக்கு நானே ஆசிரியனாக இருந்து உரையாசிரியர்களின் துணை கொண்டு பொருளதிகாரம் பயின்றேன். பயிற்சி இன்னமும் முடியவில்லை. இன்று தொல்காப்பியம் பற்றி இங்கு பேசு வதும், கேட்கின்ற உங்களுக்குப் பயிற்சி கொடுக்க அல்ல;

பேசுகின்ற நானே அதில் பயிற்சி பெறுவதற்காகத் தான்!

## 'போர்' அடிக்குமே!

தொல்காப்பியம் பற்றித் தமிழில் ஓரளவேனும் இலக்கண—இலக்கியப் பயிற்சி பெற்றவர்கள் மத்தியில் தான் பேசமுடியும். ஆம்; தமிழ்ப் பேராசிரியர்கள் மத்தியிலே, தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயிலும் மாணவர்கள் மத்தியிலே தொல்காப்பியம் பற்றிப் பேசலாம். அவர்களுக்கேகூட அது 'போர்' அடிக்கும் விஷயந்தான். வகுப்பறையிலே மாணவர்கள் தொல் காப்பியத்தைப் பாடம் கேட்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய கட்டாயக் கடமை. தேர்வு எழுதுவதற் கான புலமையைப் பெற்றாக வேண்டுமே என்ற கவலை யால் கேட்கிறார்கள்.

இந்த அரங்கிலே மாணவர்கள் கூடியிருக்கிறார்கள் என்றால், கட்டாயக் கடமையால் அல்ல; ம. பொ. சி. யின் பேச்சைக் கேட்டு மகிழ வேண்டுமென்ற ஆர்வத்தால்! இங்கே குழுமியுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களிலே அவ்வளவு பேரும் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயில்பவர் அல்லர். வேறு கலைப்பாடங்களை—விஞ்ஞானப் பாடங்களைப் பயில்வோரும் மொழிப்பற்று, இனப்பற்றுக் காரணமாக இங்கே குழுமியிருக்கிறார்கள். அவர்களும் சுவைக்கும்படித் தொல்காப்பியம் பற்றிப் பேச வேண்டுமே என்பது எனக்குள்ள கவலை.

நல்ல வேளையாக, தொல்காப்பியத்திலுள்ள பொருளதிகாரம் வறட்டு இலக்கணமாக மட்டும் அல்லாமல், தமிழினத்தவரின் வாழ்க்கை நெறியைக் கூறும் இலக்கியமாகவும் இருக்கிறது. 2000 ஆண்டுக்கு

முற்பட்ட காலத்து மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் வரலாறாகவும் இருக்கிறது. அதனால், இந்த அரங்கில் உள்ளவர்கள் சுவைக்கும்படிப் பேச என்னால் முடியும் என்றே நம்புகிறேன்.

## தமிழ்ச் சங்கங்கள்

தமிழுக்கென மூவேறு காலங்களில் மூன்று சங்கங்கள் இருந்தனவென்று புலவர்கள் நம்புகின்றனர். இந்த மூன்று சங்கங்களிலே முதலிரு சங்கங்களைக் காலம் விழுங்கி விட்டது, கடற்கோள் விழுங்கிவிட்டது என்று சொல்கிறார்கள்.

முச்சங்கங்களிலே இடைச் சங்க காலத்தில் தொல்காப்பியம் செய்யப்பட்டது என்று நம்பப்படுகிறது. சுவையான ஒரு செய்தி என்னவென்றால், இரண்டாவது கடற்கோளிலே தமிழ் இலக்கியங்கள் எல்லாம் அழிந்தொழிந்து போக, இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒன்று மட்டும் தப்பிப் பிழைத்தது என்பதாகும். இந்தக் கதையானது கற்பனையா, வரலாற்று நிகழ்ச்சியா என்பது பற்றி எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை. எப்படியோ, அழிந்து போன இலக்கியங்களோடு, இந்த இலக்கண நூலும் சேர்ந்து அழிந்தொழியாமல், இதுவேனும் எஞ்சி நின்றதே, அது நாம் செய்த தவப் பயன் ஆகும்.

தமிழராகிய நாம் நமது தாய் மொழியிலே தொல்காப்பிய நூலைப் பெற்றதற்காக இறுமாப்புக் கொள்ளலாம்; இதயம் பூரிக்கலாம். அதிலும், எழுத்ததிகாரத்தையும் சொல்லதிகாரத்தையும் பெற்றதோடன்றி, உலக மொழி எதற்கும் இல்லாத பொருள் இலக்கணத்தையும் பெற்றோமே, அது நமக்கே உரிய தனிப் பெருமையாகும்.

நம் தாய்மொழியான தமிழ் தன்னேரில்லாத் தனி மொழி என்பதற்குத் தொல்காப்பிய நூல்தானே சிறந்த

சான்று. தமிழுக்குரிய இலக்கணம் வேறு எந்த மொழியிடமும் இருந்து நாம் இரவல் பெற்றதன்று; நமக்கே உரிய மரபுவழிச் சொத்து.

தமிழர் வாழ்க்கையை 'அகத்திணை' என்றும், 'புறத்திணை' என்றும் புலவர்கள் பிரித்திருக்கிறார்கள். அகத்திணையையும் 'களவியல்' என்றும் 'கற்பியல்' என்றும் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு, தமிழினத்தார் நாகரிகத்தில் நனி சிறந்தவர்கள் என்பதனைக் காட்டுவதாகும்.

தொல்காப்பியர் சுத்தத் தமிழரா, வடபுலத்திலிருந்து வந்தவரா? இந்த வினாக்களுக்கு இதுவரை புலவருலகம் ஒருமனப்பட்டு ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் விடை காணப்படவில்லை; காண்பதும் கஷ்டந்தான்.

## தொல்காப்பியம் படித்ததால் எல்லைப்போரில் ஈடுபட்டேன்!

என் எதிரே குழுமியுள்ள பேராசிரியர்களும், மாணவ மணிகளும் தொல்காப்பியத்தைப் படித்தது, அதிலே புலமை பெற மட்டுந்தான். நான் தொல்காப்பியத்தைப் படித்துப் புலமை பெற்றதோடு, அதில் காணப்படும் தமிழக எல்லைகளை மீட்கப் போராட்டத்திலும் ஈடுபட்டேன்.

தொல்காப்பியப் பாயிரத்திலே,

**''வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ் கூறும் நல்லுலகம்''**

என்கிறார் பனம்பாரனார்,

இதைப் படித்துவிட்டு, அந்த வடவேங்கடம் இப்போது எங்கே யிருக்கிறது? இன்றைய தமிழகத்தின் வடக்கெல்லை அதுதானு? தென்குமரி எங்கே யிருக்கிறது? இன்றைய தமிழகத்தின் தெற்கெல்லை அதுதானு?' என்றெல்லாம் ஆராய்ந்தேன். 'பிஎச். டி.' ஆய்வுரை எழுதி டாக்டர் பட்டம் பெறுவதற்கல்ல; பறிபோன தமிழகத்தின் எல்லைப் பகுதிகளை மீட்பதற்காக! சிலம்பிலே,

''நெடியோன் குன்றமும்
தொடியோள் பெளவமும்
தமிழ் வரம்பறுத்த
தண்புனல் நாடு''

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆம்; தொல்காப்பியப் பாயிரம், தமிழகத்தின் வடக்கெல்லை மலை அரண் என்றும், தெற்கெல்லை கடல் அரண் என்றும் மட்டுமே கூறுகின்றது. சிலப்பதிகாரமோ, வடக்கிலுள்ள மலையரண்மீது திருமால் என்னும் தெய்வம் நின்று காக்கின்றது; தெற்கெல்லையான குமரி முனையிலே, குமரித் தெய்வம் நின்று காக்கின்றது என்று கூறுகின்றது.

இதைப் படித்தபோது, என் இதயம் பூரித்தது. தமிழகத்தின் எல்லைகளை ஆண் தெய்வமும் பெண் தெய்வமும் நின்றல்லவா காவல் புரிகின்றன என்று நினைத்து நினைத்து மகிழ்ந்தேன்.

பின்னர், அப்போதைய சென்னை மாநிலத்தின் நிலப் படத்தைப் பார்த்தேன். திருப்பதிப் பிரதேசத்திலும், குமரி முனைப் பிரதேசத்திலும் வாழுகின்ற மக்களின் மொழிவாரிக் கணக்கையும் சென்சஸ் புத்தகத்திலிருந்து சேகரித்துக்கொண்டேன். அதன் பின்னர்த்தான், தமிழகத்தின் வடக்கெல்லைப் பிரதேசம் ஆந்திரத்திலிருக்கிறது; தெற்கெல்லையிலுள்ள குமரிமுனைப் பிரதேசம்

கேரளத்திலிருக்கிறது என்னும் உண்மைகளை உணர்ந்தேன். உள்ளம் கொதித்தது. எல்லைப் போரைத் தொடங்கினேன்! அப்படிப்பட்ட நான் தொல்காப்பியத்தைப் புறக்கணிக்க முடியுமா? வெறும் இலக்கண நூலாக மட்டும் கருத முடியுமா?

## தொல்காப்பியர் தொல்குடித் தமிழரா ?

தொல்காப்பியர் தமிழகத்தின் தொல்குடியில் பிறந்த தமிழரா, வட புலத்திலிருந்து வந்த ஆரியரா?—என்கிற ஆராய்ச்சி இன்னமும் முடியவில்லை. அவர் தொல்குடித் தமிழர் என்பதே என் கருத்து. அவர் தமிழில் பெற்றிருந்த ஆழ்ந்த புலமையை— தமிழினத்தின் வாழ்க்கை நெறிகளை பொருளதிகாரத்தில் அவர் எடுத்துக்காட்டும் திறமையை — நோக்குமிடத்து, அவர் தொல்குடித் தமிழராகத்தான் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. ஆயினும், அவர்க்கு வடபுலத்துக்கும் தென் புலத்துக்கு மிடையே கலாசார ஒருமைப்பாடு காணும் நோக்க மிருந்திருக்கிறது. அந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டும் அவர் பிறமொழிகளிலில்லாத வகையில் தமிழ் மொழியில் பொருளதிகாரம் படைத்துள்ளார். உலகிலுள்ள வேறு மொழி எதிலும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் படைத்ததன்றி, பொருளுக்கு இலக்கணம் சொன்னதில்லை என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை கொள்கிறோம்.

## தமிழில் மட்டும் பொருளிலக்கணம் பிறந்ததேன்?

பிறமொழிகளில் இல்லாதபடி தமிழில் மட்டுமே பொருளிலக்கணந் தோன்றக் காரணம் என்ன? அதனை ஆராய்ந்து உண்மை காண வேண்டாமா? உலகிலுள்ள ஒவ்வொரு மொழியினருக்கும் அவரவருக்கெனத் தனிப்

பட்ட வாழ்க்கை முறை உண்டு ஆகவே, அவர்கள் விரும்பியிருந்தால், பொருளிலக்கணத்தையும் படைத்திருக்க முடியும். வடமொழிக்கு எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் வகுத்தார் பாணினியார். அவர் விரும்பியிருந்தால், பொருளிலக்கணமும் படைத்திருக்க முடியாதா? முடியும். அதற்கான புலமையும் அவருக்கு உண்டு. இருந்தும், பொருளிலக்கணம் படைக்கவில்லை.

எந்த மொழியினரும் தங்கள் வாழ்க்கை இலக்கணத்தைத் தாங்களே படைப்பதில்லை. ஓவியர் ஒருவர் தம் படத்தைத் தாமே வரைந்து கொள்வதில்லை. சென்னையிலேயே வழிவழி வாழ்ந்துவரும் குடும்பத்தில் வந்தவருக்குச் சென்னையைப் பற்றி அறிந்துகொள்ளப் பூகோளப் படம் தேவைப்படுவதில்லை. நகருக்குப் புதிதாக வருபவர்களுக்குத்தான் தேவைப்படும்.

## மிஷனரிகள் வருகை

தமிழகத்திற்கு அடுத்தடுத்து மிஷனரிகள் (அன்னியர்கள்) வந்தவண்ணம் இருந்தார்கள். தமிழகம் புகுந்த முதல் ''மிஷனரிகள்'' கிறித்துவப் பாதிரிமார்தான் என்று எண்ணுகிறோம். அது தவறு. ஆதியில் வந்தவர் ஆரிய மிஷனரிகளே. ஐம்புலன்களையும் வென்ற அறவோராக, அருளாளராக அவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் இமயம் தொடங்கிக் குமரி வரை கலாசார ஒருமைப்பாடு காண விழைந்தார்கள். இங்குள்ள நம்மவரை அரசியல் ரீதியில் அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்த அவர்கள் வரவில்லை. முற்றுந் துறந்த முனிவர்க்கு—ஐம்புலன்களையும் வென்ற அருளாளர்க்கு அரசியல் ரீதியில் ஆதிக்கம் செலுத்தும் ஆசை இருக்காதுதானே?

ஆதியில் வந்த வேத மதத்து மிஷனரிகளை அடுத்து சமண மிஷனரிகள் வந்தார்கள்; பின்னர், பௌத்த

மிஷனரிகள் வந்தார்கள்; அடுத்து, இஸ்லாமிய மிஷனரி களும் கிறித்துவ மிஷனரிகளும் வந்தார்கள். இவர்களது வருகையை காலப்போக்கில் அரசியல் ஆதிக்கவாதிகளும் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அடுத்தடுத்து வந்த மிஷனரிகளின் நோக்கம் அதுவன்று. அவர்கள் இந்தியா முழுவதிலும் —ஏன், உலகமனைத்திலும் ஒரே கலா சாரத்தை உருவாக்கும் தூய நோக்குடனேயே இங்கு வந்தார்கள். அப்படி வந்தவர்களோடு தமிழகத்தின் பழங் குடிப் புலவர்களும் சேர்ந்து கொண்டிருக்கலாம். அப்படிச் சேர்ந்தவர்களுள் தொல்காப்பியரும் ஒருவராகலாம். வந்தவர்களின் ஒருமைப்பாட்டுணர்ச்சி இங்குள்ள அறிஞர் களையும் கவர்ந்திருக்கலாந்தானே! வந்தவர்கள் ஆன்றவிந் தடங்கிய சான்றோராக இருந்தனராதலால், இங்கிருந்த சான்றோர்களும் அவர்களோடு உறவு கொண்டிருக்கலாம். வந்தவர்களும் தமிழ் நாட்டுக் கலாசாரத்தை அழிக்க விரும்பாமல் பன்மையிலே ஒருமை காண விரும்பி, கொண் டும் கொடுத்துந் தொண்டாற்ற முனைந்திருக்கலாம். இது வரவேற்கத் தக்கதுதானே!

அதனாற்றான், தொல்காப்பியத்திலுள்ள பொருளதி காரத்தைப் படித்த பிற்காலத்துப் புலவோரில் ஒரு சாரார் தொல்காப்பியரை "வந்தேறிய வடபுலத்தார்" என்றும், இன்னொரு சாரார் "தமிழகத்தின் தொல்குடி யினர்" என்றும் கூறலாயினர். இந்த இரண்டிலுமே உண்மை இருக்கிறது.

## கலாசார ஒருமைப்பாடு

தொல்காப்பியர் தமிழகத்தின் தொல்குடியிற் பிறந்த வர்தான் என்றாலும், வந்தேறிய ஆரிய மிஷனரிகளுடன் சேர்ந்து இந்திய கலாசார ஒருமைப்பாட்டுக்காகப் பாடு பட்டவர். அதற்காகவே "பொருளதிகாரம்" படைத்தவர்,

வட புலத்திலிருந்து தென்புலம் போந்த மிஷனரிகளுக்கு—அவர்கள் வேத மதத்தினரோ, ஜெயின மதத்தினரோ, புத்த மதத்தினரோ — தமிழ் நாட்டுப் பூர்வ குடித் தமிழரின் நாகரிகத்தைப் போதிக்க விரும்பித் தொல்காப்பியர் பொருளதிகாரத்தைப் படைத்திருக்க வேண்டும்.

பிற மொழியிலில்லாதபடி பொருளிலக்கணம் தமிழில் மட்டும் தோன்றியதற்கு இதுவே காரணமாகலாம். ஆரிய மன்னன் பிரகதத்தனுக்குத் தமிழறிவுறுத்த, கபிலர் "குறிஞ்சிப் பாட்டு" படைத்ததனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். அதுவும் 'பொருள்' நூல்தானே!

இக் கருத்தை ஏற்பதானால், தொல்காப்பியர் பழந் தமிழ்க் குடியினர்தான் என்பது உறுதிப்படும். ஆனால், அவர் பொருளதிகாரம் படைத்தது வட புலத்திலிருந்து வந்த கலாசார மிஷனரிகளுக்குத் தமிழர் வாழ்க்கை நெறியைக் கூறத்தான் என்பதையும், வட புலத்துக் கலாசாரத்துக்கும் தென்புலத்துக் கலாசாரத்துக்கு மிடையே ஒருமைப்பாடு காணும் கருத்துக்களும் பொருளதி காரத்தினுள் கலந்திருக்கின்றன என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

கலாசார ஒருமைப்பாடு காண வடபுலத்துச் சான்றோர்கள் தென்புலத்துக்கு வந்ததும், தென்புலத்துச் சான்றோர்கள் அவர்களை வரவேற்றதும் குறையோ, குற்றமோ ஆகா. பரிணாம வளர்ச்சி விதியின்படி இந்த விதமான கலாசார உறவைத் தவிர்ப்பதற்கில்லை.

ஒரு மொழிக்குரிய நாட்டினுள் இன்னொரு மொழியினர் தங்கள் சமயத்தையோ, கலாசாரத்தையோ பரப்ப நுழைவார்களானால், புகுந்த நாட்டிலுள்ள இலக்கண—இலக்கியங்களைப் பயின்று, அந்த மொழியிலும்—முடிந்த

வரை அதன் வழியிலும் அவர்களும் இலக்கண—இலக்கியங்களைப் படைப்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

## பாதிரிமார்களின் பணி

அந்த வகையில் 18, 19ஆம் நூற்றுண்டுகளிலே தமிழகம் போந்த இத்தாலியப் பாதிரியான பெஸ்கியும், பிரிட்டிஷ் பாதிரியான ஜி. யூ. போப்பும் தமிழில் இலக்கணமும் இலக்கியமும் அகராதிகளும் படைக்கக் கண்டோம். இதைத்தான் கிறித்துவ மிஷனரிகளுக்கு முன் வந்த வேத, சமண, பௌத்த சமயங்களைச் சார்ந்த மிஷனரிகளும் செய்தார்கள். அது தவறல்ல. தவறு எது என்றுல், தமிழகத்துப் பழங்குடித் தமிழரான புலவர்களும் தங்கள் மொழியை—அதன் வழிப்பட்ட சைவ சமயத்தை—அதனேடு பிணைந்துள்ள தமிழர் கலாசாரத்தைப் பரப்பத் தமிழகத்துக்கு வெளியே செல்லாததாகும்.

தமிழும் தமிழர் கலாசாரமும் உலகமெலாம் பரவ வேண்டும் என்ற விருப்பம் நம்மவருக்கும் இருந்திருக்கிறதென்பதற்குச் சேக்கிழார் பெருமானுர்,

> ''திசையனைத்தின் பெருமையெலாம்
> தென்திசையே வென்றேற,
> மிசையுலகும் பிறவுலகும்
> மேதினியே தனிவெல்ல,
> அசைவில்செழுந் தமிழ்வழக்கே
> அயல்வழக்கின் துறைவெல்ல
> சிவம்பெருக்கும் பிள்ளையார்
> திருஅவதா ரஞ்செய்தார்''

என்று பாடியிருப்பதே சான்றுகும். ஆனுல், நம்முடைய புலவர்களோ, புலவர்களாகவுமிருந்த அருளாளர்களோ தங்கள் மொழியை—கலையை—கலாசாரத்தைப் பரப்பு

வேங்கடத்துக்கு வெளியே சென்றதில்லையே! அன்றுமட்டு மல்ல; இன்றுங்கூடத்தான்!

## தொல்காப்பியம் தொகுப்புதான்; படைப்பல்ல!

தொல்காப்பியர் பழந் தமிழ்க்குடியில் பிறந்தவர் அல்லர் என்றே கொண்டாலும்—வாதத்திற்காகச் சொல்கிறேன்—அதனால் தமிழினத்துக்குத் தலைகுனிவு ஏற்பட நியாயம் இல்லை. அவர் புதிதாக எதையும் தமிழருக்குத் தந்துவிடவில்லை. அவர் காலத்துக்கு முன்பே தமிழ் மொழி இலக்கண—இலக்கிய நூல்களைப் பெற்றிருந்தது. அதனாற்றான், "என்மனார் புலவர்" என்று பல்வேறு சூத்திரங்களில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலத்தால் தொல்காப்பியருக்கு முற்பட்டவராகக் கருதப்படும் அகத்தியனாரும் தமிழுக்கு இலக்கணம் செய்ததாகச் செய்தி உண்டு. அகத்தியம் என்னும் பெயர் பெற்ற அந்த இலக்கண நூல் மறைந்தொழிந்த தென்றாலும், அதன் சூத்திரங்கள் சில இன்னும் வழக்கிலுள்ளன. அந்த அகத்தியரும் தமிழை சிருஷ்டிக்கவில்லை. தமிழின் வளத்தையும் தமிழரின் நாகரிக வளர்ச்சியையும் அளந்து காட்டினார்—அவ்வளவுதான்! இதனை, "என்றுமுள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்று கம்பர் கூறுவதாலும் அறிகிறோம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே தமிழகம் போந்த பிரிட்டிஷ் பாதிரிமார்கள்—சரித்திராசிரியர்களாக இருந்தவர்கள்—தமிழினத்தின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கொடுத்தார்கள். அவ்வன்னியர் நம் வரலாற்றை எழுதியதற்காக நாம் வெட்கப்படுகிறோமா? வேதனைப் படுகிறோமா? இல்லையே!

பாதிரிமார்களான சரித்திராசிரியர்கள் நம்மைப் பற்றித் தங்கள் சொந்த நாட்டினருக்கு அறிவிக்கவுந்தான்

இந்திய சரித்திரத்தை எழுதினர்கள். ஜெர்மன், இத்தாலி, பிரெஞ்சு நாடுகளிலிருந்து தமிழகம் போந்த கிறித்துவப் பாதிரிமார்களும் அறிந்து கொள்வதற்காகத்தான் "திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்" போன்ற பல சரித்திர நூல்களைக் கால்டுவெல் போன்ற பாதிரிமார்கள் எழுதினர்கள். அவை இந்தியருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்பே ஒழிய, அசல் படைப்பு அல்ல.

## வாழ்க்கை இரு வகை

தொல்காப்பியர் தமிழினத்தின் வாழ்க்கை நெறிகளைத் தொகுத்துப் பொருளதிகாரம் படைத்ததற்கு மற்றொரு காரணமும் சொல்லலாம். வாழ்க்கை என்பது இரு வகையானது. எப்படியும் வாழலாம் என்பது ஒரு வகை. அது, காட்டுமிராண்டிகளின் வாழ்க்கை முறை. இப்படித்தான் வாழ வேண்டும் என்பது இன்னொரு முறை. அது, நாகரிகத்தில் நனிசிறந்த மக்களின் வாழ்க்கை முறை.

தமிழினத்தார் பழங்குடியினராதலால் இப்படித்தான் வாழ வேண்டுமென்று ஒவ்வொரு துறையிலும் வரம்பு வைத்துக் கொண்டு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர். அதனாற்றான் தமிழரின் வாழ்க்கை நெறிகளைத் தொகுத்து, அதனை ஓர் இலக்கணமாக அமைக்க முடிந்தது தொல்காப்பியரால்.

இத்தாலிய கிறித்துவப் பாதிரியான பெஸ்கி என்பார் தமிழில் சதுரகராதியைத் தந்தார். அதுவும் அவருடைய படைப்பல்ல. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள தமிழ் மொழியின் சொற்களைக்கொண்ட தொகுப்புதான். மற்றொரு கிறித்துவப் பாதிரியான கால்டுவெல் தந்த ஒப்பிலக்கணமும் அசல் படைப்பல்ல; தொகுப்புதான்.

இப்படி நான் சொல்வதால், பெஸ்கியின் — கால்டு வெல் துரையின் உழைப்பைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதவேண்டாம். அவர்களுடைய உழைப்பு தமிழினத்தார் என்றென்றும் நன்றியுடன் போற்றிவரத்தக்கதாகும். அதனுல்தான் சென்னைக் கடற்கரையிலே அவர்களுக்குச் சிலைகள் நிறுத்தியிருக்கிறோம்.

தொல்காப்பியமும் ஒருவகையில் தொகுப் ।த்தான் என்றாலும், அதைத் தொகுத்துத் தந்த சான்றோர், தமிழுக்கு அழியாத பெரும்புகழைத் தேடித் தந்து விட்டார். தமிழராகிய நம்மை உலகோர் முன் தலை நிமிர்ந்து நிற்கச் செய்துவிட்டார். ஆகவே, தொல்காப் பியரை தொல்குடித்தமிழராகவே கருதலாம்.

# களவியல், தமிழர் வாழ்க்கை நெறியா?

அண்ணுமலைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொல்காப்பியத்தில் வரும் ''களவியல்'' இனிக்குந்தானே! அந்தக் களவியல் — தொல்காப்பியத்தில் கூறியுள்ளபடி —தமிழினத்தின் வாழ்க்கை நெறிதாஞ? 'ஆம்'; என்று சொல்வோரும் உண்டு. என்ஞல் அப்படிச் சொல்ல முடியவில்லை.

நம்பி ஒருவனும் நங்கை ஒருத்தியும் குறிஞ்சி நிலமெனப்படும் மலைப் பிரதேசத்திலே சந்திக்கிருர்கள். அவர்கள் ஒத்த பருவத்தினர்; ஒத்த உருவத்தினர். உள்ளத்தாலும் ஒன்றுபட்டு விடுகின்றனர். இந் நிலையிலே, ''உனக்கு நான்; எனக்கு நீ'' என்று தங்களுக்குள்ளே உடன்படிக்கையும் செய்துகொள்கின்றனர். இதற்குப் பெற்ருேர் இணங்கா விட்டால், நங்கையானவள் நம்பியைப் பின்பற்றி அவன் ஊருக்குச் செல்கிருள். இதனைக் ''களவியல்'' என்கிருர் தொல்காப்பியர்.

## ஐந்திணை நெறிப்படித்தான் நாம் வாழ்கிருேமா?

தமிழ் வழங்கும் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்து, ஒவ்வொரு நிலத்தோடும் காதலர்களைத் தொடர்பு படுத்துகிருர் தொல்காப்பியர். குறிஞ்சியிலே கூடல், மருதத்திலேஊடல்

முல்லையிலே இருத்தல், நெய்தலிலே இரங்கல், பாலையிலே பிரிவு என்று கூறுகின்றார்.

இப்பொழுது தொல்காப்பியர் கூறுகிறபடிதானா நாம் வாழ்க்கை நடத்துகிறோம்? நிலத்திற்கொரு நெறியையா கடைப்பிடிக்கிறோம்? காதலர்கள் மலைப்பிரதேசத்தில்தானா சந்திக்கிறார்கள்? வயல் பிரதேசத்தில் சந்திப்பு நிகழ்வதில்லையா? ஊடல் மருதத்தில் மட்டுந்தானா நிகழ்கிறது? நெய்தல் எனப்படும் கடற்கரைப் பிரதேசத்தில் நிகழ்வதில்லையா? இன்று மக்களின் வாழ்க்கையிலே கூடல் — ஊடல் — இருத்தல் — இரங்கல் ஆகியவெல்லாம் ஒரு நிலத்திலேயே நிகழ்கின்றனவே! தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் காட்டும் ஐந்திணை ஒழுக்கமானது அவர் காலத்திலேனும் நம் தமிழர் வாழ்க்கையில் இருந்திருக்குமா?

## நடப்பு அல்ல; நாடக வழக்கே!

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வரும் களவியலானது வெறும் நாடக வழக்குதான்; நாட்டின் நடப்பு அல்ல. இது, என் உறுதியான கருத்து. ஆனால், உலக வழக்கும் சிறிதளவு அதில் கலந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. இதனை, தொல்காப்பியரே சூசகமாகச் சொல்லி வைத்திருக்கின்றார்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர்**

இது, அகத்திணையியல் சூத்திரம். 'இந்தச் சூத்திரத்திலே, அகத்திணை இயலில் சொல்லப்படுபவையெல்லாம்

நாடக வழக்காகவும், உலகியல் வழக்காகவும், செய்யுள் வகையிலான நூல் வழக்காகவும் கொள்ளப்பட வேண்டிய வையாகும்' என்கிறார் தொல்காப்பியர். இதனை நினைவில் கொண்டு, களவியலைப் பெரும்பாலும் நாடக வழக்காகக் கொள்வோமாக!

களவியலிலும் கற்பியலிலும் தலைவனுடையவும் தலைவியினுடையவும் காதல் வாழ்க்கையைக் காட்சிப் படுத்திக் காட்டுகின்றார் ஆசிரியர். அந்தக் காட்சிகளை நாடகத்திற்குரிய உறுப்புகளாகக் கொள்ளலாம்.

திருவள்ளுவரும், அகப் பொருள் இலக்கணம் கூறும் செய்திகளையும், அதன் வழிப்பட்ட இலக்கியங்கள் காட்டும் காட்சிகளையும் வெறும் நாடக வழக்காகத்தான் கருதினார். அறத்துப்பாலையும் பொருட்பாலையும் உபதேச ரீதியில் படைத்த வள்ளுவர், காமத்துப் பாலை மட்டும் தலைவன், தலைவி, தோழி ஆகிய பாத்திரங்கள் பேசும் பாவனையில் படைத்து, தாம் ஒதுங்கிக் கொள்கின்றார். ஆம்; காமத்துப் பாலிலே ஆசிரியர் குரலைக் கேட்க முடிய வில்லை. அது ஒரு நாடகம் போல் அமைந்துள்ளது.

## ஐந்திணை ஒழுக்கம் தேவைப்படுவதேன்?

நாடகம் என்பது நாடு—அகம் என்னும் இரு சொற் கொண்ட வாசகம் ஆகும். நாடு முழுவதையும் தன் னகத்தே காட்டுவதால் "நாடகம்" எனப் பெயர் வந்தது போலும்! தலைவனையும் தலைவியையும் ஐவகை நிலங்களி லும் உலாவ விட்டு நாடகம் படைப்பதற்கு ஐந்திணை ஒழுக்கம் தேவைப்படுகிறது. உலக வழக்கைத் தழுவி கற்பனைகளையும் கலந்து நாடகம் படைக்கின்றனர் ஆசிரி யர்கள். அதனை நடிக்கின்றனர் கலைஞர்கள். நாம் இன்று நாடகத்தில் காண்பவையெல்லாமே கற்பனையல்ல. அது போல, நாடகக் காட்சி ஒவ்வொன்றுமே உலக வழக்கு

என்றும் சொல்வதற்கில்லை. உலக வழக்கும் கற்பனையும் கலந்ததுதான் நாடகம்.

இராமாயணமும் மகாபாரதமும் நாடகப் பாங்கில் அமைந்த காப்பியங்களேயாகும். அவை, குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரத நாடு முழுவதையும் களமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. தமிழிலுள்ள நாடகக் காப்பியமான சிலப்பதிகாரமும் குமரி முதல் இமயம் வரையுள்ள நிலப்பரப்பு முழுவதையும் களமாகக் கொண்டுள்ளது.

நிலத்தை ஐவகையாகப் பிரித்துக் காட்டி, அந்த ஐவகை நிலத்திலேயும் தலைவனையும் தலைவியையும் நடக்க வைத்து, ஒவ்வொரு நிலத்திலுள்ள மக்களின் வாழ்க்கை நெறிகளை நாடகாசிரியர்கள் காட்சிப்படுத்துகின்றனர். இதற்காகவே, தலைவனும் தலைவியும் குறிஞ்சியிலே கூடி, மருதத்திலே ஊடி, பாலையிலே பிரியும் வகையில் அகத் திணை ஒழுக்கத்தை அமைத்துள்ளார் தொல்காப்பியர்.

## பாம்பன் சுவாமிகளின் மறுப்பும் எதிர்ப்பும்

பொருளதிகாரத்திலுள்ள களவியற் பகுதி புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்திருக்கிறது. ஒருவனுக்கும் ஒருத்திக்குமான இல்வாழ்க்கையானது களவியலில் தொடங்கி, கற்பியலில் இணையும் என்பது தொல்காப்பியர் காட்டும் நெறி.

"இந்த விதிக்கு விலக்காக ஒரோவழி கற்பியலில் தொடங்குவதும் உண்டு" என்கிறார், தொல்காப்பிய உரை யாசிரியர் நச்சினார்க்கினியர்.

"களவியல்" என்பதற்கு விளக்கம் கூறுமிடத்து, "கொடுப்பாரும் அடுப்பாருமின்றி ஒரு நம்பியும் ஒரு நங்கை

யும் தங்களுக்குள்ளாகவே மணம் முடித்துக் கொள்வது'' என்றும் அவர் கூறுகிறார்.

பாம்பன் சுவாமிகள் என்றழைக்கப்படும் குமரகுரு தாசர், ''ஒருத்தியும் ஒருத்தனும் மனம் ஒத்து வாழ்க்கை தொடங்குவதானால், அதனைக் 'களவு' எனக் கதைப்பானேன்?'' என்று சினத்துடன் கேட்கின்றார். தொல்காப்பியர் சொன்ன அகத்திணை நெறிப்படித்தான் முருகப் பெருமானுக்கு இரண்டு மனைவியரை (களவியலுக்கு வள்ளியையும் கற்பியலுக்கு தெய்வயானையையும்) கற்பித்தனர் என்றும் குமரகுருதாசர் புலவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறார்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில்தான் களவியலையும் கற்பியலையும் கூறினார் தொல்காப்பியர். அப்படியிருக்க, முருகனுக்கு இருவேறு மனைவியரைப் படைத்து, வள்ளி நாயகியைக் களவியல்படிக் கடத்திச் சென்றதாகக் கூறுவது தொல்காப்பிய நெறிக்கும் பொருந்தாதுதான். தொல்காப்பியர் கூறும் ஐந்திணை ஒழுக்கம் அவரது கட்டுக் கதைதான் என்று 'செவியறிவுறூஉ' என்னும் நூலில் பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். இல்வாழ்க்கையை ஒழுக்க நெறியில் நிறுத்தும் திருக்குறளில்கூட, தொல்காப்பியரைப் பின்பற்றி களவியலுக்கே முதன்மை தரப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கற்பியலினும் களவியலுக்கே மிகுதியான சூத்திரங்களைப் படைத்துள்ளார். வள்ளுவரும் களவியலுக்கே மிகுதியான குறட்பாக்களைப் படைத்துள்ளார்.

## கண்ணகியும் கோவலனும் களவியற் காதலரா?

இளங்கோவடிகள் களவியலைக் கூறுவதில் தொல்காப்பியரிடமிருந்து சிறிது வேறுபடுகிறார் என்றே சொல்ல வேண்டும். சிலப்பதிகாரக் காப்பியத்தின் நாயகியான

கண்ணகியும் அவள் நாயகனுன கோவலனும் களவியல் நெறிப்படி காதலரானவர்களல்லர். கற்பியல் நெறிப்படி மணவறையில்தான் முதன் முதலில் . சந்திக்கின்றனர். இந்த மாறுதலுக்கு இளங்கோவடிகள் வெளிப்படையாகக் காரணமெதுவும் கூறவில்லை.

இதுபற்றி ஆராய்ந்த பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியாரும், டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரும், "கண்ணகியும் கோவலனும் களவியல் நெறிப்படி ஒருவரை யொருவர் காதலித்த பின்னரே கற்பியலைக் கடைப்பிடித்து மணவறை புகுந்தனர்" என்று கூறுகின்றனர். இதற்கு, கண்ணகியை அறிமுகப் படுத்தும்போது 'பெருங்குணத்துக் காதலாள்' என்று இளங்கோ கூறுகிருரே, அதைச் சான்று காட்டுகின்றனர்.

இளங்கோவடிகள் முத்தமிழை முழுதுணர்ந்த முனிவர். அப்படிப்பட்டவர் தொல்காப்பியர் போதித்த களவியலைப் புறக்கணித்து காப்பியம் படைத்திருப்பாரா? என்று பாரதியாருக்கும் தெ. பொ. மீக்கும் ஐயம் எழுந் திருக்கிறது. அந்த ஐயத்திலிருந்து பிறந்ததுதான் "பெருங் குணத்துக் காதலாள்" என்ற ஒரு வாசகத்திற்கு அவர்கள் கொள்ளும் பொருள். நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர், "கண்ணகி —கோவலன்" என்ற தமது நூலிலே, கண்ணகிக்கும் கோவலனுக்கு மிடையே மெய்யுறு புணர்ச்சிகூட திருமணத் திற்கு முன்பே களவியல் ஒழுக்கப்படி ஏற்பட்டு விட்ட தாகக் கற்பனை செய்துள்ளார்.

## களவியலோடு 'கரணமு'ம் உண்டு!

கண்ணகியின் வாழ்க்கையிலும் களவியல் உண்டு என்பதை ஏற்க என் மனம் தயங்குகிறது. களவியல் நெறிப்படி கண்ணகியும் கோவலனும் ஒருவரை ஒருவர்

காதலித்ததாக இளங்கோவடிகள் கூறுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

காலத்தால் இளங்கோவடிகளுக்கு முற்பட்டவரான தொல்காப்பியர், தம் காலத்திலிருந்த அகப்பொருள் இலக்கியங்கள் வழி களவியலைக் கூறியிருப்பினும், அந்த இலக்கியங்களிலேயே களவியலில் புகாமல் கற்பியல் நெறிப்படி வாழ்க்கை தொடங்கிய காதலர்களையும் அவர் கண்டிருக்கிறார். இதனை,

> ''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

என்ற சூத்திரத்தில் கூறுகின்றார். கற்பியல் நெறிப்படித் திருமணம் நிகழ்வதையே 'கரணம்' என்று தொல்காப்பியர் கூறுகின்றார். தொல்காப்பியர் கூறும் இந்த மாறுதலின் வழித்தான் கண்ணகியையும் கோவலனையும் களவியலில் புகாத காதலர்களாக முதன் முதலாக மணவறையில் இளங்கோ சந்திக்க வைக்கிறார். அது ஆரியர் கற்பித்தபடி நடந்த திருமணம் என்றும், சிலப்பதிகாரத்தின் மூலம் தான் அது தமிழர் வாழ்வில் புகுகிறது என்றும் புலவர்களிலே சிலர் கூறுகின்றனர். இது ஏற்கத் தக்கதன்று. கண்ணகி—கோவலன் திருமணம் தமிழருடைய தொன்மையான பழக்க வழக்கத்தையொட்டி நிகழ்ந்ததாகும்.

## இளங்கோவடிகள் களவியலை விலக்கினர்!

இளங்கோவடிகள் கண்ணகியைக் கொண்டு களவியலைக் கூறவில்லையென்றாலும், களவியல் ஒழுக்கத்தைக் கூறுகின்றார், 'கானல் வரி'யிலே! ஆம்; பத்தினியாகிய கண்ணகியைக் கொண்டு கூறியிருக்க வேண்டிய களவியலைப் பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியைக் கொண்டு கூறியிருக்

கிறார். இந்த மாறுதல் நினைவிற் கொள்ளத் தக்க தாகும்.

தொல்காப்பியர், குல மகளுக்கே—வாழ்க்கையின் தொடக்கத்திலேயே—களவியலைக் கூறியிருக்க, இளங்கோ வடிகள் பழைய காதலர்களான கோவலனையும் மாதவியை யும் கொண்டு கானல் வரியில் அதனைக் கூறுகின்றார். அதுவும் அவர்களுடைய பிரிவிற்குக் காரணமாகிவிடுகிறது. இதனால், தொல்காப்பியம் குலமகளுக்குக் கூறும் களவியல் வாழ்க்கையை இளங்கோவடிகள் அவ்வளவாக விரும்ப வில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

குன்றக் குரவையிலே "பிழை மணம் விடுக" என்றும், "நன் மணம் புரிக" என்றும் குறிஞ்சி நிலத் தலைவியான வள் தான் காதலித்த தலைவனை வேண்டுகின்றாள். "பிழை மணம்" என்பது மெய்யுறு புணர்ச்சியோடு கூடிய களவு என்ற பொருளிலும், "நன் மணம்" என்பது உள்ளப் புணர்ச்சியளவிலே நிற்கின்ற காதல் என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்திணை ஒழுக்கத்திற்கு 400 துறைகளைக் காட்டு கின்றார் 'திருக்கோவையார்' ஆசிரியர். அவற்றுள் ஒன்று "பிரிவு". "உடன் போக்கு" என்றும் ஒரு பிரிவு சொல்லப் படுகிறது. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காத லித்து, "உனக்கு நான்; எனக்கு நீ" என்று களவியல் நெறிப்படி உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர், தலைவியின் பெற்றோர் அதனை ஏற்க மறுப்பாராயின், தான் காதலித்த தலைவனுடன் அவன் ஊருக்குத் தலைவி செல்வதே "உடன் போக்கா"ம்! தானே உடன்பட்டுத் தலைவன் பின்னே தலைவி செல்கிறாளாம். அதாவது, தலைவி விருப்பத்திற்கு மாறாக தலைவன் அவளைக் கடத்திச் செல்லவில்லையாம். "உடன் போக்கு" என்னும் சொல் தலைவியின் ஒழுக்கத்திற்குக் காப்பாக அமைகின்றது.

**உடன் போக்கு!**

செல்வக் குடியில் பிறந்த தலைவியானவள் தான் காதலித்த தலைவனுடன் பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்வாளானால், அது "உடன் போக்கு" ஆகிறது. இன்றுங்கூட, உயர் கல்வி கற்ற ஒரு பட்டதாரிப் பெண்ணும் பட்டதாரி ஆணும் ஒருவரை ஒருவர் காதலித்து அந்தக் காதலுக்குப் பெற்றோர் தடையாக இருந்தால், "உடன் போக்கு" நிகழ்கிறது. அது "காதல்" என்ற மாற்றுப் பெயரும் பெறுகிறது. ஆனால், எளிய குடியில் பிறந்த ஒருத்தி, தனது நிலையிலே உள்ள ஒருத்தனுடன் பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்வாளானால், அதனை "உடன் போக்கு" என்று சொல்கிறோம்? இல்லை. அதனை, காதல் என்று சொல்கிறோம்? அப்படியுமில்லை. 'இன்னான் இன்னாளை இசுத்துக் கொண்டு ஓடிவிட்டான்' என்று சொல்லி ஏளனம் செய்கிறோம். ஏழைக் காதலர் விஷயத்தில் தொல்காப்பியர் படைத்த இலக்கணமும் கைகொடுக்காது போலும்!

# 'சிற்றின்பம்' என்பது சரிதானா?

தொல்காப்பியர், அறம்— பொருள் — இன்பம் ஆகிய மூன்று நெறிகளையும் கூறியிருப்பதோடு, நான்காவதான 'வீடு' பற்றியும் குறிப்பாகச் சொல்லியுள்ளார். இதனை தர்மம்—அர்த்தம்—காமம்—மோட்சம் என்பர் வட நூலார். நான்காவதான 'வீடு' பேற்றிற்கெனத் தனியாக நூல் படைப்பதில்லை யென்பர் பரிமேலழகர். 'துறவு' என்னும் காரண வகையாற் கூறுவதே தொல்காப்பியர் தொடங்கி வைத்த வழக்கு.

அறம்—பொருள்—இன்பம் ஆகிய மூன்றினையும் முறையாகக் கடைப்பிடித்து வாழும் இல்லறத்தாரே பின்னர்த் துறவறம் பூண்டு வீடு பேற்றினைப் பெறுவர் என்பது தமிழர் நம்பிக்கை. காமம் எனப்படும் பெண்ணொடு கூடிய இன்பத்தினை வெறுப்பதே துறவு என்பது பிற்கால வழக்காகிவிட்டது. தொல்காப்பியர் காலத்தில் இந்த நிலை இருக்கவில்லை.

## வேத காலத்தவர் பெண்ணை வெறுத்ததில்லை!

வடபுலத்தில்கூட, பெண்ணை வெறுத்தால்தான்—துறந்தால்தான்—வீடு பேற்றினைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை பிற்காலத்தில் பிறந்ததுதான். வேத காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அக்காலத்தில் "துறவு" என்பது மனைவியோடு கூடிய ஆசிரம வாழ்க்கையாகத் தான் கருதப்பட்டிருக்கிறது. அதனை, "வானப்ரஸ்தம்"

என்பர் வட மொழி நூலார். 'ஆசிரம வாழ்க்கையிலே மனைவியோடு மெய்யுறு புணர்ச்சி உண்டா?' என்ற வினு எழுகிறது. "உண்டு" என்று விடையளிக்கிறது வான்மீகி ராமாயணம்.

கௌதம முனிவர் தமது பத்தினியாகிய அகலிகையுடன் ஆசிரம வாழ்க்கை—அதாவது, வானப்ரஸ்த வாழ்க்கை நடத்தியபோது, அம் முனிவரைப் போன்று உருவங்கொண்டு, இந்திரன் அகலிகையைக் கற்பழித்தான் என்று வான்மீகி ராமாயணம் கூறுகின்றது. இதனுல், ஆசிரம (வானப்ரஸ்த) வாழ்க்கையானது "உடலின்பம்" துயப்பதற்கு எதிரானதல்ல என்று அறிய முடிகிறது.

சமணமும் பௌத்தமும் தோன்றிய பின்னரே—அவர்களிடமிருந்தே—பெண்ணை வெறுக்கும் துறவு நிலையை வேத மதத்தார் ஏற்றிருக்க வேண்டும். அவர்கள் மூலமாகவே அது தமிழர் வாழ்விலும் புகுந்திருக்க வேண்டும். வள்ளுவர் "துறவு" கூறினுரென்ருலும், பெண்ணை வெறுப்பது என்ற பொருளில் கூறவில்லை.

## இன்பத்தின் வளர்ச்சியே பேரின்ப வாழ்வு!

புருஷார்த்தம் நான்கில் மூன்ருவதான இன்பத்தைச் "சிற்றின்பம்" என்றனர் பிற்காலச் சமயவாதிகள். இது தொல்காப்பியர் கருத்தன்று. நான்காவது பேரின்பம் என்று பெயர் பெற்றதனுலேயே அதற்கு முன்னுள்ளதைச் சிற்றின்பம் என்றனர் போலும்! பேரின்பத்தின் தொடக்க நிலைதான் "இன்பம்" என்ருல், அதாவது, இன்பத்தின் வளர்ச்சிதான் பேரின்பம் என்ருல், அந்த இன்பத்தைச் சிற்றின்பம் என்று எப்படிச் சொல்ல முடியும்? பெண்ணின்பத்தை வெறுக்க வேண்டும் என்பதற்காகவே அதனைச் சிற்றின்பம் எனத் தாழ்த்திக் கூறினர் போலும்!

"இன்பம்" என்று சொல்லுகின்றபோது ஒருவனும் ஒருத்தியும் பள்ளியறையில் துய்க்கும் உடலின்பத்தை மட்டுமே நான் குறிப்பிடவில்லை. உடலின்பத்தையும் தன்னுட்கொண்ட இல்வாழ்க்கையையே கூறுகின்றேன் இளங்கோவடிகளும்,

> "அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்து எதிர் கோடலும்"
>
> (சிலம்பு 15 : 71-73)

என்ற வரிகளில் கண்ணகி வாயிலாக இல்லறத்தின் சிறந்த அம்சங்களை கூறுகின்றார்.

## கண்ணகி, 'வீடு' பெறவில்லை!

அறம்—பொருள்—இன்பம் ஆகிய மூன்றையும் முறையே கடைப்பிடிக்காத எவரும் நான்காவதான பேரின்ப வாழ்வைப் பெற முடியாதென்பது தொல்காப்பியத்தின் துணிவாகும். வள்ளுவரும் இளங்கோவடிகளும் இதையே வலியுறுத்துகின்றனர். சிலம்பிலே, கண்ணகி அறத்தோடும் பொருளோடும் கூடிய இன்ப வாழ்க்கையை முறையாகத் துய்க்காதவள். இதனை, அவளே கொலைக்களக் காதையில் கூறுகின்றாள். கண்ணகி பேரின்ப வீட்டைப் பெற்றதாக எனக்கு முன் பேசிய பேராசிரியர் ஒருவர் கூறினார். நான் அப்படி நினைக்கவில்லை. கண்ணகி பெற்றது வீரர்களுக்குரிய சொர்க்கந்தான். 'வீடு' என்பது மீண்டும் பிறவா நிலையாகும். அது, ஐம்புலன்களையும் வென்ற மெஞ்ஞானியர்க்கே உரியதாகும். கண்ணகி, கோவலன், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய மூவருமே சொர்க்கம் புகுந்தனர்.

"அமரர்க்கரசன் தமரான தேவர்கள் செங்குன்றம் வந்து, கண்ணகியின் காதற் கொழுநனை கோவலனை

அவளுக்குக் காட்ட, அவனொடுங்கூடி அவள் சொர்க்கம் புகுந்தாள்'' என்கிறது சிலம்பு. இதனால், கண்ணகிக்கு முன்பே கோவலன் சொர்க்கம் புகுந்தது புலனாகிறது. வாழ்த்துக் காதையிலே,

''தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினன் நான்அவன் தன்மகள்''

என்று கண்ணகி கூறுவதால், பாண்டியனும் சொர்க்கம் புகுந்தான் என்பது புலனாகிறது.

கண்ணகியோ, கோவலனோ, பாண்டியனோ ஐம்புலன் களையும் வென்ற ஞானியரல்லர். அவர்கள் பேரின்ப வாழ்வைப் பெறுவது, தொல்காப்பியர் கூறும் வாழ்க்கை நெறிப்படியும் இயலாததாகும். இதனாற்றான், மணி மேகலைக் காப்பியத்தில், மீண்டும் பிறப்பும் இறப்பும் தனக்கு உண்டென்று கண்ணகியே தன்மகள் மணிமேகலை யிடம் சொன்னதாகச் சாத்தனார் கூறுகின்றார்.

இவ்வளவும் நான் இங்குக் கூறுவது, தொல்காப்பியர் கூறும் வாழ்க்கை நெறிப்படி அறத்தோடும் பொருளோடும் கூடிய இல்வாழ்க்கை இன்பமானது சிற்றின்பம் அல்ல என்பதையும், அது பேரின்பம் (வீடு) பெறுவதற்குத் தடை யாகாது என்பதனையும் உணர்த்தத்தான். ஆகவே, புருஷார்த்தங்களில் மூன்றாவதான இன்பத்தைச் சிற்றின்பம் என்று இழி பொருளில் கூறுவதனைப் புலவர் பெருமக்கள் இனியேனும் விட்டுவிடவேண்டும்.

## இளங்கோ செய்த மாறுதல்

இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் வழி தோன்றிய இலக்கியந்தான் சிலப்பதிகாரம். ஆனால், தொல்காப்பியத்திலுள்ள சில குறைகளை நிறைவு செய் கிறார் சிலப்பதிகார ஆசிரியர். சான்றாக, ஒன்றைக் காட்டு

கின்றேன். தொல்காப்பியர், முல்லை-குறிஞ்சி—மருதம்—நெய்தல் என்ற நால்வகை நிலத்திற்கும் தெய்வங்களைக் கூறினார். இதனை,

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்ற சூத்திரத்தால் அறிகிறோம். இதிலே, காடும் காடு சார்ந்த நிலத்திற்குத் திருமாலையும், மலையும் மலை சார்ந்த நிலத்திற்கு முருகனையும், வயலும் வயல் சார்ந்த நிலத்திற்கு இந்திரனையும், கடலும் கடல் சார்ந்த நிலத்திற்கு வருணனையும் தெய்வங்களாகக் கூறுகின்றார்.

பாலையையும் ஐந்திணை ஒழுக்கத்தோடு இணைத்துக் கூறுகிறார் என்றாலும், அதற்கு நிலமும் தெய்வமும் கூறவில்லை. இந்த வெற்றிடத்தை நிரப்புவார் போல, இளங்கோவடிகள்,

> "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"

(சிலம்பு. 11 : 14- 15).

என்னும் வரிகளிலே பாலைக்கும் ஒருவாறு நிலம் கூறினார். அத்துடன், வேட்டுவ வரியிலே கொற்றவை வழிபாட்டைக் காட்டித் தெய்வமும் கூறினார். இப்படி, இன்னும் பல வெற்றிடங்களை இட்டு நிரப்புகிறார் இளங்கோவடிகள்.

தொல்காப்பியருக்குப் பிற்காலத்திலும் பொருளிலக்கணத்தை வளர்த்துள்ளனர் புலவர்கள். அவர்களில் தலை சிறந்தவர் இளங்கோவடிகள். தொல்காப்பியர் வழியிலிருந்து சிறிது விலகிச் செல்லுமிடங்களையும் சிலம்பிலே காண்கின்றோம். அவற்றுள் ஒன்றைமட்டும் இங்கு கூறுகின்றேன்,

## கோவலன் செய்த தவறு

தொல்காப்பியர், தலைவன்—தலைவியரிடையிலான மூன்று பிரிவுகளைக் கூறுகின்றார். ஒன்று, ஓதற் (கல்வி) பிரிவு. இன்னொன்று, தூதிற் பிரிவு; மற்றொன்று, பொருள் பற்றிய பிரிவு. இவற்றுள் மூன்றாவதான பிரிவு வணிகர்க்கே சிறப்பாக உரித்தென்கிறார்.

இந்த மூன்று பிரிவுகளிலும் தலைவன் தலைவியை அழைத்துச் செல்வது தமிழர் மரபன்று என்பது தொல்காப்பியர் கருத்து. இதனை,

> "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"

என்ற சூத்திரத்தில் காண்கின்றோம்.

சிலம்பில் வரும் கோவலன், பிறப்பால் வணிகன். அவன் புகாரை விட்டுச் சிலம்பு விற்க மதுரை செல்வது பொருள் தேடச் செல்லும் பிரிவாகும். இந்தப் பிரிவிலே அவன் தன்னுடன் மனைவியை அழைத்துச் செல்வதற்கில்லை. இதற்கு மாறாக,

> "சிலம்பு முதலாகச் சென்ற கலனொடு
> உலந்தபொருள் ஈட்டுதல் உற்றேன்; மலர்ந்தசீர்
> மாட மதுரை அகத்துச் சென்று என்னொடிங்கு
> ஏடலர் கோதாய் எழுக..."

என்று கூறி, கண்ணகியையும் தன்னோடு அழைத்துச் செல்கிறான். இது தொல்காப்பியர் கூறும் மரபு ஆகாது. இதனை, மதுரையில் ஆயர் குல மாதரி இல்லத்தில் கண்ணகியை விட்டுப் பிரியும்போது,

> "வழுஎனும் பாரேன் மாநகர் மருங்கு ஈண்டு
> எழுகஎன எழுந்தாய் என்செய் தனை?"

என்று கோவலனே கூறுவதால் அறிகிறோம். "வழு"—அதாவது, "பொருள் தேடும் பிரிவில் மனைவியை அழைத்துச் செல்வது தமிழர் மரபன்று" என்பதனை

மனத்தில் கொள்ளாமல், "என்னுடன் வா" என்று நான் அழைத்தபோது, நீயேனும் 'இது மரபன்று' என்று கூறி என்னுடன் வர மறுத்திருக்கக் கூடாதா?" என்கிருன் கோவலன்.

## புதுவகை உடன்போக்கு!

தொல்காப்பிய அகத்திணையியலில் கூறப்படும் தலைவன், மனைவியுடன் கூடி வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் பொருள்தேடும் முயற்சி காரணமாகப் பிரிகிருன். கோவலன் நிலை அதுவன்று. அவன் மனைவியுடன் வாழத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே அவளை விட்டுப் பிரிந்தவன். மாதவியுடன் பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டுத் திரும்பி வந்தான். வந்த அன்றே அவன் திரும்பவும் தலைவியை விட்டுப் பிரிவது சாத்தியமில்லை. அதனுற்றுன், தொல்காப்பியர் கூறும் வாழ்க்கை இலக்கணத்திற்குப் புறம்பாக, தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு மதுரை சென்றுன். கண்ணகியும், தன் பெற்றோரும் மாமன் மாமியும் அறியாதபடி தலைவனைப் பின்பற்றி இரவோடு இரவாக நாடு விட்டு நாடு சென்ருள். இது ஒரு புதுவகை "உடன் போக்கு" எனலாம்! இதற்கு வேறு பெயர் கொடுக்க தொல்காப்பியம் எனக்குக் கை கொடுக்கவில்லையே!

## சூர்ப்பணகையின் காதல் கைக்கிளையா, பெருந்திணையா?

கம்ப ராமாயணம் வான்மீகி ராமாயணத்திற்கு வழி நூல்தான் என்ருலும், காப்பிய நாயகனையும் நாயகியை யும் தொல்காப்பியர் காட்டிய நெறிப்படி களவியல்காதலர் களாக மாற்றிக் காட்டக் கம்பர் முயன்றிருக்கிருர். தமிழுக் கேவுரிய ஐந்திணை ஒழுக்கத்தை வட மொழியாளர் கடைப்

பிடிக்காதவராதலால், வான்மீகி ராமாயணத்திலே இராமனும் சீதையும் முதன் முறையாக மணவறையில் தான் சந்திக்கின்றர்.

தொல்காப்பியர் காட்டிய ஐந்திணை ஒழுக்கத்தைத் தமிழுலகில் நிலைக்கச் செய்ய விரும்பிய கம்பர், திருமணத்திற்கு முன்பே இராமனையும் சீதையையும் பார்வையளவில் சந்திக்கவைத்து,

**"அண்ணலும் நோக்கினுன் அவளும் நோக்கினுள்"**

**என்றும்,**

**"இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்"**

**என்றும்,**

**"ஒருங்கிய இரண்டுடற்கு உயிர் ஒன்று ஆயினர்"**

**என்றும்** கூறியுள்ளார்.

இராமனும் சீதையும் உடற்புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சி மட்டுமே கொண்டவர்களாகி, ஐந்திணை ஒழுக்கத்திற்கு உட்படுகின்றனர். கம்பர் விரும்பியிருந்தால், இராமனையும் சீதையையும் உடற்புணர்ச்சியையும் அனுபவித்த களவியற் காதலர்களாகக் காட்டியிருக்கலாம். அவர் அந்த ஒழுக்கத்தை விரும்பாததனுற்றுன், பொய்யும் வழுவும் புகுந்த பின்னர் ஐயர் யாத்த கரணமே தமிழர் வாழ்க்கைக்கு உரிய தென்று கருதி கரணத்தின் வழிநிகழும் திருமணத்திற்குப் பின்னரே மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்த தாகக் கூறுமல் கூறியுள்ளார்.

சிலம்பு தந்த இளங்கோவைப் போலக் கம்பரும் மெய்யுறு புணர்ச்சியோடு கூடிய களவியலை உலகியல் வழக்காக அல்லாமல் நாடக வழக்காகவே கருதியிருக்க வேண்டும். அதனுற்றுன், கற்பனைப் பாத்திரங்களாக அல்லாமல் இயற் பெயரால் அறிமுகப்படுத்தப்படும் இராம காதையின் தலைவனையும் தலைவியையும் க்ளவியலைச்

சிறிதளவே தழுவிய கற்பியல் காதலர்களாகக் காட்டியுள்ளார்.

கம்ப ராமாயணத்துள், காப்பியத் தலைவனும் இராமனை வில்லன் நிலையில் படைக்கப்பட்டுள்ள இராவணனின் தங்கையான சூர்ப்பணகை வலுவில் சென்று காதலிக்கிறாள். சூர்ப்பணகைப் படலத்தில் வான்மீகியிடமிருந்து பெருமளவுக்கு வேறுபடுகிறார் கம்பர். சூர்ப்பணகை இராமனைக் காதலிப்பதும், அவன் அவளுடன் சிறிதுநேரம் கேலியாக உரையாடுவதும் தன்னை மறந்து தன் தம்பியைக் காதல் புரியுமாறு இராமன் கைகாட்டி விடுவதும், பின் சூர்ப்பணகை இலக்குமணனை அணுக, அவன் இராமனைக் கை காட்டி விடுவதும் வான்மீகியில் வரும் நிகழ்ச்சிகள். இந்தக் காதல்கட்டமானது தொல்காப்பியர் கூறும் ஏழு திணைக்குள் எந்த ஒரு திணைக்கும் பொருந்தாததாக அமைந்துள்ளது.

தொல்காப்பியத்திலே புலமை பெற்ற கம்ப நாடர், இராமனைச் சூர்ப்பணகை வலுவில் சென்று காதலிப்பதனை "கைக்கிளை" எனப்படும் ஒருதலைக் காமத்துக் குட்பட்ட நிலையில் நிறுத்த முயல்கிறார். இந்நாளைய புலவர்களும் இராமனைச் சூர்ப்பணகை காதலிக்கும் நிலையைக் "கைக்கிளை" என்றே கருதுகின்றனர். நான் அப்படிக் கருதவில்லை.

பொருந்தாக் காமம் என்னும் பொருளுக்குரிய பெருந்திணை என்று கூறலாமென்றால், அதற்கும் பொருந்துவதாக இல்லை அரக்கமகளாகிய சூர்ப்பணகையின் போக்கு. கைக்கிளையும் சரி! பெருந்திணையும் சரி; ஒருத்திக்கு ஒருவன் என்ற பெண் கற்புக்கு விலக்கானது என்று தொல்காப்பியர் சொல்லவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களில் எவரும் அப்படிக் கூறவில்லை.

சூர்ப்பணகை கணவனை இழந்தவிதவை. இராமனுக்கு மனைவி இருப்பது தெரிந்தும் அவனை அவள் காதலிக்கிறாள்.

இந்த நிலையிலுள்ள ஒரு தலைவியைத் தொல்காப்பியர் படைத்த அகத்திணையுள் நாம் காண முடியவில்லை.

இராமன் தனக்குக் கிடைக்க மாட்டான் என்று தெரிந்த நிலையிலே தம்பி இலக்குமணனையேனும் தன் காதலனுக்கித் தரும்படி ஜானகி மணாளனை வேண்டுகிறாள் இராவணனின் தங்கை. இந்த பரத்தைப் புத்தியைத் தொல் காப்பியர் தந்த அகத்திணையுள் வரும் தலைவியரில் ஒருவரிடமும் நாம் காண முடியவில்லை. அண்ணனும் கிடைக்க மாட்டான் தம்பியையும் அடைய முடியாது என்பது தெரிந்தவுடன் பழி வாங்கும் போக்கை மேற்கொள்கிறாள் சூர்ப்பணகை. இவ்வளவும் ஒரு தலைவிக்குரிய அகத்திணை ஒழுக்கத்திற்குப் பொருந்தாதவையாகும். அதனாற்றான், இராமனைச் சூர்ப்பணகை காதலிக்கும் நிலையைப் புலவருலகம் கைக்கிளையாகக் கருதுவதை என்னால் ஏற்க முடியவில்லை.

ஏழு திணையுள் முதல் திணையாகவுள்ள கைக்கிளைகூட நடு விடத்திலுள்ள ஐந்திணையாகக் காலப் போக்கில் மாறுவது உண்டு. உரையாசிரியர்களும் இதனை ஒப்புக் கொள்கின்றனர். பெருந்திணைக்குக்கூடத் தலைவன் தலைவி ஆகிய இருவரில் ஒருவரின் பருவ முதிர்ச்சியே காரணமாக உரையாசிரியர்களால் சொல்லப் படுகிறது. கணவனை இழந்த சூர்ப்பணகையும் மனைவியோடு கூடி வாழும் இராமனும் பருவத்தால் அப்படி ஒன்றும் ஏறுமாறானவர்கள் என்று சொல்லி விட முடியாது.

தொல்காப்பியம் அகத்திணையுள் கூறும் எழுதிணையானது மானிடர்க்கே உரியதாகும். சூர்ப்பணகை மானிட குலத்திலிருந்து வேறுபட்ட அசுர குலத்துப் பெண்ணாவாள். ஆகவே, அகத்திணை ஒழுக்கத்திற்குப் புறம்பானவளாகவே அவளைக் கருத வேண்டும். கதையைச் சுவைபடுத்துவதற்காகச் சூர்ப்பணகையின் காதலை கைக்கிளையில் நிறுத்தக்

கம்பர் முயன்றிருக்கிறார். ஆனால், அவர் அதிலே வெற்றி பெறவில்லை.

அகத்திணையியலுள் வரும் மக்கள் நுதலில் என்னுஞ் சூத்திரத்திற்கு விளக்கந்தரும் நச்சினார்க்கினியர், 'மக்கள் நுதலிய என்பதனுலே மக்கள் அல்லாத தேவரும்மா நரகரும் தலைவராகக் கூறப்பட மாட்டார், என்கிறார். சூர்ப்பணகை மக்களினத்தைச் சாராத அசுரர் குலத்த வளாதலால் அவள் இராமனைக் காதலிக்கும் நிலை அகத் திணையோடு பொருந்தாதுதானே!

மானுடவர்க்கத்து ஆணுக்.கும் பெண்ணுக்கு மாகவே படைக்கப்பட்ட ஐந்திணை ஒழுக்கமானது, பெண் இன்பத்தை முற்றும் வெறுத்த துறவியரையும் கவர்ந் துள்ளது. தேவாதி தேவனான இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் கற்பனை செய்து கொண்டு தமிழினத்தில் தோன்றிய துறவியர் பலர் ஐந்திணைக் கேற்றபடி பொருள் இலக்கியங்கள் படைத்துள்ளனர். அவர்களிலே 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங் கரும் 20 ஆம் நூற்றாண்டில், வாழ்ந்த தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரும் தலை சிறந்தவர்களாவார்கள். ஐந்திணை ஒழுக்கத்தோடு, அவற்றிற்குரிய பல்வேறு துறை களையும் பயன்படுத்தி அவர்கள் பாடியுள்ளனர்.

இந்தப் புது முறையானது மாணிக்கவாசகர் படைத்த திருக்கோவையாரை முதல் நூலாகக்கொண்டு தொடங்கி யது என்பர் புலவோர். உண்மையில் சங்க காலத்திற்குப் பின்னர்த் தொல்காப்பியர் கூறும் அகத்திணை நெறிவழிப் பட்ட இலக்கியங்கள் அருகிவிட்டன. ஆன்ம ஞானியர், பரமான்மாவைத் தலைவனாகவும், ஜீவான்மாவைத்தலைவி யாகவும் கற்பனை செய்து பாடிய இலக்கியங்கள் தோன்றி யில்லை யானால், அகத்திணை வழக்கே அழிந்தொழிந்து போயிருக்கலாம்.

# வள்ளற் பெருமான் பாடிய அகப் பாடல்கள்

தொல்காப்பியத்தில் வரும் அகத்திணை காட்டும் நெறியில் நின்று நாயகி - நாயக பாவனையில் பக்தி இலக்கியங்களைப்படைத்துள்ள ஞானியரிலே தலைசிறந்தவராக வள்ளற் பெருமான் விளங்குகிறார். அவர், தம்மை நாயகியாகவும் எல்லாம் வல்ல இறைவனை நாயகனாகவும் கற்பனை செய்து இயற்றியுள்ள அகப் பாடல்கள் திருவருட்பா ஆறுந் திருமுறையில் காணப்படுகின்றன.

## மானிடரைப் பாடாதவர்

வள்ளலார் மானிடரைப் பாடாத கொள்கையுடையவர். இதனை,

"நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப் பாட்டு"

என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறார்.

இந்தக் கொள்கைப்படி, தொல்காப்பியர் படைத்த மக்கள்வழி பட்ட காமங்கலந்த ஐந்திணை யொழுக்கத்தை பரமான்மா மீது ஜீவான்மா கொண்ட பக்திக்குப் பயன் படுத்தி நாயகி—நாயக பாவனையில் எண்ணற்ற பாடல்களை வள்ளலார் புனைந்துள்ளார்.

மக்கள் பற்றி வரும் ஐந்திணை யொழுக்கத்திலே தலைவன், தலைவியுடைய் இயற்பெயர் சொல்லப்படக்

கூடாதென்பது தொல்காப்பியர் வகுத்த விதி. ஆனால், இந்த விதி முத்தொள்ளாயிர ஆசிரியரால் முன்பே மீறப் பட்டுவிட்டது. முத்தொள்ளாயிரப் பாடல்களிலே தமிழ் மூவேந்தர்கள் தலைவர்களாக வருகின்றனர். முத்தொள் ளாயிர ஆசிரியரைப் பின்பற்றி வள்ளற் பெருமானும் உயிர்க்குல மனைத்துக்குந் தலைவரான அம்பலவாணர் மீது காதற் பாடல்களைப் புனைந்துள்ளார்.

## ஞானப் பனுவல்

மணிவாசகர் இயற்றிய திருக்கோவையார் "காமஞ் சான்ற ஞானப்பனுவல்" என்று தமது சிதம்பர மும்மணிக் கோவையுள் குமரகுருபர சுவாமிகள் கூறுகின்றார். இந்தப் பெயர் இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ள ஐந்திணைப் பாடல்களுக்கும் பொருந்துவதாகும்.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றின் வழி வாழ்ந்தவர்க்கே நான்காவதான பேரின்பம் சித்திக்கு மென்பது தமிழ்ச் சான்றோர் கொண்ட நம்பிக்கை, வள்ளற் பெருமான் அறனறிந்து வாழ்ந்த ஆன்றோர் என்றாலும், பொருளையும் இல்லற இன்பத்தையும் பெற்றவ ரென்று சொல்வதற்கில்லை. திருமணமான முதல் இரவி லேயே மனைவியைத் துறந்த வெள்ளாடைத் துறவி. அந்த முதலிரவிலும், உடலின்பந் துய்க்காமல் திருவாசகத்திலே தாம் கலந்ததோடு, தமது மனைவியையும் அதிலே கலக்கு மாறு தூண்டியவர். இந்த வகையில் வள்ளலார் வாழ்க்கை தொல்காப்பியர் கூறும் களவியலுக்கே யன்றிக் கற்பியலுக் கும் விலக்கானதாகும். இப்படிப்பட்டவர்களும் தொல் காப்பியம் கூறும் ஐந்திணை ஒழுக்கத்தின்படி ஆண்டவனைத் தலைவனாகப் பெற்று, உள்ளப் புணர்ச்சியும் உடற்புணர்ச்சி யும் பெற முடியுமென்பதனைத் தத்துவ ரீதியில் வள்ளலார் காட்டுகின்றார். தொல்காப்பியத்துள் வரும் "உள்ளப்

புணர்ச்சி"க்கு "அகப்புணர்ச்சி" என்றும், "உடற் புணர்ச்சி"க்குப் "புறப்புணர்ச்சி" என்றும் மாற்றுப் பெயர் தருகின்றார் வள்ளலார்.

"மக்களுக்கான ஐந்திணை யொழுக்கத்திற்கு முதற் பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் மூன்று பொருண்மைகளும் முறைமையாற் சிறந்தன" என்றார் தொல்காப்பியர். இவற்றுள், முதற் பொருளான நிலத்திற்கு விளக்கந் தந்த நச்சினார்க்கினியர்,

> "இவ்வொழுக்க மெல்லாம் இல்லறம்பற்றிய ஒழுக்க மாதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை"

என்று கூறுகிறார். வள்ளலார் பாடிய நாயகி—நாயக பாவனையிலான ஐந்திணை ஒழுக்கமானது இல்லறத்திற்குப் புறம்பானதாதலால், நச்சினார்க்கினியர் சொல்லும் அறம் முப்பொருளையும் சார்ந்து நிற்கும் நிலையில் இல்லை. பெரும்பாலும் அவற்றிற்கு விலக்காகவே அமைந்துள்ளன.

அருட்பாவிலுள்ள ஐந்திணைப் பாடல்களிலே தலைவன், தலைவி, நற்றாய், செவிலித்தாய், பாங்கி (தோழி) ஆகிய பாத்திரங்களைப் படைத்து நாடக வழக்காகவும் பாடல் சான்ற புலனெறி வழக்காகவும் வள்ளலார் பாடியுள்ளார்.

## அவர் பாடிய துறைகள்

பாங்கிக்கு உரைத்தல், தாய் கூறல், பாங்கி தலைவி பெற்றி யுரைத்தல், தலைவி—தலைவன் சொல்லைத் தாய்க்கு உரைத்தல், தலைவி வருந்தல், நற்றாய் செவிலிக்குக் கூறல், தோழிக்குரிமை கிளத்தல் என ஐந்திணைக்குரிய துறைகளில் சிலவற்றைப் பயன்படுத்தித் தமது காமஞ் சான்ற ஞானப் பனுவலை வள்ளலார் படைத்துள்ளார்,

*தலைவி தோழிக்கு உரைக்கும் துறையிலே,*

"வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்
மேவும் பொதுநடம் நான் காண வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடந்தாயோ தோழி
நடவாம லென்மொழி கடப்பாயோ தோழி"

*என்று பாடுகின்றார்.*

*நற்றாய் கூற்றாக வள்ளலார் பத்துச் செய்யுட்கள் பாடியுள்ளார். அவற்றுள் இரண்டைப் பார்ப்போம்.*

பூமியோ பொருளோ விரும்பிலேன் உன்னைப்
புணர்ந்திட விரும்பினேன் என்றாள்
கமி என்றெனை நீகைவிடேல் காமக்
கருத்தெனக்கு இல்லைகாண் என்றாள்
சாமிநீ வரவு தாழ்ந்திடில் ஐயோ
சற்றுநான் தரித்திடேன் என்றாள்
மாமிகு கருணை வள்ளலே என்றாள்
வரத்தினால் நான் பெற்ற மகளே.
காதல்கைம் மிகுந்தது என்செய்வேன்
எனைநீ கண்டுகொள் கணவனே என்றாள்
ஓதல்உன் புகழே அன்றிநான் ஒன்றும்
உவந்திலேன் உண்மை ஈது என்றாள்
பேதைநான் பிறிதோர் புகலிலேன் செய்த
பிழையெலாம் பொறுத்தருள் என்றாள்.
மாதய வுடைய வள்ளலே யென்றாள்
வரத்தினால் நான் பெற்ற மகளே.

"*பாங்கி தலைவி பெற்றியுரைத்தல்*" என்னும் *துறை பற்றிய 10 பாடல்களிலே ஒன்றை மட்டும் பார்ப்போம் :*

கரவறியா அம்பலத்தென் கணவரைக்கண்டு அலது
கண்துயிலேன் உண்டி கொளேன் களித்தமரேன்
என்பாள்

இரவறியாள் பகலறியாள் எதிர்வருகின் றவரை
இன்னவர்என்று அறியாள் இங்கு இன்னல்உழக் கின்ருள்
வரவுஎதிர் பார்த்து உழல்கின்ருள் இவள் அளவில் உமது
மனக்கருத்தின் வண்ணம்எது வாய்மலர வேண்டும்
விரவும்ஒரு கணமும்இனித் தாழ்க்கில் உயிர் தரியாள்
மெய்ப்பொதுவில் நடம்புரியும் மிகப்பெரிய துரையே.

ஐந்திணை ஒழுக்கத்திலே ஊடல் உண்டு. அகப் பொருளிலே பெரும்பாலும் தலைவியின் ஊடல்தான் மிகுதியாகக் கூறப்படும். தலைவியின்பால் தலைவன் ஊடுவதும் உண்டு. சிலம்பிலே கோவலன் மாதவியின்பால் ஊடினனல்லவா!

## தோழியின் ஊடல்!

வள்ளற் பெருமான், தன்பால் நற்ருயும் தோழியும் ஊடியதாக கூறும் ஒரு தனித் துறையை 24 செய்யுள்களில் பாடியுள்ளார். சான்றுக்கு ஒரு செய்யுளைப் பார்ப்போம்:

இச்சையெலாம் வல்லதுரை யென்னைமணம் புரிந்தார்
ஏடியெனக்கு இணையெவர்கள் என்றவதனலோ
எச்சமயத் தேவரையும் இனிமதிக்க மாட்டேன்
என்று சொன்னேன் இதனலோ எதனலோ அறியேன்
நச்சுமரக் கனிபோலே பாங்கிமனங் கசந்தாள்
நயந்தெடுத்து வளர்த்தவளும் கயந்தெடுப்புப் புகன்ருள்
அச்சமிலாள் இவளென்றே அலர் உரைத்தார் மடவார்
அண்ணல்நட ராயர்திரு எண்ணமறிந் திலனே.

அகப்பொருள் இலக்கணங்கூறும் உள்ளப்புணர்ச்சியையும் உடற் புணர்ச்சியையும் "அனுபவ மாலை" என்னும் தலைப்பின் கீழ் வள்ளலார் கூறுகின்ருர். இது 100 செய்யுட்களைக் கொண்டது. அவற்றுள் அகப் புணர்ச்சியையும் புறப் புணர்ச்சியையும் கூறும் மூன்று செய்யுட்களைப் பார்ப் போம்;

தூங்குகநீ என்கின்ருய் தூங்குவனே எனது
துரைவருமோர் தருணமதில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினுல்
என்னுடைய தூக்கமெலாம் நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தே போய்த் தூங்குகநீ தோழி
என் இருகண் மணிஅனையார் எனைஅணைந்த வுடனே
ஓங்குறவே நான்அவரைக் கலந்து அவரும் நானும்
ஒன்ருன பின்னர்உனை எழுப்புகின்றேன் உவந்தே
புறப்புணர்ச்சி யென்கணவர் புரிந்ததரு ணந்தான்
புத்தமுதம் நானுண்டு பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி அகப்புணர்ச்சி அவர்தாஞ்
செய்ததரு ணச்சுகத்தைச் செப்புவ தெப்படியோ
பிறப்புணர்ச்சி விடயமிலை சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருஞ்சுகந்தான் பெருகியெங்கு நிறைந்தே
மறப்புணர்ச்சி இல்லாதே நான்அதுவாய் அதுஎன்
மயமாய்ச்சின் மயமாய்த்தன் மயமான நிலையே.

## புறப்புணர்ச்சியல்ல!

*வள்ளலார், தலைவி—தலைவன்—தாய்—நற்ருய்—தோழி என்போரைத் தத்துவ ரீதியில் ஆன்மா, பரமான்மா, மனம், மாயை எனக்கொண்டு பேரின்பத்தைப் பாடுகின்ருர்.*

*மேலே தந்துள்ள பாடல்களுள் ஒன்றில் 'புறப்புணர்ச்சி' என்று வள்ளலார் கூறியுள்ளதை எதிர்த்து வைதிகச் சைவர் சிலர் "பகவானுக்கும் பக்தனுக்கு மிடையே புறப்புணர்ச்சியும் உண்டோ?" எனக் கேலி பேசினர். அவர்கள் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ள மெய்யுறு புணர்ச்சியெனக் கொண்டனர். அதே பாடலில், "இது, பிறப்பு உணர்ச்சி விடயமில்லை" என்று பெருமான் கூறியிருப்பதைத*

அவர்கள் நினைவில் கொள்ளவில்லை. "பிறப்பு உணர்ச்சி" என்பதன் பொருள் "பாலுணர்ச்சி" என்பதாகும்.

## புதுவழி!

வள்ளலார் தாம் படைத்த சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்திற்கான பிரசாரப் பாடல்களையும் அகப் பாடல்களாக இயற்றியுள்ளார். ஆம்; நாயகி—நாயக பாவத்திலே சாதி சமயங்களை ஒழிக்க வேண்டுமென்ற கருத்துக்களையும் பாடியுள்ளார். இது, அகப்பொருளுடன் அவர் சேர்த்த புதிய துறை போலும்! 'அத்துறையின் பெயர் என்ன?' என்று கேட்கிறீர்களா? அந்தப் புதிய துறைக்குப் பெயர் வைக்கும் பொறுப்பைப் புலவர்களுக்கே விட்டு விடுகிறேன்.

இன்னொரு புதுமையையும் வள்ளலார் செய்துள்ளார். நாயகி—நாயக பாவத்திலே கீர்த்தனைகளையும் பாடியுள்ளார். இது, அவருக்கு முன் இருந்த புலவர்களில் எவரும் செய்யாத புதுமையென்றே நினைக்கின்றேன்.

# தொல்காப்பியர் வழியில் பாரதி பாடிய அகப்பாடல்கள்

தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார், தமிழ் இலக்கண நூல்களிலே பயிற்சி பெறாதவர் என்று புலவர் பெருமக்களிலே சிலர் சொல்கின்றனர். பாரதியாரின் கவிதைகளை ஆழ்ந்து படித்தவர்கள் இந்தக் கூற்றை ஏற்பதற்கில்லை.

நம் தேசியக் கவிஞர், எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மட்டுமின்றி, பொருள் இலக்கணத்தையும் ஆழ்ந்து பயின்றவர் என்பது அவர் படைத்துள்ள கவிதைகளை அன்புள்ளத்துடன் படிப்பவர்களுக்குப் புலனாகும். குறிப்பாக, கண்ணன் பாட்டைப் படித்தால், தொல்காப்பியர் தந்த அகப்பொருள் இலக்கணத்தில் பாரதியாருக்கு இருந்த ஆழ்ந்த புலமை தெற்றெனப் புலப்படும்.

## ஐயரின் மதிப்புரை

மாணிக்கவாசகரும் வள்ளற்பெருமானும் பாடியுள்ள அப்பொருள் இலக்கியங்களைப் பின்பற்றி, பாரதியாரும் தமது வழிபடு தெய்வமான கண்ணனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்து பல பாடல்களைப் புனைந்துள்ளார். இத்துடன் நில்லாமல், கண்ணனை நாயகியாகவும் தம்மை நாயகனாகவும் பாவித்தும் அகப்பொருள் பாடல்களைப் பாடியுள்ளார். மகரிஷி வ. வே. சு. ஐயர், தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமையுடையவர். மற்றும்,

ஆங்கிலம், சம்ஸ்கிருதம், பாரசிகம், இந்தி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். அந்த பன்மொழிப் புலவர் நம் தேசியப் புலவர் படைத்த "கண்ணன் பாட்டு" என்னும் நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ளார். அதிலே நாயகி—நாயக பாவத்தைப்பற்றி ஐயரவர்கள் கூறியுள்ளதாவது:

"நாயகி-நாயக பாவத்தால் பகவானை வழிபடும் முறை தொன்றுதொட்டு பக்தர்களாலும் கவிகளாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ரோமன் கத்தோலிக்க மதத்திலேகூட அடியார் வர்க்கத்தை நாயகியாகவும் கிறிஸ்துவை நாயகனாகவும் பாவித்து எழுதிய ஸ்தோத்திரங்கள் பல உள.

"நமது பாகவதத்தில் கோபிகைகளின் உபாக்யானங்களெல்லாம் இப்பாவத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளவையே. மகா பக்திமதியான மீராபாய் உலகத்திலுள்ள ஜீவ கோடிகள் அனைத்தும் ஸ்த்ரீப் பிராயம் என்றும் பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்துப் பக்தி செய்திருக்கிறார். பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் தம்முடைய அனுபவங்களுள் நாயகி அனுபவத்தையும் அனுபவிக்க எண்ணி சேலை தரித்துக்கொண்டு, இராதை என்கிற பாவத்தால் கண்ணனை வழிபட்டார் என்று சொல்லப்படுகிறது."

இந்த நாயகி—நாயக பாவமானது தமிழ் மொழிக்கு முற்றிலும் அன்னியமானதல்ல என்பதனை, "திருக்கோவையாரையும் ராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவையும் அனுபவித்த தமிழருக்கு இவ்விதம் வழிபடும் முறை புதிதாகப்படாது," என்ற வாசகத்தில் வ. வே. சு. ஐயர் உணர்த்துகின்றார்.

கண்ணனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்து, 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பில் பாரதியார் பாடியுள்ள காமஞ் சான்ற ஞானப் பாடல் பற்றி வ. வே. சு. ஐயர் கூறுவதாவது:

"இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக் கத்தின்மீது நடப்பது போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது. அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசந்தர்ப்ப மாகிவிடும். ஸ்ரீபாகவதத்திலும் கூட, கோபிகா உபாக்யானங்களில் சுக பகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்து விட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

"ஆண்டாளுடைய பாசுரங்களைப் போலச் செயிரின்றி இப்பாவத்தைப் பாடுவது அநேகமாய் அசாத்தியம்.

"நம் கவியும் இப்பாவத்தை விவரிக்கையில் பரபக்தியை விடச் சாரீரமான காதலையே அதிகமாக வருணித்திருக்கிறார். ஆனால், சுகப்பிரம்மமே நிறுத்த முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லையென்று நாம் குறைகூறலாமா?

"இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்குப் பேரிலக்கியமாகக் கொள்ள வேண்டுவது இல்லை. ஆசிரியர் இந்நூலில் கவி என்கிற ஹோதாவில்தான் நம்மிடம் வருகிறார் என நினைக்க வேண்டும்."

## அறிந்தே செய்த மாறுதல்

வ. வே. சு. ஐயர் பக்தி ரசத்தை விடவும் உடல் சம்பந்தமான காதற் சுவைக்கே பாரதியார் அதிக முக்கியத்துவம் தந்துவிட்டார் என்று குறைபட்டுக்

கொள்வதிலே நியாயம் இருக்கிறது. ஆயினும், அது பாரதியார் அறியாமல் செய்த பிழையல்ல; அறிந்தே கடைப்பிடித்த—தொல்காப்பியம் போதிக்கின்ற அகத் திணை நெறியாகும்.

## கடவுளை நாயகி யாக்கினர்!

பாரதியார், மக்கள் கவி. "பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்று பாடியவர். ஆம்; "சொர்க்கத்தினும் சிறந்தது தாய்நாடு" என்னும் கொள்கையுடையவர். தெய்வங்கள் மீது பல பக்திப் பாடல்களைப் புனைந்துள்ளார் என்றாலும், மானிடர் களைப் பாடும் புதிய மதத்தைத் தொடங்கி வைத்த பெருமை பாரதியாருக்கு உரிமை. அந்த வகையிலே தொல்காப்பியம் படைத்த அகத்திணை இலக்கணத்தைத் தழுவி கண்ணனை மானிடத் தலைவனுகக் கொண்டு பாடியுள்ளார் எனலாம். தெய்வத்தை மானுடன் நிலையில் வைத்து "கண்ணன் என் காதலன்" என்னும் காதற்கவிதைகளைத் தந்துள்ளார். இதிலே பாகவதத்திலுள்ள கோபிகைகளின் உபாக்யானங் களை ஒட்டியும் ஒட்டாமலும் பாரதியார் சென்றிருக்கிறார்.

தொல்காப்பியர் படைத்த ஐந்திணை வழக்கானது இந்த இருபதாம் நூற்றுண்டு மக்களுக்கும் தேவை என்பது பாரதியாரின் கருத்து. அதனுல், புரட்சிக் கவிஞரான அவர் தொல்காப்பியருடைய பொருளதிகாரத்தைப் புறக் கணித்துச் செல்லும் 'புரட்சி'யைக் கடைப்பிடிக்கவில்லை. உரைநடைக் கட்டுரையிலே பல இடங்களில் தொல் காப்பியரை பாரதியார் புகழ்ந்திருக்கிறார். தமிழுக்கு முதன் முதலில் பொருள் இலக்கணம் தந்த அகத்தியரை யும் "ஆரிய மைந்தன் அகத்தியன்" என்ற சொற்றொடரால் தம் கவிதை யொன்றிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

## முரண்பாடு

ஐந்திணை ஒழுக்கப்படி கண்ணன் பாடல்களைப் புனைந்த பாரதியார், அதற்குள்ள துறைகள் பலவற்றையும் கையாண்டுள்ளார். வள்ளலாரைப் போன்று அகப்பொருள் துறையில் அதிகப் பாடல்களை பாரதியார் பாடிக் குவிக்க வில்லை. "கண்ணன் என் காதலன்" என்ற தலைப்பிலே நாயகி பாவத்திலே ஆறு பாடல்களையும், "கண்ணம்மா என் காதலி" என்ற தலைப்பிலே நாயக பாவத்திலே ஆறு பாடல் களையுமாக பன்னிரண்டு பாடல்களை மட்டுமே பாடியுள்ளார்.

கண்ணனாகிய தெய்வத்தை நாயகியாகவும் பக்தனாகிய தன்னை நாயகனாகவும் பாவித்து பாரதியார் பாடியிருப்பது "பகவான் ஒருவனே புருஷன்" என்ற கொள்கையிலிருந்து சற்று விலகியதாகும்.

தலைவன்பால் தோழியைத் தூது விடுதல், சிறைப் புறத்திருத்தல், நாணிக் கண் புதைத்தல், குறிப்பிடம் தவறுதல் ஆகிய அகப்பொருள் இலக்கியத் துறைகளை கண்ணன் பாட்டில் பாரதியார் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியம் அகத்திணையில் வரும் உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி ஆகியவையும் கண்ணன் பாட்டிலே கூறப்பட்டுள்ளன.

## பழகு தமிழிலே!

சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற புதிய கொள்கைக்குக் கொடி உயர்த்தியவராதலால், தொல்காப் பியர் கூறும் தலைவனையும் தலைவியையும் காதலன், காதலி என்னும் பழகு தமிழ்ச் சொற்களால் பாரதியார் சுட்டிக் காட்டுகிறார். ஆம்; பண்டையோர் படைத்த அகப்

பொருளும் பழகு தமிழுக்கு வந்துவிட வேண்டும் என்பது பாரதியாரின் உறுதியான கொள்கை.

தம்முடைய அகப்பொருள் பாடல்கள் அனைத்தையும் பழகு தமிழிலேயே அவர் படைத்துள்ளார். ஒரு பாடலைப் பார்ப்போம் :

தூண்டிற் புழுவினைப்போல்—வெளியே
சுடர் விளக்கினைப் போல்,
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சந் துடித்த தடி!
உணவு செல்லவில்லை—ஸகியே,
உறக்கங் கொள்ளவில்லை.
மனம் விரும்பவில்லை;—ஸகியே,
மலர் பிடிக்கவில்லை.
பாலுங் கசந்ததடீ—ஸகியே
படுக்கை நொந்த தடீ
கோலக் கிளிமொழியும்—செவியில்
குத்தல் எடுத்ததடீ.
நாலு வயித்தியரும்—இனிமேல்
நம்புதற் கில்லை யென்றார்;
பாலத்துச் சோசியனும்—கிரகம்
படுத்தும் என்று விட்டான்.

இது, தலைவனைப் பிரிந்த தலைவியின் விரகதாபத்தை வெளிப்படுத்தும் பாடலின் ஒரு பகுதியாகும். மேலே பாடுகிறார் :

கனவு கண்டதிலே—ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்க வில்லை—எவனோ
என்னகந் தொட்டு விட்டான்

வினவக் கண் விழித்தேன்—ஸகியே
மேனி மறைந்துவிட்டான்
மனதில் மட்டிலுமே—புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடீ.

இந்த வரிகளிலே, கனவு நிலையில் தலைவியானவள் தலைவனோடு அகப்புணர்ச்சியோடு புறப்புணர்ச்சியையும் அனுபவிக்கும் நிலையைப் பாரதியார் விளக்குகின்றார்.

பழகு தமிழிலே முதன் முதலில் அகப்பொருள் பாடல்களைப் பாடிய பெருமை வள்ளற் பெருமானுக்கே உரியது என்பதனை முன்பே அறிந்தோம். அவர் தொடங்கி வைத்த அந்தப் பணியைத் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தொடர்ந்து கடைப்பிடித்தார்.

## உரையாசிரியர் சிறப்பு

அகப்பொருள் இலக்கியமானது பண்டிதர்களுக்கே சொந்தமாக இருந்தது ஒரு காலத்திலே! அதனைப் பாமரர்களுக்கும் சொந்தமாக்கிய பெருமை வள்ளலாருக்கும் பாரதியாருக்கும் உரியதாகும். முன்னவர், முற்றிலும் பக்தி நிலையில் நின்று அதனைச் செய்தனர். பாரதியார், பக்தியைச் சிறிதே தழுவி பெருமளவு உலகியல் வழியில் நின்று செய்தார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுக்குள்ள தனிச் சிறப்பை விளக்கிவிட்டு எனது பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

# புலவர்களுக்கு ஒரு வார்த்தை

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினுர்க்கினியர், சேனவரையர், கல்லாடர் ஆகியோர் உரை இயற்றியிருக்கின்றனர். அவர்களில் இளம்பூரணர் ஒருவரே நூல் முழுவதற்கும் எழுதியுள்ளார். பொதுவாக, நச்சினுர்க்கினியர் உரையே விரிவாக உள்ளது. ஒவ்வொரு உரையும் தொல்காப்பியத்தையொட்டி எழுந்த ஒவ்வொரு சித்தாந்தம்போல புலவர் பெருமக்களால் பெரிதும் மதிக் கப்பட்டு வந்துள்ளன.

நீதிநூலான திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளை மணக்குடவர் உரை, பரிமேலழகர் உரை என்று சொல் கிறோம். அப்படியே, சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு எழுதப்பட்ட உரையை அடியார்க்கு நல்லார் உரை என்கிறோம். ஆனல், தொல்காப்பியத்திற்கு எழுதப்பட்ட உரைகளை "இளம்பூரணம்", "பேராசிரியம்", "நச்சினுர்க் கினியம்", "சேனவரையம்", "கல்லாடம்" என்கின்றோம். ஆம், "மார்க்ஸிஸம்", "காந்தியஸம்" என்பது போல! காரணம், உரையாசிரியர்களிலே ஒவ்வொருவரும் தொல் காப்பியத்தை யொட்டித் தத்தம் கொள்கையை— அதாவது, சித்தாந்தத்தை நிலைநாட்டி யிருப்பதாகும்.

நச்சினுர்க்கினியர் பத்துப் பாட்டுக்கும் உரை எழுதி யுள்ளார். அதனை, நச்சினுர்க்கினியர் உரை என்றே சொல்லுகிறோம்; நச்சினுர்க்கினியம் என்று சொல்வதில்லை. இலக்கண நூல்களிலும் தொல்காப்பியத்திற்கான உரைகள் மட்டுமே சித்தாந்தங்களாக மதிக்கப் பெறுகின்றன. பிற

இலக்கண நூல்களின் உரைகளுக்கு அந்தப் பெருமை இல்லை.

## புதைய லெடுத்த தனம் போல...

தொல்காப்பிய மூலத்தை மட்டுமின்றி, அதற்கு எழுதப்பட்டுள்ள உரைகளிலே ஒவ்வொன்றையும் அது அதிலே நுண்மான் நுழைபுலம் பெற்ற புலவர்களிடம் தனித் தனியே பாடங் கேட்கும் வழக்கமும் இருந்து வந்திருக்கிறது. எனது இளமைப் பருவத்திலே, 'இளம் பூரணத்தை இன்னுரிடம் பாடங் கேட்டேன்', 'நச்சினுர்க் கினியத்தை அன்னுரிடம் பாடங் கேட்டேன்' என்றெல் லாம் புலவர்கள் சொல்லி என் காதுகளால் கேட்டிருக் கிறேன்.

தமிழிலே ஓரளவே பயிற்சியுள்ளவர்களும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங் காப்பியம் போன்ற இலக்கியங்களை உரையாசிரியர் உதவியின்றித் தாமாகவே படித்துப் பொருள் தெரிந்துகொள்ளலாம். தொல்காப் பியத்தை அப்படிப் படித்துப் பொருள் தெரிந்துகொள்ள முடியாது. தொல்காப்பிய மூலத்தை மட்டும் தனியே எடுத்துப் படித்துப் பொருளறிய முயன்ருல், இருட்டில் தடவுவதுபோல்தான் இருக்கும். உரையின் துணை கொண் டால்தான் விளங்கும். அப்போதும், ஒரு வரியே உள்ள சூத்திரத்துக்கும் இரண்டு வரியே உள்ள சூத்திரத்துக்கும் எழுதப்பட்டுள்ள விரிவுரைகளைப் படிக்கும்போது, 'இந்த ஒரு வரிக்குள்ளே, இரண்டு வரிக்குள்ளே இவ்வளவு பொருள்கள் புதைந்துள்ளனவா?' என்று வியப்படை கிருேம். அதனுற்ருன், சங்க இலக்கிய உரையாசிரியர்களை விடவும் தொல்காப்பிய இலக்கண உரையாசிரியர்கள் தனி மதிப்புப் பெறுகின்றனர். அவர்களுக்கு இணை அவர் கள்தான்! அந்த உரையாசிரியர்கள் தோன்றி, அவர்கள்

தத்தம் சித்தாந்தத்தை வரைந்தில்லையாஞல், வெறும் பதவுரையாக மட்டும் எழுதி வைத்துப் போயிருப்பார் களாஞல், நாம் தொல்காப்பியத்தின் பெருமையை முற்று முடிய உணர்ந்திருக்க முடியாது. உரையாசிரியர்களிலே ஒவ்வொருவரும் பூமியைத் தோண்டிப் புதையல்களை எடுப் பதுபோல, ஒவ்வொரு சூத்திரத்திலும் புதைந்து கிடக்கும் பொருளை எடுத்துத் தந்திருக்கிருர்கள். நச்சிஞர்க்கினியர், தமக்கு முன் எழுதப்பட்ட உரையின் முடிவை ஏற்க முடிந்த இடத்து ஏற்றும், ஏற்க முடியாத இடத்தில் மறுத்தும் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டியுள்ளாரர்.

## தொல்காப்பியர் திறன்

சிலப்பதிகாரத்தை உரையாசிரியர் துணைகொண்டு— வேறு புலவர் எவரிடமும் நேரில் பாடங் கேட்காமல்— நாஞகப் படித்துப் புரிந்துகொண்டதுபோல, தொல்காப் பியத்தையும் உரையாசிரியர்கள் துணைகொண்டு நாஞகவே படித்துப் புரிந்துகொள்ள முயன்று வருகிறேன். தொல் காப்பியத்திலே என்னைக் கவர்வது பொருளதிகாரந்தான்! எழுத்தும் சொல்லும் தேவை என்ருலும், படிக்கும்போது போர் அடிக்கின்றன. ஆஞல், பொருளதிகாரத்தைப் படிக்கும் போது இலக்கணந்தான் படிக்கிறேம் என்ற எண்ணமின்றி, இலககியம் படிப்பது போன்ற உணர்வுடன் சுவைக்க முடிகின்றது.

தொல்காப்பியர் நிலத்தை நால்வகையாகப் பிரிக்கிருர்; உயிர் வர்க்கத்தை ஆருகப் பிரிக்கிருர்; அப்படியே, ஒரு ஆண்டுக்குரிய பருவங்களை பலவாகப் பகுத்துக் காட்டு கிருர்; ஒரு நாளுக்குரிய பொழுதை கூறுபடுத்திக் காட்டு கிருர்; ஆறறிவு படைத்த உயிர் வர்க்கத்தை 'மக்கள்' என்றும்' மாக்கள்' என்றும் பிரித்துக் கூறுகின்ருர். மக்களினும் மாக்கள் தாழ்ந்தவை என்கிருர். தம்மால்

பகுக்கப்படும் பருவங்களுக்கும் பொழுதுகளுக்கும், பொருட்களுக்கும் தனித்தனியே பெயர் தந்து, தமிழ் மொழியின் வளத்தைப் புலப்படுத்துகிறார். ஒவ்வொரு சொல்லும் 'கலைச்சொல்' என்பார்களே அதுபோன்ற வளத்தைப் பெற்றுள்ளன.

## விஞ்ஞானக் களஞ்சியம்

பொருளதிகாரத்தைப் படிக்கும்போது, வெறும் தமிழைப் படிப்பதாகவோ, அதிலும் போர் அடிக்கும் இலக்கணத்தைப் படிப்பதாகவோ எனக்குத் தோன்றவில்லை. உயிரியல், உளவியல், பௌதிகம், தாவரம் ஆகிய விஞ்ஞானக் கலைகளைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படுகின்றது. தொல்காப்பியம் செய்யப்பட்ட காலத்தில் அதுதான் விஞ்ஞானக் களஞ்சியம் எனலாம். மெய்ப்பாட்டியலைப் படிக்கும்போது, நடிப்புக் கலை பயில்வதுபோன்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

இன்னும் தொல்காப்பியத்தை என் எதிரிலுள்ள பேராசிரியர்களைப் போன்று நான் முழுதும் படித்து முடித்துவிடவில்லை. படித்துக்கொண்டே இருக்கிறேன். என் படிப்பு இன்னும் முடியவில்லை. அதற்குள் அழைத்தீர்கள், தொல்காப்பியம் பற்றிப் பேச! அதனால் பேசினேன். நான் பயின்றதைச் சொல்லவும் ஒரு மணி நேரம் போதாது. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சொன்னேன்.

மொழியியல் துறைப் பேராசிரியர் அகத்தியலிங்கனார் கேட்டுக் கொண்டது போல, தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ள தமிழின்—தமிழினத்தின் அருமை பெருமைகளை இனித் தொடர்ந்து பிரசாரம் செய்வேன்.

## தமிழ் நடை

தமிழ்ப் பேராசிரியர்களுக்கு எனது வேண்டுகோள் ஒன்று உண்டு. அது, தமிழ் நடை பற்றியதாகும். தொல்

காப்பியர் நடையிலே எழுதவும் பேசவும் உங்களால் முடியலாம். ஆனால், அது தேவையற்றது. அதன் மூலம் பொது மக்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ள முடியாது. உங்களிலே சிலரோ, பலரோ மக்கள் தலைவர்களாக மலர வேண்டும். விடுதலைப் போராட்ட காலத்தில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி., திரு. வி. கல்யாணசுந்தரனார் • பாரதியார் ஆகியோர் மக்கள் தலைவர்களாக விளங்கினார்கள். அவர்களனைவரும் தமிழிலே பெரும் புலமை பெற்றவர்களென்பதனை நீங்கள் அறிவீர்கள்.

பிற்காலத்தில்—அதாவது, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்ய மக்கள் விழிப்பு பெற்று, ஜனநாயகம் மலர்ச்சியடைந்த் காலத்தில், புலவர்களானோர் அரசியலுக்கு வரவில்லை. அதனால், நாட்டுப் பற்றுக்கும் மொழிப் பற்றுக்கும் உறவு ஏற்பட வழி இல்லாது போயிற்று. தமிழ் நாட்டில் மட்டுந்தான் இந்த விபத்து ஏற்பட்டது. வடக்கே தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், அரவிந்தகோஷ், தேசபந்துதாசர் ஆகிய பெரும் தலைவர்கள் எல்லாம் தத்தம் தாய் மொழியில் சிறந்த புலவர்களாகவும் கவிஞர்களாகவும் விளங்கினார்கள். தமிழ் நாட்டில் அத்தகையவர்கள் அரசியலுக்கு வரவில்லை. அரசியலில் முன்னேற்றம் கண்டவர்களும் தாய் மொழியில் புலமை பெற முயலவில்லை. இதனால், தமிழ் நாட்டில் தேசபக்திக்கும் தாய் மொழிப் பற்றுக்குமிடையே பூசலும் போராட்டமும் இருந்து வரக் காண்கின்றோம்.

## மக்களிடமிருந்து ஒதுங்காதீர்கள்!

புலவர்களெல்லாம் பொது மக்களின் தலைவர்களாக வரவேண்டுமானால், மொழி பற்றிய உங்கள் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். தொல்காப்பியர் அவர் காலத்துப் பேச்சு நடையில்தான் தமது இலக்கண நூலைப்

படைத்திருப்பார். இல்லையானால், அவரே உரை எழுதி யிருக்க வேண்டும்; எழுதவில்லையே! நீதி நூல்களாகட்டும்; காப்பிய நூல்களாகட்டும்; அவை இயற்றப்பட்ட காலத்துப் பேச்சு மொழியில்தான் படைக்கப்பட்டன. பேச்சு நடைக் கும் எழுத்து நடைக்கும் எப்போதும் சிறிது வேற்றுமை இருக்கத்தான் செய்யும். ஆனால், பொது மக்களுக்கு அடியோடு புரியாத நடையில் புலவர் பெருமக்கள் எழுது வதையும் பேசுவதையும் பார்க்கிறேன்.

இன்று புதிது புதிதாகத் தொழில் துறைகள் தோன்று கின்றன. அத்துறைகளிலெல்லாம் புலவர்கள் புக வேண்டும். புது வாழ்வு பெற வேண்டும். புலவர்கள் என்றால், பள்ளி யிலோ, கல்லூரியிலோ ஆசிரியர் தொழில் பெறுவதற்கு அதிகமாக, வேறு எதற்கும் தகுதியில்லை என்ற நிலை நீடித்தால் புலவருலகம் வாழ முடியுமா?

நல்ல தமிழில் எழுதுங்கள்; பேசுங்கள். ஆனால், அது எளிதில் புரிகிற நடையாக இருக்கட்டும். "தனித்தமிழ்" என்பதாக ஒன்று கிடையாது. 'தமிழ்' என்ற ஒன்றுதான் இருக்கிறது.

தொல்காப்பியத்தின் சிறப்பைப் பொதுமக்கள் அறிய வேண்டுமானால், அதற்கான எழுத்தும் பேச்சும் அம் மக்கள் புரிந்து கொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டாமா? புலவர் பெருமக்களே, மக்களிடமிருந்து ஒதுங்காதீர்கள்! மக்களையும் உங்களிடமிருந்து ஒதுக்காதீர்கள்!

# பாரதியார் பாடாதவை

மகாகவி பாரதியார், தேசம் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒரு கால கட்டத்திலே வாழ்ந்தார். விடுதலை இயக்கத்திலே அவர் இரண்டறக் கலந்தார். அந்தத் தேசியக் கவி தோன்றியில்லையேல், தேசியத்தோடு தமிழும், தமிழோடு தேசியமும் உறவு கொள்வதற்கான வாய்ப்பே ஏற்படாமற் போயிருக்கலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பாதியில் பிறந்த — இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே புரட்சித் தன்மையைப் பெற்ற—இந்தியத் தேசியத்தைத் தமிழோடு பிணைத்து வளர்த்த பெருமை பாரதியார் ஒருவருக்கே உரியது. அப்படியிருந்தும், இந்தியத் தேசியத்தின் பாசறையாக விளங்கிய "அகில இந்திய தேசிய காங்கிரஸ்" என்னும் ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி, அதனை வாழ்த்தி அவர் ஒரு செய்யுள்கூடப் பாடவில்லை. தம்முடைய பாடல்களிலே ஒன்றில்கூட இந்திய தேசிய காங்கிரசைக் குறிப்பிடவில்லை. இதனை ஆராய்ந்து உண்மைக் காரணத்தை அறிவது சரித்திர வளர்ச்சிக்குப் பயன்படுவதாக இருக்கும்.

## யௌவன இத்தாலியைப் பாடினர்

பாரதியார், காங்கிரஸ் போன்ற கட்டுக்கோப்பு வாய்ந்த அமைப்பைப் பாடாதவர் அல்ல. காரைக்குடியிலே தேசபக்தர்களால் நிறுவப் பெற்ற 'இந்து மதாபிமான சங்க'த்தைப் பாராட்டியும் வாழ்த்தியும் ஏழு செய்யுட்களை இயற்றியுள்ளார். இத்தாலி நாட்டின் விடுதலை வீரனாகிய மாஜினி என்பான், தன்னால் நிறுவப் பெற்ற "யவ்வன இத்தாலி" என்னும் அமைப்பினர் மத்தியிலே எடுத்துக்

கொண்ட பிரதிக்ஞையைத் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

"பேரருட் கடவுள் திருவடியாணை" என்று தொடங்கி, பதினைந்து செய்யுட்களிலே மாஜினியின் சபதத்தை மன முருகிப் பாடியுள்ளார். அதிலே,

"என்னுடனொத்த தருமத்தை ஏற்றோர்
இயைந்த இவ் 'வாலிபர் சபைக்'கே
தன்னுடல், பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமா வழங்கினேன்; எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமையுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன்றதா யிலக"

என்னும் செய்யுளில் இத்தாலி நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட 'வாலிபர் சபை'யின் பெயரையே குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம்.

## 'காலசா'வைப் பாடினார்

சீக்கிய சமயத்தவரின் குருவான கோவிந்த சிங்கின் வீரத்தை வருணித்து, "குரு கோவிந்த சிம்ஹர் விஜயம்" என்னும் தலைப்பிலே தொடர்நிலைச் செய்யுள் ஒன்றைப் பாடியுள்ளார். அதிலே, சீக்கியர்களின் புனித அமைப்பான 'காலசா' என்னும் சபையைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

"குரு கோவிந்தன் கொண்டதோர் தருமம்
'சீடர்தம் மார்க்கம்' எனப்புகழ் சிறந்தது
இன்றுமம் மார்க்கத் திருப்பவர் தம்பெயர்
'காலசா' என்ப 'காலசா' எனுமொழி
முத்தர்தம் சங்க முறையெனும் பொருளது

முத்தர் தஞ் சபைக்கு மூலர்களாகமற்று
ஐவர்அன் ஞேர்தமை அருளினன் ஆரியன்;
சமைந்தது 'காலசா' எனும்பெயர்ச் சங்கம்"

காரைக்குடி 'இந்து மதாபிமான சங்கம்', 'இத்தாலி வாலிபர் சபை', சீக்கிய 'காலசா,' ஆகிய அமைப்புகளின் பெயரைச் சொல்லிப் பாராட்டுரை வழங்கிய பாரதியார், இந்திய தேசிய காங்கிரசின் பெயரைச் சொல்லிப் பாராட்டத் தவறியதற்குக் காரணம் என்ன?

## காங்கிரசைப் பாடாததேன்?

பாரதியார், மிதவாதிகளும் தீவிரவாதிகளும் அணி பிரிந்து மோதிக்கொள்ளும், குருக்ஷேத்திர பூமியாக விளங்கிய சூரத் காங்கிரசுக்குத் தமிழ் நாட்டின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிருர். அதனல், காங்கிரஸ் அமைப்பிலே அவர் அங்கம்பெற்றிருந்தது உறுதிப்படுகின்றது. தம்முடைய உரைநடைக் கட்டுரைகளிலே ஒன்றிருவிடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் பெயரைச் சொல்லி அதனேடு தமக்கிருந்த தொடர்பைக் கூறியிருக்கிருர். ஆனல், தம்முடைய கவிதைகளில் ஒன்றில்கூட அவர் காங்கிரசை மறைமுகமாகக் கூடக் குறிப்பிடவில்லை. காங்கிரசை அவர் நேசிக்கவில்லையென்ருே, காங்கிரசோடு அவருக்கிருந்த தொடர்பு போலித்தனமானது என்ருே சொல்வதற்கில்லை. சொல் ஒன்று, செயல் ஒன்று என்ற நிலையில் பாரதியாரின் அரசியல் வாழ்க்கை அமைந்திருக்கவில்லை என்பதனை அவருடைய வரலாறு காட்டுகின்றது.

காங்கிரஸ் தலைவர்களான மகாத்மா காந்தி, தாதாபாய் நவுரோஜி, லோகமான்ய திலகர், வ. உ. சிதம்பரனர், லாலா லஜபதி ராய் ஆகியோரைத் தனித்தனியே புகழ்ந்தும் போற்றியும் பல செய்யுட்களைப் பாடிவைத்துள்ளார்.

அந்தச் செய்யுட்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேற்பட்டதாகும். அவற்றுள் ஒன்றில்கூட, அந்தப் பெருந் தலைவர்கள் தொடர்பு கொண்டிருந்த காங்கிரஸ் மகா சபையை பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை.

## உரை நடையில் எழுதினரே!

காங்கிரசிலே மிதவாதிகளுக்கும் தேசியவாதிகளுக்கு மிடையில் நிலவிய கருத்துப் பூசலை வருணித்துப் பல பாடல் களைப் பாடியுள்ளார். அவை,

'கோக்கலே சாமியார் பாடல்,'

'மேத்தா திலகருக்குச் சொல்லுவது,'

'நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்,'

'நடிப்புச் சுதேசிகள்',

ஆகியனவாம். இந்தச் செய்யுட்களிலே கூட காங்கிரஸ் மகாசபையின் பெயரை அவர் குறிப்பிடவில்லை.

1907ல் சூரத் காங்கிரசுக்குச் சென்று திரும்பிய பின்னர், 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' என்னுந் தலைப்பில் சிறு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளார். அதிலே தவிர வேறு தமது உரைநடைக் கட்டுரை யெதிலும் காங்கிரஸ் மகாசபையைக் குறிப்பிட்டு சிறப்பாக அவர் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை.

பாரதியார் வேண்டுமென்றே தமது கவிதை இலக்கியத்திலிருந்து காங்கிரசை விலக்கி வைத்தார் என்றோ, காங்கிரசை அலட்சியப்படுத்தும் உள்நோக்கு அவருக்கு இருந்ததென்றோ கூறுவதற்கில்லை. ஆயினும், காங்கிரசை வாழ்த்திப் பாட அவர் தவறியிருக்கிறார். அதனை மறைப்பதற்கில்லை. அதிலே ஒரு உண்மைத் தத்துவம் மறைந்திருக்கிறது. அது என்ன?

உலக மகாகவியான பாரதியார் 'அரசியல் கட்சி' என்னும் சிறைக்குள்ளே தம்மை அடைத்துக்கொள்ள விரும்பாமலிருக்கலாம். ஆனால், தமது மனச் சிறைக்குள்ளே காங்கிரசை வைத்திருந்தாரா? என்பதுதான் ஆய்வுக்குரிய விஷயம்.

லாலா லஜபதி ராய், லோகமான்ய திலகர் ஆகிய தனி நபர்களைப் பாடியவர், ஓர் மாபெரும் அமைப்பைப் பாடுவது குறுகிய நோக்கம் ஆகுமென்று கருதியிருப்பாரா? தனிநபரை விடவும் அமைப்பு பெரியதுதானே! பாரதியார் வாழ்ந்த காலத்திலே காங்கிரஸ் அதிகார வேட்டையில் ஈடுபடும் அரசியல் கட்சிகளுள் ஒன்றாக அல்லாமல், தேச விடுதலையை விரும்பும் ஒரே தேசிய அமைப்பாக விளங்கியதல்லவா! ஒரு தேசியக் கவி தனது தேசத்தின் விடுதலைக்குப் பாடுபடும் அமைப்பை வாழ்த்திப் பாடியாக வேண்டுமென்ற கட்டாயம் இல்லைதான். ஆனால், மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் கருத்துப் போர் நடந்த களமாக விளங்கிய காங்கிரசைப் பற்றிச் சொல்லித்தானே ஆக வேண்டும்?

## நாமக்கல் கவிஞர் பாடினாரே!

பாரதியாரின் வாரிசாக வாழ்ந்து மறைந்த நாமக்கல் கவிஞர், மிதவாதிகளுக்கும் தேசியவாதிகளுக்கு மிடையில் நடந்த கருத்துப் போரைக் குறிப்பிடுமிடத்து, காங்கிரசைச் சுட்டிக் காட்டுகிறார்:

"பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலா மென்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினால் தலைவ ராகிக்
காங்கிரசை நடத்தும்விதம் கண்டு நொந்து
'தேசநலம் தியாகமின்றி வருமோ?' என்று

திலகர்பிரான் செய்தபெரும் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடாது உழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனும் ஒருவ னாகும்''

*நாமக்கல் கவிஞர் காங்கிரசைக் குறிப்பிடும் மற்றொரு கவிதையையும் பார்க்கலாம்.*

''சாதிகுலச் சமயமெலாம் கடந்த தக்கோர்
சமரசமும் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிறுவியநம் காங்கிரசை நிதமும் போற்றிப்
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்த போதும்
பெரியசபை அதையிகழ்ந்து பேசா நேசன்
ஓதிஅதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம்''

*இந்தச் செய்யுள்களிலே, கருத்து வேற்றுமை காரணமாகக் காங்கிரசிலிருந்து தாம் விலகிய பின்னரும், விடுதலைக்குப் போராடிய காங்கிரஸ் மகாசபையை வ. உ. சி. வாழ்த்திக் கொண்டிருந்த வரலாற்றைக் கவிஞர் கூறுகின்றார். இப்படி, ஒரு எடுத்துக்காட்டாகக்கூட காங்கிரசின் பெயரைப் பாரதியார் கையாளாதது ஏனோ?*

## காங்கிரஸ் கவர்ச்சிக்கவில்லை

*ஆம்; ''வந்தே மாதரம்'' என்ற மந்திரச் சொல் பாரதியாரைக் கவர்ந்ததுபோல, ''காங்கிரஸ்'' என்ற பெயர் கவரவில்லை என்று தெரிகிறது. அதற்குக் காரண மென்ன? பாரதியார், விடுதலைப் போரை வரவேற்று நேரடியாகப் பாடிய பாடல் எதுவும் நம் கைக்குக் கிடைக்க வில்லை. 1930ல் காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகப் போர் தொடங்கியபோது, அதில் சேர வருமாறு தமிழ்*

மக்களுக்கு அழைப்பு விடுத்து, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை ஒரு கவிதை இயற்றினர்.

"கத்தி யின்றி ரத்த மின்றி யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை நம்பும் யாரும் சேருவீர்!

"கண்ட தில்லை கேட்ட தில்லை சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணியம் பலித்ததே நாம் பார்த்திட!"

என்று கூறினர்.

அந் நாளில் உப்பு சத்தியாக்கிரகத்தில் சேருமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்து எழுதுவதோ, பேசுவதோ சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும். 'கத்தியின்றி ரத்த மின்றி' என்று பாடிய கவிஞர் சட்டத்தை மீறிச் சிறைத் தண்டனையும் பெற்ருர். இதைப்போன்று விடுதலைப் போரை நேரடியாக வரவேற்றும், அதில் சேருமாறு தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்தும் பாரதியார் பாடவில்லையே, அதற்குக் காரணமென்ன?

## பஞ்சாப் படுகொலையைப் பாடாததேன்?

பாரதியார் பாடாத மற்ருெரு நிகழ்ச்சியுமுண்டு. அது, பாஞ்சால மாநிலத்தில் அமிர்தசரஸ் நகரில் ஜாலியன்வாலாபாக்கில் நிகழ்ந்த படுகொலையாகும்.

1919 ஏப்ரல் 13ஆம் நாள் அன்று 'ஜாலியன்வாலா பாக்' என்னும் திடலில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மீது ஜெனரல் டயர் என்ற ஆங்கிலேய தளபதி பீரங்கிப் பிரயோகம் செய்தான். பத்து நிமிட நேரம் தொடர்ந்து நடத்திய பீரங்கிப் பிரயோகத்திஞல், சுமார் 600 பேர் உயிரிழந்தனர். 1500க்கு மேற்பட்ட மக்கள் படுகாய முற்றனர். உலக வரலாறு காணுத இந்தக் கொடுமை

நிகழ்ந்த பின்னர் இரண்டாண்டு காலம் நாடெங்கும் இதே பேச்சாக இருந்தது. இந்தக் கொடுமையை நிகழ்த்திய ஜெனரல் டயர், பஞ்சாப் லெப்டினன்ட் கவர்னர் ஓட்வியர் ஆகிய இருவரையும் சபிக்காதவரில்லை.

இதுபற்றி விசாரணை நடத்த பிரிட்டிஷ் அரசு ஹண்டர் என்ற ஆங்கிலேயர் தலைமையில் எண்மர் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. காங்கிரஸ் மகாசபையும் தன் பொறுப்பில் தனியாக ஒரு குழுவை நியமித்து விசாரணை நடத்தியது. அந்தக் குழுவிலே மகாத்மா காந்தி, பண்டித மாளவியா, பண்டித மோதிலால் நேரு ஆகிய சான்றோர்கள் இருந்தனர்.

பஞ்சாப் படுகொலை நிகழ்த்திய ஜெனரல் டயர், லண்டனிலுள்ள லார்டுகள் சபை முன் விசாரிக்கப்பட்டான்; பாராட்டவும்பட்டான். இவ்வளவு பெரிய நிகழ்ச்சி பற்றிப் பாடுவதற்குப் பாரதியாரின் இதயத்தில் எழுச்சி ஏற்படாதது ஏன்?

பஞ்சாப் படுகொலைபற்றி மூன்றாந்தரக் கவிஞர்களிலே பலர், கேட்போர் மனமுருகும் வகையில் தமிழில் பாட்டெழுதினர். அந்தப் பாடல்கள் பல ஆண்டுகாலம் நாடக மேடைகளிலும் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களிலும் பாடப்பட்டு வந்தன. அவற்றுள்,

"பஞ்சாப் படுகொலை
பாரிற் கொடியது
பழிப(ா)வ முடையது
பஞ்சாப் படுகொலை"

என்ற பகுதி கேட்டோர் நெஞ்சங்களில் நிலைத் திருப்பதாகும்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியின் போது பாரதியார் வாழ்ந்திருக்கிறார் — ஆம், இது நிகழ்ந்த

பின்னும் இரண்டரை ஆண்டு காலம் அவர் வாழ்ந்திருந்தார். அப்படியிருந்தும், அவர் பாஞ்சாப் படுகொலை குறித்துக் கவிதையோ, கட்டுரையோ எழுதியதாகத் தெரியவில்லையே, காரணமென்ன?

## பெல்ஜியத்தைப் பாடினார்!

பாரதியார், தம் காலத்தில் உலகில் நிகழ்ந்த புதுமைகளை வரவேற்றும், கொடுமைகளைப் பழித்தும் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். முதலாவது உலகப் பெரும் போரின் போது ஜெர்மானியப் படைகள் பெல்ஜியம் நாட்டுக்குள்ளே புகுந்த கொடுமையைக் கண்டித்துப் பாடினார். 'அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்' எனத் தொடங்கும் அந்தப் பாடலை அறியாதார் யார்?

பிஜித் தீவில் கரும்புத் தோட்டத்திலே பாடுபடும் இந்தியப் பெண்கள், வெள்ளை முதலாளிகளால் கொடுமைப் படுத்தப்படுவது பற்றிய செய்தியைக் கேட்டபோது, 'கரும்புத் தோட்டத்திலே' என்று தொடங்கும் பாடலைப் பாடினார். அதிலே,

> "பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
> பேயுமிரங்கு மென்பார் தெய்வமே!—நினது
> எண்ண மிரங்காதோ?—அந்த
> ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர் வெறும்
> மண்ணிற் கலந்திடுமோ—தெற்கு
> மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்
> கண்ணற்ற தீவினிலே—தனிக்
> காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார் அந்தக்
> கரும்புத் தோட்டத்திலே!"

என்றெல்லாம் விம்மி விம்மியழுது வேதனைப் பட்டார். ருஷ்யாவிலே, கொடுங்கோலன் ஜார் மன்னன் வீழ்ச்சியுற்ற

போது, அதனை வரவேற்றுப் பாடினார். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டபோது, அந்தக் கொடுமையைக் கண்டித்துப் பாடினார். லஜபதிராய் அமெரிக்காவில் அல்லலுற்றதற்காக அழுதழுது பாடினார்.

இப்படி, கொடுமை எங்கு நிகழ்ந்தாலும், யாரால் நிகழ்த்தப்பட்டாலும் அதனைச் சாடிப் பாடிய வரலாறு படைத்த பாரதியார், தம் காலத்திலே தமது தாய் நாட்டிலே—தாம் கலந்திருந்த விடுதலைப் போரின் விளைவாக—நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்துப் பாடவில்லையே, காரணமென்ன?

## திலகருக்கு இரங்காததேன்?

பாரதியார் பாடாத மற்றொன்று, லோகமான்ய திலக ரின் மரணம் பற்றியதாகும். தமது காலத்திலே மரண மடைந்த பெரியோரைப் பற்றியெல்லாம் தவறாமல் இரங் கற் பா இயற்றினார். சான்றாக, ஓவியர் ரவிவர்மா, இசை வாணர் சுப்பராம தீட்சதர் ஆகியவர் மரணத்தின்போது அவர்களுடைய அருமை பெருமைகளை யெல்லாம் பாடிப் பாடி அழுதார். அப்படிப்பட்டவர், தமது அரசியல் குரு வாகத் தாம் ஏற்றுக்கொண்டிருந்த லோகமான்ய திலகர் மரணம் பற்றிக் கவிதை பாடி அழுதிருக்க மாட்டாரா? அழுதிருந்தால், அது நம் கைக்கு வரக் காணோமே! திலகர் மறைவுக்குப் பின்னும் ஓராண்டுக்கு மேல் பாரதியார் வாழ்ந்திருக்கிறாரே! திலகர் வாழ்ந்தபோது அவர்மீது மூன்று செய்யுட்களும், ஒரு கீர்த்தனையும் இயற்றி அவரை வாயார வாழ்த்தியவர், அப்பெரியாரின் மரணத்தின்போது இதயம் பொங்கிப் பாடியிருக்க மாட்டாரா?

பொதுவாக, பாரதி பக்தர்கள் அந்த மகாகவியின் கவிதைகளிலே காணப்படாத மூன்று விஷயங்களுக்கும் சமாதானம் தேடக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவை,

(1) காங்கிரசின் பெயரைச் சொல்லி அதை ஆதரித்தோ, வாழ்த்தியோ பாடாதது. (2) பஞ்சாப் ஜாலியன்வாலா பாக் படுகொலையைக் கண்டித்துப் பாடாதது. (3) லோக மான்ய பாலகங்காதர திலகர் மரணத்தின்போது அவர் மீது இரங்கற் பா பாடாதது.

இம் மூன்றைப் பற்றியும் முறையே ஆராய்ந்து சமா தானம் காண முயல்வோம். முதலில் காங்கிரசை எடுத்துக் கொள்வோம்.

மகாகவி பாரதியார், காங்கிரசைப் போற்றியோ, புகழ்ந்தோ, வாழ்த்தியோ பாடாதது அவருடைய குறை பாடோ, குற்றமோ ஆகாது. காங்கிரசின் குறையும் காலத் தின் சூழ்நிலையுமாகும்.

## இரண்டாண்டுகளே காங்கிரசில்!

பாரதியார் காங்கிரஸ்காரராக இருந்தது, ஒன்றிரண்டு ஆண்டுகளே. அதுவும், 1906-1907 ஆம் ஆண்டுகளிலாகும். 1906-க்கு முன்னர் அவர் காங்கிரஸ்காரராக இருக்க சந்தர்ப்பமில்லை. 1907 டிசம்பரில் அவர் காங்கிரசி லிருந்து ஒதுங்கிக்கொண்டு விட்டார். அதற்குப் பின், 1908 தொடங்கி சுமார் 12 ஆண்டுக் காலம் அவர்—அன்று பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த—புதுவையில் தங்கியிருந்தார். ஆகவே, 1918 வரை காங்கிரஸ் சார்பில் தேசத் தொண் டாற்ற அவருக்கு வாய்ப்பிருக்கவில்லை. அவர் காங்கிரசைப் பாடாததற்கு இது ஒரு காரணமாகலாம்.

இன்னொரு பெரிய காரணமும் உண்டு. தான் தோன்றிய காலந் தொடங்கி 1918 வரை காங்கிரசானது நாட்டுக்குப் பூரண விடுதலை கோரிப் போராடும் ஏகாதி பத்திய எதிர்ப்பு வீரர்களின் பாசறையாக இயங்கவில்லை. குறிப்பாக, 1918க்கு முன்பு அது பிரிட்டிஷ் சக்கரவர்த்திக்கு வாழ்த்துப் பாடிக்கொண்டிருந்தது. பாரதியார், நாட்டுக்கு

முழு விடுதலையை விரும்பிய—அவசிய மேற்பட்டால் வன் முறையிலும் போராட வேண்டுமென்ற புரட்சியுள்ளம் படைத்த—லோகமான்ய திலகரின் சீடர் ஆவார்.

## மிதவாத காங்கிரஸ்

1918 வரை உத்தியோகங்களை இந்திய மயமாக்க வேண்டும்; இந்தியாவுக்கு பிரிட்டிஷ் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்து வேண்டும் என்று கோரி வந்த காங்கிரசை, பூரண விடுதலைக்காகப் போராட வேண்டுமென்ற கொள்கையுடைய பாரதியார் வாழ்த்தாதது நாம் புரிந்து கொள்ளக் கூடியதுதான். பாரதியார், காங்கிரசிலிருந்தது, அதனைப் புரட்சிப் பாதைக்குத் திருப்பி விட முடியுமென்ற நம்பிக்கையால்தான்.

1907 டிசம்பரில் குஜராத் மாநிலத்தைச் சார்ந்த சூரத் நகரிலே கூடிய காங்கிரஸ் மகாசபைப் பந்தலானது மிதவாதிகளும் தீவிர்வாதிகளும் போராடும் "குருஷேத்திர மாக" விளங்கியது. ஆம்; காங்கிரசை பூரண சுதந்தரம் கோரிப் போராடுவோரின் பாசறையாக மாற்ற வ. உ. சி. யும் பாரதியாரும் கலந்திருந்த திலகர் குழு சூரத்தில் முயன்றது. அதற்கு மாறாக, பிரிட்டிஷ் விசுவாசிகளின் கூடாரமாகவே என்றென்றும் அதனை வைத்திருக்க கோபால கிருஷ்ண கோகலே, பிரோஸிஷா மேதா, ராஷ் பிகாரிகோஷ் ஆகியோரைக் கொண்ட மிதவாதிகள் குழு முயன்றது. இந்தப் போராட்டத்திலே மிதவாதிகளிடம் தீவிரவாதிகள் தோல்வியுற்றனர், சூரத்திலே!

## புதிய கட்சி

அதன்பின், தீவிர தேசியவாதிகள் சூரத்திலேயே தனியாகக் கூடி, "தேசியவாதிகள் மாநாடு" என்பதாக ஒரு புது அமைப்பினை அரவிந்தர் தலைமையில் தொடங்கினர்.

இதன்பின் காங்கிரசானது முழுக்க முழுக்க பிற்போக்காள ரான மிதவாதிகள் ஸ்தாபனமாகிவிட்டது. இந்த நிலை 1918 ஆம் ஆண்டு வரை நீடித்தது. காங்கிரசைப் போற்றி யும் புகழ்ந்தும் பாரதியார் பாடாததற்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

சூரத்தில் நடந்த மிதவாதிகள் — அமிதவாதிகள் போராட்டத்திலே, அமிதவாதிகள் வெற்றி பெற்றிருந்தால் —அதாவது, அவர்கள் காங்கிரசைக் கைப்பற்றியிருந்தால், அதன் பின் பாரதியார் காங்கிரசை வாழ்த்திப் பாடி யிருக்கக் கூடும். பாரதியார் காங்கிரசில் இருந்தபோது அதன் நிர்வாகம்—மத்தியிலும், மாநிலங்களிலும்—மித வாதிகள் கையிலிருந்ததால், அதனை வாழ்த்துவது, பிற் போக்குக்கு வாழ்த்துக் கூறுவதாகிவிடுமல்லவா!

சூரத் காங்கிரசுக்குப் பிறகு அந்த மகாசபையானது பாரதியாருக்கு "அன்னிய" மாகிவிட்டது. அதன் வளர்ச் சியை அவர் விரும்பாதவரானார்! அதற்காக நாடு அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. திலகர், வ. உ. சி., லாலா லஜபதி, தாதாபாய் நௌரோஜி ஆகியோரைத் தனித் தனியே பாராட்டிப் பாடியிருப்பது, அவர்கள் காங்கிரஸ் காரர்கள் என்பதற்காக அல்ல. காங்கிரசை புரட்சிப் பாதையில் திருப்பிவிடப் பாடுபட்ட முற்போக்காளர் என்பதற்காகத்தான். அதனாற்றான், அவர்களைப் போற்றி யும் புகழ்ந்தும் பாடுங்கால், காங்கிரசையும் பிணைத்துப் பாட அவர் விரும்பாதவரானார்! சூரத் காங்கிரஸ் முடிந்த சில மாதங்களுக்குப் பின் பாரதியார் காங்கிரஸ்காரர் களான மிதவாதிகளைக் கேலி செய்து பாடியுள்ளார்.

## தலைவர்கள் நடத்திய புரட்சி

திலகர் பெருமான் மகாராஷ்டிரத்திலும் , அரவிந்தர் வங்காளத்திலும், வ. உ. சிதம்பரனார் தமிழகத்திலும்,

லஜபதிராய் பாஞ்சாலத்திலும் பிரிட்டிஷ் கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடினார்கள். அதற்காக, அரசு அரவிந்தர் மீது சதி வழக்குப் போட்டது. திலகர்மீது கிரிமினல் சட்டப்படி வழக்குப் போட்டு, ஆறுண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்தது. வ. உ. சிதம்பரனார் மீது ராஜத்துவேஷக் குற்றஞ் சாட்டி, நாற்பதாண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்தது. லஜபதி ராயைத் தண்டித்து பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைத்தது.

உண்மை என்னவென்றால், 1908ல் பஞ்சாபிலும் மகாராஷ்டிரத்திலும் வங்காளத்திலும் தமிழகத்திலும் நடந்த புரட்சிகளுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லையென்பது தான்! வங்காளியரின் எழுச்சிக்கு அரவிந்தர் தான் காரணம். மகாராஷ்டிரரின் புரட்சிக்குத் திலகர்தான் காரணம். தமிழகத்திலே தென்பாண்டிப் பதியில் நடந்த புரட்சிக்கு வ. உ. சி. தான் காரணம். பாஞ்சாலத்தில் நடந்த புரட்சிக்கு லஜபதிதான் காரணம். மிதவாதிகளின் கையில் சிக்கியிருந்த காங்கிரஸ் அல்ல. ஆம்; சரித்திரத்தின் மதிப்பீடு இது!

## காங்கிரசின் போக்கு!

1908-ல் வ. உ. சி., திலகர், லஜபதி, அரவிந்தர் ஆகிய பெருந்தலைவர்களைச் சிறையில் தள்ளி, அவர்களைப் பெற்றெடுத்த பாவத்திற்காகத் தமிழகத்திலும் மகாராஷ்டிரத்திலும் பஞ்சாபிலும் வங்கத்திலும் அடக்குமுறைச் சட்டங்களை அமுல் நடத்தியது பிரிட்டிஷ் ஆட்சி. இந்தக் கொடுமையைக் கண்டிக்க காங்கிரஸ் முன் வரவில்லை. 1908 டிசம்பரில்—அதாவது, திலகரும் வ. உ. சி. யும் அரவிந்தரும் லஜபதியும் சிறை புகுந்த நான்கு மாதம் கழித்து சென்னையில் வழக்கம்போல காங்கிரசின் வருடாந்தர மகாசபை கூடியது. அந்த மகாசபையிலே, தலைவர்களைக்

கைது செய்ததற்காக, மக்களை அடக்கி ஒடுக்கிய கொடுமைக்காகக் கண்டனத் தீர்மானம் போடப்படவில்லை. மாருக, அந்தப் பெருந் தலைவர்களின் பெயர்களைச் சொல்லாமல், அவர்களை ''பொருப்பற்ற சிலர்'' என்று கூறி, அவர்கள் மக்களைப் புரட்சிக்குத் தூண்டியதாகக் கண்டனம் செய்து தீர்மானம் போடப்பட்டது. வழக்கமான பிரிட்டிஷ் ராச வாழ்த்தும் சென்னை காங்கிரசிலே பாடப்பட்டது. இந்தக் காலத்திலே காங்கிரசை பாரதியார் வாழ்த்திப் பாட முடியுமா?

சுருங்கச் சொன்னுல், தான் தோன்றிய நாள்தொட்டு 1918 வரை காங்கிரஸ் மகாசபையானது படித்த இந்தியர்களுக்கு உத்தியோகந் தேடித் தரும் மகாசபையாகவே இயங்கி வந்தது. அதனை, பாரதியார் வாழ்த்திப் பாடாதது சரிதானே! நல்லவேளையாக, 1919-ல் பஞ்சாபில் நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலையும், ரௌலட் சட்டமும் நாட்டு மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியபோது, அந்தக் கொடுமைகளுக்குப் பரிகாரந் தேட காங்கிரஸ் மகாசபை முன் வந்தது. அதுவும், காந்தியடிகளின் தூண்டுதலால்தான்!

## காங்கிரசுக்கு விடுதலை

ஜாலியன்வாலா படுகொலை நடந்த அமிர்தசரஸ் நகரிலேயே—அந்தப் படுகொலை நிகழ்ந்த எட்டு மாதங்களுக்குள்ளாகவே—காங்கிரசின் வருடாந்தர மகாசபை நடந்தது. அதிலே கலந்துகொண்டு காங்கிரசுக்கு வழிகாட்டும் பொறுப்பை காந்தியடிகள் ஏற்ருர். அதனையடுத்து, 1920-ல் நாகபுரியில் சேலம் சி. விசயராகவாச்சாரியார் தலைமையில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே தான் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போர்த் திட்டம் ஏற்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலேதான் காங்கிரஸ்

மகாசபையானது மிதவாதிகள் பிடியிலிருந்து விடுதலை பெற்றது.

நாகபுரி காங்கிரசுக்குப் பின்னும் 9 மாத காலம் பாரதியார் வாழ்ந்தா ரென்றாலும், அவர் காங்கிரசை நேரடியாக வாழ்த்திப் பாடவில்லை. காரணம், ''காங்கிரஸ் தான் காந்தி; காந்திதான் காங்கிரஸ்'' என்ற நிலை நாட்டில் ஏற்பட்டு விட்டதால், பாரதியார், காந்தியடிகளின் தலைமையையும், அவரது ஒத்துழையாமைப் போர் முறையையும் வாழ்த்தியும் வரவேற்றும் ''மகாத்மா காந்தி பஞ்சகம்'' பாடினார். அந்தப் பாடலைத்தான் மிதவாதிகளிடமிருந்து விடுதலை பெற்ற காங்கிரஸ் மகாசபைக்குப் பாரதியார் பாடிய வரவேற்பும் வாழ்த்துமாகக் கருத வேண்டும். அதே காலத்தில், பாரதியார் தமது உரை நடைக் கட்டுரையொன்றிலே காங்கிரஸ் மகாசபையில் சேருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அது வருமாறு :

> ''இந்தியாவின் ஸமூஹ வாழ்க்கையில் ஸமத்வ மேற்படுத்த விரும்புவோர் முதலாவது ராஜரீகத் துறையில் ஸமத்வமேற்படுத்த முயலும் ''காங்கிரஸ்'' கக்ஷியாருடன் சேர்ந்து வேலை செய்யவேண்டுமென்று கருதுகிறேன்.''

['பாரதி தமிழ்', பக். 331]

பாரதியார் இதனை எழுதியது 1-12-1920 'சுதேசமித்திரன்' இதழிலாகும். ஆம்; நாகபுரி காங்கிரசில் ஒத்துழையாமைத் திட்டம் ஏற்கப்பட்ட பிறகே காங்கிரசில் சேருமாறு அவர் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

### ''காந்தி பஞ்சகம்''

பாரதியார் அடிமைத்தனத்தை வெறுத்தும், விடுதலை வாழ்வை விரும்பியும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

ஆனால், நாமக்கல் கவிஞரைப் போன்று விடுதலைப் போரை நேரடியாக வரவேற்றுப் பாட்டெழுதவில்லை யென்றால், அதற்குக் காரணம், தேசம் முழுவதிலுமாக, ஒரே தலைவரின் கீழ்—ஒரே வேலைத் திட்டத்தின் கீழ் விடுதலைப் போர் எதுவும் 1920 க்கு முன்புவரை நடக்காததுதான். நடந்திருந்தால், பாரதியார், அதனை வரவேற்று, வாழ்த்திப் பாடியிருப்பார்.

ஒரே தலைமை—ஒரே வேலைத் திட்டம் என்ற அடிப்படையில் காங்கிரஸ் மகாசபை முதன் முதலில் நாடு தழுவிய முறையில் நடத்திய விடுதலைப் போர், 1921ல் காந்தியடிகள் தலைமையின் கீழ் தொடங்கிய ஒத்துழையாமைப் போர்தான்!

"வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

என்ற பாடல், காங்கிரஸ் மகாசபையின் தளபதியான காந்தியடிகளின் தலைமைக்குப் பாரதியார் தந்த வரவேற்பும் வாழ்த்துமாகும்.

"பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்;
அதனினுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ அறிந்தாய்
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் அறத்தே!"

என்ற பாடலிலே, ஒத்துழையாமைப் போரை பாரதியார் வரவேற்றது புலனாகும். ஒருகால், பாரதியார் இன்னும்

சிறிது காலம் வாழ்ந்திருந்தால், நாமக்கல் கவிஞர் போன்று காங்கிரஸ் மகாசபையையே நேராக வாழ்த்தியும் விடுதலைப் போரில் சேருமாறு மக்களை அழைத்தும் கவி பாடியிருக்கக் கூடும்.

காங்கிரஸ் மகாசபையை பாரதியார் வாழ்த்திப் பாடாததன் காரணத்தை அறிந்தோம். ஆனால், 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11 வரை வாழ்ந்திருந்த பாரதியார் 1919 ஏப்ரல் 13ல் நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலை பற்றிப் படாதது ஏன்? தமது குருவாக ஏற்றுக்கொண்டிருந்த திலகர் மறைவு குறித்துப் பாரதியார் பாடவில்லையே, அது எதனால்?

## அநீதியை எதிர்க்கும் ஆவேசக் கவிஞர்

அநீதி எங்கு நடந்தாலும், எவருக்கு நடத்தப்பட்டாலும், எவரால் நடத்தப்பட்டாலும் அது கண்டு கொதித்தெழுந்து பாட்டு எழுதுவது சங்க காலக் கவிஞர் மரபு. இந்த மரபு இளங்கோ அடிகளுக்குப் பின்னர் பாரதி தோன்றியது வரையுள்ள சுமார் இரண்டாயிரம் ஆணடுக் காலத்தில் கடைப்பிடிப்பாரற்றுப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஆயிரமாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டில் மதத்தாலும், இனத்தாலும், மொழியாலும் அந்நியர்களானோர் அடுத்தடுத்து ஆதிக்கம் செலுத்திய காலங்களிலே, தமிழினத்தார் அடைந்த அல்லல்கள்—அந்நியர்கள் அவர்களுக்கு இழைத்த கொடுமைகள்—கொஞ்சமல்ல; கோடி, கோடியாகும். அவற்றுள் ஒன்றைக் கூட எதிர்த்து ஒரு கவிஞர் கூடப் பாடவில்லை. மண்ணுலகத்து மக்கள் படும் இன்னல்களைக் கண்டுங் காணாதவர்களாகி, வானுலகத்துத் தேவர்களைப் பாடினர். பூலோக வாழ்வு மக்களுக்குப் பொய்த்திருந்த நேரத்திலே, அதிலே புதுமை காண விரும்பி

புரட்சிக் கீதம் பாடாமல், கற்பனை உலகமான சொர்க்கத்துக்கு வழிகாட்ட விரும்பிப் பக்திக் கீதங்கள் பாடினர்.

இந்த நேரத்திலே பாரதியார் தோன்றி இளங்கோ காலத்துடன் இறுதியாகிவிட்ட மரபுக்குத் திரும்பவும் வாழ்வு தேட விரும்பி, நாட்டின் நடைமுறை பற்றிப் பாட்டெழுத முயன்றார். கலெக்டர் விஞ்சுக்கும் தேசபக்தர் வ. உ. சி.க்கு மிடையே நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு பற்றிப் பாடல் புனைந்து, அதனை, தேச பக்த பாரம்பர்யத்தின் இலக்கிய மாக்கினார்.

நாட்டின் அவல நிலையைக் கண்டு வருந்தி, "நெஞ்சு பொறுக்குதிலையே!" எனத் தொடங்கும் கவிதையைத் தம் கண்ணீரால் வரைந்தார்.

## புதுவையில் அடைக்கலம்

தமிழினத்தார் ஒவ்வொரு துறையிலும் தாழ்ந்து வீழ்ந்து வரும் நிலை கண்டு நெஞ்சம் குமுறியவராகி, "விதியே! விதியே! தமிழச் சாதியை என்செய நினைத்தாய் எனக் குறையாயோ?" என்று தொடங்கும் — விதிக்கு வினா விடுக்கும்—வேதனைக் கவிதையைப் படைத்தார். நாட்டை அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைக்கும் மிதவாதக் கூட்டத்தாரின் போக்கினை நையாண்டி செய்து பாடினார்.

இப்படி, நாட்டின் நடைமுறையைப் பாடும் பழைய மரபைப் புதுப்பித்தவரான பாரதியார், தம் காலத்தில் நடந்த 'பஞ்சாப் படுகொலை' பற்றிப் பாடவில்லையென்றால் அது சாதாரண விஷயம் அல்ல. ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியதாகும்.

பாரதியார், அந்நியக் கொடுங்கோலாட்சியானது தேசபக்தர் குலத்தையே அழித்துவிடத் திட்டமிட்டு அடக்கு முறையில் இறங்கியதனால், 1908 ஆம் ஆண்டில்

பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறி, பிரெஞ்சு இந்தியாவான புதுவையில் அடைக்கலம் புகுந்தார். 1918 வரை புதுவையிலேயே இருந்தார். பின் தமிழகம் திரும்பினுர்.

பாஞ்சாப் படுகொலை நிகழ்வதற்குச் சில மாதங்களுக்கு முன் தொடங்கி, அப் படுகொலை நிகழ்ந்த பின் சில மாதங்கள் வரையுள்ள ஒரு கால கட்டத்திலே பாரதியாருக்கிருந்த மனோ நிலையை அறிந்து கொண்டால், அந்த மகாகவி பஞ்சாப் படுகொலைபற்றிப் பாடாததற்கான காரணம் புலனுகிவிடும்.

புதுவையில் வாழ்ந்த கடைசி ஆண்டிலே—அதாவது, 1918 ஆம் ஆண்டிலே, பாரதியார் மனம் தாங்கொணு வேதனையில் மூழ்கியது. ஆம்; வறுமை அவரை வாட்டியது. மரணத்திற்கு அஞ்சாது 'காலா இங்கே வாடா, உன்னைக் காலால் உதைக்கின்றேன்' என்று பாடிய கவிஞர், வறுமையின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள இயலாமல் புழுப் போல் துடித்தார்.

## பராசக்தியிடம் முறையீடு!

புதுவையில் வாழ்ந்த கடைசி மாதங்களில் பாரதியாரின் மனோ நிலைபற்றி அவரே எழுதியவற்றை எடுத்துக்காட்டி நாட்டுக்கு உணர்த்துகிருர், அவருடைய அருமை மகள் சகுந்தலா பாரதி. இதோ சகுந்தலா காட்டும் பாரதியாரின் எழுத்தோவியம்:

''பராசக்தீ! இந்த உலகத்தின் ஆத்மா நீ. உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா?

''இரண்டு மாதம் கால இரவும் பகலுமாக நானும் செல்லம் மாளும் புழுத் துடிப்பதுபோலத் துடித்தோம். ஊண் நேரே செல்ல

வில்லை. இருவருக்கும் எப்போதும் சஞ்சலம் பயம், பயம், பயம்! சக்தீ, உன்னை வாழ்த்துகிறேன்.

"கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம், தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

"பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக் கொண்டிருக்கும்படித் திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெலாம் தீர்ந்து தொல்லையில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிர விதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகிறேன்; உலகத்தில் இது வரை எங்குமில்லாதபடி அற்புதமான ஒளிச்சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டு ஒன்றை என் வாயிலே தோன்றும்படிச் செய்ய வேண்டும்.

"தாயே, என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைபபடுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் உன்னை எப்படிப் பாடுவேன்?"

[சகுந்தலா பாரதி எழுதிய 'என் தந்தை'; பக். 46. 47]

## பாரதி பித்தரானுர்!

*தம் தந்தையாரின் மனோநிலை பற்றித் திருமதி. சகுந்தலா பாரதி கூறுகின்றூர்:*

"கவிதை புனைவதும், கற்பனையுலகில் சஞ்சரிப்பதுமாகக் காலந் தள்ளி வந்த என் தந்தையாருக்கு நாளாக நாளாக மிக மனச்சங்கடமான நிலையேற்பட்டு விட்டது. அநேக நாட்களை மிகுந்த துன்பத்தோடும், மனத் துடிப்போடும், ஏது சொல்வதெனத் தெரியாத வேதனையுடன் கழிக்க ஆரம்பித்தார்.

"நடுப்பகல் உச்சி வெயிலில் மேன்மாடத்தில் நின்று பாடுவார். அவர் மனது அந்த வேளைகளில் என்ன பாடு பட்டதோ, யாரறிவார்?

"நண்பர்கள் உள்பட எல்லாவற்றையும் வெறுக்கத் தொடங்கினர். பல நாட்களாக யாதொரு பாட்டும் எழுதாமல் வேதனையுடன் கழித்தார்."

['என் தந்தை', பக். 46

*தன் தந்தை சித்தந் திரிந்து பித்தராகி விட்டாரோ என்று ஐயுறும் நிலையும் ஏற்பட்டு விட்டதாக சகுந்தலா கூறுகின்றார். அது வருமாறு :*

"உலகிற்கே ஒரு வழிகாட்டியான பெரிய கவிஞர், தேசபக்தர் என்று எல்லோராலும் புகழப்படுவதையே கேட்டுப் பழகியதால் என் தந்தைக்கு நிகரானவர் யாருமே கிடையாது என எண்ணிப் பெருமை கொண்டிருந்த என் சிறியவுள்ளம் என் தந்தையைப் பித்தன் எனப் பிறர் பேசுவதைக் கேட்டுக் குன்றி விட்டது.

"பின்னர், சில நாட்கள் மனச்சாந்தி சிறிதுமில்லாது நரக வேதனையுடன் கழிந்தன. தமது துன்பத்தை, என் தந்தை போதை வஸ்துக்கள் மூலம் மறக்க முயன்றார். அதன் கொடுமையால் வீட்டு வாழ்கை துன்பக் களஞ்சிய மாயிற்று. எப்போதும் ஏற்பட்ட மனக் கொதிப்பினால் அவரது உடல் நிலையும் மிகவும் பாதிக்கப் பட்டது."

['என் தந்தை,' பக். 50]

"என் தந்தை மீது அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டிருந்த என் தாய் மாமன் ஸ்ரீ அப்பாதுரை ஐயருக்கு, என் தந்தை சித்த ஸ்வாதீனமற்றவர் போலாகிவிட்டார் என்ற செய்தி, எத்தனை மனக் குழப்பத்தை விளைவித்திருக்கும்?"

['என் தந்தை' பக்,. 49]

*இந்நிலையில், புதுவை வாழ்க்கையானது அலுத்து விட்டது பாரதியாருக்கு. புதுவையிலிருந்து வெளியேறித்*

தாய்த் தமிழகத்திடம் திரும்பவும் அடைக்கலம் புக எண்ணினர். தாயகம் தன் வறுமையைப் போக்காவிடினும் பட்டினிக் கொடுமையி லிருந்தேனும் தன்னையும் தன் குடும்பத்தையும் காக்குமென்று நம்பினர்.

1918 டிசம்பரில் புதுவையை விட்டு மனைவி மக்களுடன் மாட்டு வண்டியில் புறப்பட்டு, பிரிட்டிஷ் இந்திய எல்லையை அடைந்தார். பாரதியாரைப் பின்பற்றி வந்த பிரிட்டிஷ் இந்திய போலீசார் அவரைக் கைது செய்தனர். ஈவிரக்கமற்ற அவர்கள், நம்முடைய மகாகவியை தமிழ்த் தாயின் தவப்புதல்வரை அவரது மனைவி மக்களிடமிருந்து பிரித்து, கடலூரர் சிறையில் அடைத்தனர். அன்றுதான் தமிழ் மகாகவி யொருவர் சிறைப்பட்ட புதிய வரலாற்றை தமிழ்மொழி பெற்றுப் பெருமை அடைந்தது. சிறைப் பட்ட ஒரு மாதத்திற்குள் பாரதியார் கடுமையாக நோயுற்றார். ஆம்; சோறு கிடைக்காமல் பட்டினி வாழ்வு புதுவையிலே! கடலூரர் சிறையிலே, நேரத்தோடு சோறு கிடைத்தும், உண்ண முடியாமல் உயிரோடு போராட்டம்! செல்வாக்குடைய பெரிய மனிதர் பலர் தலையிட்டு. பாரதியாருக்கு விடுதலை தேடினர். ஆம்; என்னென்னவோ நிபந்தனைகள் விதித்து விடுதலை செய்தது ஆட்சி. அவற்றுள் ஒன்று, அவர் சென்னை நகருக்குள் நுழையக் கூடாதென்பது.

காந்தியடிகள் தலைமையேற்கும் முன்பு விடுதலைப் பாசறையிலே சத்தியாக்கிரக ஒழுங்கு முறை இருக்கவில்லை. அதனாற்றான், அரவிந்தர், வ. வே. சு. ஐயர், பாரதியார் போன்ற விடுதலை வீரர்கள் பிரிட்டிஷ் இந்தியப் போலீசாரை ஏமாற்றி விட்டு, புதுவையில் முகாம் போட்டனர். இந்த வழக்கத்தையொட்டி, பாரதியார் அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்று விடுதலையானர். இது தவறல்ல.

விடுதலையானதும் மனைவியின் சொந்த ஊரான கடையத்திற்குச் சென்றார். ஒன்றிரு மாதங்களில் தமது சொந்த ஊரான எட்டயபுரத்தில் குடும்பத்துடன் அடைக்கலம் புகுந்தார்.

தமிழகம் வந்த பின்னும் பாரதியின் மனோநிலை சீர்படவில்லை என்கிறார், சகுந்தலா பாரதி. இதோ :

"பெரிய குடும்பத்தை தான் சம்ரட்சிப்பதற்குப் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்தால் தேச சேவைக்கு நேரமில்லாமல் போய் விட்டது போன்ற உணர்ச்சியே அவரைவாட்டிக் கொண்டிருந்தது.

"உண்மையில் அந்த நாட்களிலெல்லாம் கவிதா சங்கதம் குன்றிப்போய்விட்டது.

"எட்டயபுரத்தில் அவர் கவிதை எழுதும் தொழிலையே அனேகமாக மறந்துவிட்டார். சூழ்நிலை கவிஞரின் மனதை எப்படி பாதிக்குமென்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்."

['என் தந்தை'; பக். 54, 55, 62]

பாரதியார், 1918, 19 ஆம் ஆண்டுகளிலே கவிதை புனையும் ஆற்றலையே இழந்திருந்தார். இந்த நேரத்தில் தான் 1919 ஏப்ரலில் பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த தென்றால், அவர் அந்தக் கொடுமை குறித்துக் கவிபுனைவது எங்ஙனம். உண்மையில் பாரதியார் பாஞ்சாப் படுகொலை பற்றிப் பாட்டியற்றி யிருந்தால், ருஷ்யப் புரட்சியைப் பற்றிப் பாடியிருக்கிறாரே, அதையும் விஞ்சுவதாக இருந்திருக்கு மென்பதில் ஐயமில்லை.

பாரதியார் திரும்பவும் பழையபடி பாடுந்திறமையைப் பெற்றாரென்றாலும், அதற்குள் பஞ்சாப் படுகொலை பழைய விஷயமாகி விட்டது. அதற்குப் பரிகாரமாகத் தோன்றிய ஒத்துழையாமைப் போராட்டமும், அப்போதுதான்

இந்திய அரசியல் அடிவானத்தில் தோன்றிக் கொண்டிருந்த காந்தியமும் நாட்டு மக்களைக் கவர்ந்தன. இந்த மாறுதல்களால் மக்கள் கவியான பாரதியாரும் ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பாடாமல், காந்தியடிகளின் தலைமையை வரவேற்றும், ஒத்துழையாமைத் தத்தவத்தை ஆதரித்தும் பாடல்கள் எழுதினர்.

பாரதியார், கடலூர் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், முதலில் கடையநல்லூரிலும், அடுத்து எட்டயபுரத்திலும் சில மாதங்கள் வாழ்ந்தார். அதன் பின்னர், 1919-ல் அவர் சென்னை வருவதற்கிருந்த தடை அரசால் நீக்கப்பட்டது. ஆனல், அரசியலில் ஈடுபடக் கூடாதென்ற தடை நீக்கப்படவில்லை.

தாம் எழுதுவனதப் போலீஸ் இலாகாவுக்குக் காட்டி, அதன் மேற்பார்வைக்குப் பின்னரே வெளியிட வேண்டும் என்று அரசு விதித்த நிபந்தனையையும் கவிஞர் ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந்தார். அதுபற்றித் தம்முடைய தோழர் பரலி சு. நெல்லையப்பருக்கு 29—12—1918ல் எழுதிய கடிதமொன்றில் கவிஞர் கூறுவது வருமாறு :

"...இனிமேல் சிறிது காலம்வரை நான் பிரசுரம் செய்யும் புஸ்தகங்களை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி, அவருடைய அனுமதி பெற்றுக் கொண்ட பிறகே பிரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாருக்கு நான் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக்கிறேன்.

"ஏற்கெனவே "பாஞ்சாலி சபதம்" (முதற்பாகம்) வெளிப்பட்டிருக்கிறபடியாலும், ப்ரசுரம் செய்பவன் நானன்றி நீ யாதலாலும், இதை அச்சிடும் முன்னர் ஒப்பந்த விதியை அனுஸரித்தல் அவசியமில்லையென்று தோன்றுகிறது.

"அப்படியே காண்பித்தாலும் தவறில்லை. நமது நூல் மாசற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹானிங்டன் எனக்கு மிகவும் அன்புள்ள ஸ்நேகிதர். தங்கமான மனுஷ்யன். ஆதலால், அநாவசியமான ஆக்ஷேபங் கற்பித்து நமது காரியத்தைத் தடை செய்யக்கூடியவர் அல்லர். நீயே மேற்படி நூலை அவரிடம் காட்டி அனுமதி பெற்றுக் கொள்க.'

['பாரதி தமிழ்']

போலீஸ் டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு பாரதியார் காட்டச் சொன்னது அரசியல் கவிதைகளையோ கட்டுரைகளையோ கொண்ட நூலையல்ல; துளி கூட அரசியல் தொடர்பற்ற "பாஞ்சாலி சபதம்" என்ற குறுங் காப்பியத்தை யாகும். அதுவும், இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதற்காகும். பாரதியாரின் சுதந்திரத்தை எவ்வளவு கடுமையாக அரசு கட்டுப்படுத்திய தென்பதற்கு இது ஒன்றே சிறந்த சான்ருகும். சிறை மீண்ட பின் கடையத்திலும் எட்டயபுரத்திலும் சுமார் ஓராண்டு காலம் மனக்குழப்பம் காரணமாக பித்தரைப்போல நடந்து கொண்டா ரல்லவா! அதற்குக் காரணம், அரசு அவரது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திய கொடுமையாகும்.

## நிபந்தனையின் விடுதலை

சிறை மீண்ட பின்னர் பாரதியார் சுமார் இரண்டரை ஆண்டு காலம் உயிர் வாழ்ந்தார். அந்தக் காலத்தில்தான் பஞ்சாப் படுகொலையும், திலகர் மரணமும் நிகழ்ந்தன. இந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பாரதியார் எழுதாததற்கு அரசு அவருக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளே காரணம் என லாம். இதுபற்றித் திருமதி. சகுந்தலா பாரதி எழுதி யிருப்பது வருமாறு :

"தன் வாழ்க்கையின் இலட்சியமாகப் போற்றி வந்த தேசத் தொண்டாற்றுவதற்கான அரசியலில் சம்பந்தப் படுவதில்லையெனத் தாம் வாக்களித்தது, பின்னல் அவருக்கு அதிக மனக்குழப்பத்தை உண்டாக்கிற்று. விதியின் கொடுமை!

"கவிதா சந்நதம் குன்றிப் போய்விட்டது போன்ற உணர்ச்சியே அவரை வாட்டிக் கொண்டிருந்தது. எட்டய புரத்தில் அவர் கவிதை எழுதும் தொழிலேயே அநேகமாக மறந்து விட்டார். சூழ்நிலை கவிஞரின் மனதை எப்படி பாதிக்கு மென்பதை இதிலிருந்து சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்."

பாரதியார், வறட்டு அரசியல் கவிஞரல்ல; சமய சமூகத் துறைகள் பற்றியும் கவிதை புனையும் ஆற்றலுடைய வர். அதனல், தேசத்தைப் பற்றிப் பாடுவதை விடுத்து தெய்வங்கள் மீது பாட்டெழுதலானர். அதுபற்றியும் திருமதி சகுந்தலா சொல்வதைப் பார்ப்போம்:

"பல நாட்களாக யாதொரு பாட்டும் எழுதாமல் வேதனையுடன் கழித்த பின், ஒருநாள், 'ஸரஸ்வதி ஸ்தோத் திரம்' என்ற பாடலேத் தந்தையார் எழுதினர். என் தந்தையார் மறுபடி கதைகளும் பாட்டுகளும் எழுதத் தொடங்கினர். ஆனல் இராஜீய விஷயத்தைப் பற்றி ஒன்றும் எழுதுவது கூடாதென்ற கட்டுப்பாடு அவரை மிகவும் பாதித்தது."

['என் தந்தை', பக்.64]

## பக்திப் பாடல்கள்!

பாரதியார், புதுவையிலிருந்து வெளியேறிய பின்னர்— குறிப்பாக, கடலூர் சிறையிலிருந்து அரசு விதித்த கட்டுப்

பாடுகளை ஏற்று விடுதலை பெற்ற பிறகு பல கவிதைகளை எழுதினர். அவற்றின் தலைப்புக்கள் வருமாறு :

சீட்டுக் கவிகளும் ஓலைத்தூக்கும் (எட்டயபுரம் மன்னருக்கு எழுதியது)

சந்திரமதி பாட்டு

ராதைப் பாட்டு

நந்தலாலா பாட்டு

வள்ளிப் பாட்டு (1)

வள்ளிப் பாட்டு (2)

கண்ணம்மா (1)

கண்ணம்மா (2)

சாகா வரம்

ஸரஸ்வதி ஸ்தோத்திரம்

பாரத மாதா நவரத்தின மாலை

காந்தி பஞ்சகம்

இந்தியாவின் அழைப்பு
(ஆங்கிலக் கவிதையின் மொழி பெயர்ப்பு)

மேலே தந்துள்ள கவிதைப் பட்டியலிலுள்ளவற்றில் "மகாத்மா காந்தி பஞ்சகம்" ஒன்றைத் தவிர மற்ற கவிதைகளெல்லாம் அரசியல் தொடர்பற்றவையாகும். காந்தி பஞ்சகத்திலும் காந்தியடிகளை, இராமனேடும் கண்ணனேடும் ஒப்பிட்டு, தெய்வாவதாரமாகக் கருதிப் புகழ்ச்சி கூறியுள்ளார். அதனுல், அந்தப் பாட்டை வெளியிட டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் அனுமதித்தார் போலும்!

1920 ஆகஸ்டு 1ல் திலகர் மறைந்தபோது கவிஞர் பாரதியார் இரங்கற் பா பாடியிருந்தால், அதனை வெளியிட அரசு அனுமதித்திருக்கக் கூடும். இரங்கற்பாதானே!

பாரதியார் பாடவில்லைபோலும்! இதற்கான காரணத்தை அறிந்து கொள்ள இயலவில்லை.

திரு. பெரியசாமி தூரன் அவர்கள், பாரதியார் பற்றி ஆராய்ந்து ''பாரதி தமிழ்'' என்ற பெயரில் வெளியிட்டுள்ள நூலிலே, அந்த மகாகவி தமது கடைசி காலத்தில் 'சுதேச மித்திரனி'ல் எழுதிய கட்டுரைகள்—கவிதைகள் பற்றித் தகவல் தந்துள்ளார். அதிலே கூட, திலகர் மறைந்த போது அவர் மீது இரங்கற் பா பாடியதாகத் தகவல் இல்லை.

சிறை மீண்ட பின்புள்ள இரண்டரை யாண்டு காலத்திலே பாரதியார் எழுதியுள்ள சமயக் கவிதைகளிலே அதற்குமுன் புனைந்த கவிதைகளில் வெளிப்பட்ட புலமை நயமும் பொருட் செறிவும் தீர்க்கதரிசனமும் குறைவின்றிக் காணப்படுகின்றன.

''காந்தி பஞ்சகம்'' என்ற தலைப்பில் பாரதியார் எழுதியுள்ள ஐந்து செய்யுட்களிலே, 'மகாத்மா' என்ற புனிதச் சொல்லை அவர் முதன் முதலாகப் பயன்படுத்தியுள்ளார். பின்னர், உரை நடையிலும் அதனைத் தொடர்ந்து கையாண்டுள்ளார். எவ்வளவு தீர்க்க தரிசனம்!

## தடை அகன்றதா?

'பாரத மாதா நவரத்தின மாலை'யிலே, 'காந்தி சொற் கேட்டார் காண்பார் விடுதலை கணத்தினுள்ளே' என்று பாரதியார் கூறியிருக்கிறாரே, அதிலேயும் அவருடைய அரசியல் மேதா விலாசம் புலப்படுகின்றது. எட்டயபுரம் அரசருக்கு எழுதிய 'சீட்டுக் கவிதை'யிலே,

**புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்**
**தமிழ் மொழியைப் புகழி லேற்றும்**
**கவியரசர் தமிழ் நாட்டுக் கில்லையெனும்**
**வசையென்னாற் கழிந்த தன்றே!**

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது,
சொற் புதிது, சோதிமிக்க,
நவகவிதை, யெந்நாளு மழியாத
மகா கவிதை..."

என்ற வரிகளில் தமிழின் சுவை மட்டுமன்றி, தமது புலமையிலே கவிஞருக்கிருந்த தன்னம்பிக்கையுமல்லவா வெளிப்படுகிறது!

பாரதியார் மறைவதற்கு முன்னர், அரசு அவரது அரசியல் நடவடிக்கைகளுக்கு விதித்த தடை நீக்கப்பட்டதா இல்லையா என்பது தெளிவுபடத் தெரியவில்லை. அரசியல் ஆவேசக் கவிதை எதையும் அவர் புனையாததால் தடை நீக்கப்படவில்லை யென்றே அனுமானிக்க வேண்டியிருக்கிறது.

மகாகவி பாரதியார், தமிழகம் செய்த தவத்தால் பிறந்த அரசியல் புரட்சிக் கவிஞர்—அருட்கவிஞர்—சமூக சீர்திருத்தக் கவிஞர்! அவர், காலம் தந்த கவிஞர்! காலத்தை வென்ற கவிஞர்! அவர் பாடாத நிகழ்ச்சிகள், அந்த மகாகவியின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்ட காலத்தில் நிகழ்ந்தவையாகும். கவிஞன் சுதந்திரப் பறவையாக வாழ்வதன் அவசியத்தை பாரதியாரின் வாயிலாகவும் தமிழுலகம் அறிந்து கொள்ளுகிறது.

வாழ்க, பாரதி புகழ்!

[செங்கோல்; 5-1-75]

# கட்சி அரசியலும் கவிஞர் பாரதியாரும்

தேசியக்கவி பாரதியார் தமிழுக்குப் புதுவாழ்வு தருவதற் கென்றே அவதரித்தவர் என்று சொல்லலாம். குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரதப் பெருநாடு முழுவதையும் தமது தாய் நாடாகக் கருதிப் பாடல்கள் புனைந்த முதல் கவிஞர் பாரதியாராவார். அவரால் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலே தேசபக்திக் கவிதைகளும் சேர்க்கப் பெற்றன.

## கவிஞனுக்குக் கட்சி வேண்டுமா?

ஜனநாயக அரசியல் சகாப்தத்தின் முதல் கவிஞர் என்றும் பாரதியாரைக் கூறலாம். இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய ஜனநாயக அரசியல் ஸ்தாபனமாகிய காங்கிரசைத் தமது கவிதைத் திறத்தால் வளர்த்த பெருமை பாரதியாருக்கு உண்டு. அதனால், கட்சி வழிப் பட்ட அரசியலில் கவிஞனுக்குள்ள இடத்தை பாரதியாரைக் கொண்டு அறிய முயலுவோம்.

கவிஞனுக்குக் கட்சி வேண்டுமா? இந்த வினாவுக்கு தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் அளிக்கும் விடை என்ன? அவர் நேராக இதுபற்றி எதுவும் கூறவில்லையென்றாலும், அவரது வரலாறு இதுபற்றிக் கூறுகின்றது. என்ன கூறுகின்றது? 'வேண்டும்'—'வேண்டாம்' என்று இரண்டு விதமாகவும் விடையளிக்கின்றது — அதாவது, 'கட்சியைச் சார்ந்தும் சாராமலும் கவிஞன் சுதந்திர புருஷனாக வாழவேண்டும்' என்கிறது.

கவிஞர் பாரதியார், பொது வாழ்வில் புகுந்தது 1906 ஆம் ஆண்டிலாகும். அப்போது தமிழ் நாட்டில் நிலவிய ஒரே அரசியல் அமைப்பு இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைதான். வேறு அரசியல் அமைப்பு எதுவும் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. 1917ல் "ஜஸ்டிஸ் கட்சி" தோன்றியதென்ருலும், அது பிராமணரல்லாதார் கட்சியாதலால், அதிலே சேரவோ, அதனை ஆதரிக்கவோ பிராமண சமுதாயத்தில் பிறந்த பாரதியாருக்கு வாய்ப்பிருக்கவில்லை.

## காங்கிரசில் பாரதி

பாரதியார், தம் காலத்தில் இருந்த ஒரே அரசியல் அமைப்பான காங்கிரசில் சேர்ந்தார். அவர் 1907ல் நடந்த சூரத் காங்கிரசுக்குத் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகச் சென்றது வெளிப்படையாகத் தெரிகிறது. அதற்கு முன்னே பின்னே வேறு காங்கிரஸ் மகாசபை எதற்கும் அவர் சென்றதாகச் செய்தியில்லை. சூரத் காங்கிரசுக்குத் தமிழ் நாட்டின் பிரதிநிதியாகச் சென்றதால் அவர் காங்கிரசில் ஸ்தாபன ரீதியாகத் தொடர்பு கொண்டிருந்தது புலனுகின்றது.

சென்னை நகரில் காங்கிரஸ் கூட்டங்களில் அவர் பேசியதற்கும் சான்றுகள் இருக்கின்றன. தமது உரைநடைக் கட்டுரைகள் பலவற்றிலும் அவர் காங்கிரசை ஆதரித்தும், ஆதரிக்குமாறு மக்களைத் தூண்டியும் எழுதியிருப்பதைப் படிக்கிருேம்.

சூரத் காங்கிரஸ்பற்றித் தமது "இந்தியா" பத்திரிகையில் ஒரு சிறப்புக் கட்டுரை கூட எழுதி, அதனை ஒரு சிறு பிரசுரமாகவும் வெளியிட்டிருக்கிருர்.

பாரதியார் காங்கிரசைச் சார்ந்திருந்தது, அது இந்திய மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் தேசிய

மகாசபையாக விளங்கிய காலத்தில் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஆம்; அன்றைய காங்கிரஸ் இன்றைய காங்கிரஸ் போல அரசியல் கட்சிகளிலே ஒன்றாக இயங்கவில்லை. தேர்தலில் போட்டியிடும் பார்லிமென்டரி கட்சியாகவும் செயல்படவில்லை. இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப் பாடுபட்ட காலத்தில்தான் பாரதியார் அதிலே இணைந்திருந்தார். அதனால், பாரதியார் "காங்கிரஸ்காரர்" தான் என்றாலும் கட்சிக்காரர் அல்ல.

## கட்சிகளில்லாத காலம்

கட்சிகள் பலவாகிவிட்ட இந்த நாளிலே ஒரு கட்சியைச் சார்ந்து அதனை நேசிக்கும் கவிஞர், அதனுடைய மாற்றுக் கட்சிகளைப் பகைத்தாக வேண்டிய கட்டாயத்துக்கு ஆட்படுகிறார். அப்படிப் பகைக்கா விட்டாலும், அவர் தமது கட்சியின் வளர்ச்சியை விரும்பி தீவிரமாகப் பாடுபடுவாரானால், மற்ற கட்சிகள் அவரைப் பகைப்பது இயற்கை.

இந்த நிலை பாரதியார் காலத்தில் இருக்கவில்லை. அதனால் அவர் காங்கிரசைச் சார்ந்து நின்று அதன் கொள்கைகளுக்கு வெற்றி தேடப் பாடுபட்டார். அதற்காக அவர் மாற்றுக் கட்சிகளைப் பகைக்கவோ, மாற்றுக் கட்சிகள் அவரைப் பகைக்கவோ சந்தர்ப்பம் இல்லை. அந்நாளில், காங்கிரசைத் தவிர வேறு கட்சிகளே நாட்டில் இல்லையல்லவா!

காங்கிரஸ், கட்சியல்லாத தேசிய ஸ்தாபனமாக இருந்தும், அதற்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை பாரதியார். ஒரு கவிஞர் என்ற வகையில் காங்கிரசை வாழ்த்தியோ, பாராட்டியோ அவர் ஒரு கவிதை

கூடப் பாடவில்லை. அவர் புனைந்த கவிதைகளில் ஒன்றில் கூட "காங்கிரஸ்" என்ற சொல்லைக் காண முடியவில்லை.

இதற்குக் காரணம், காங்கிரசை தேசியக் கொள்கை களின் பெட்டகமாக அவர் பார்த்ததுதான். காங்கிரசின் கொள்கைகளான சுதந்திரம், சுதேசியம், தேசிய ஒருமைப் பாடு, தீண்டாமை ஒழிப்பு, வறுமையொழிப்பு, தாய் மொழிப் பற்று ஆகியவற்றைப் பற்றியெல்லாம் பாடி யுள்ளார். இந்தப் பாடல்களால் காங்கிரஸ் வளர்ந்தது; வாழ்ந்தது; இன்றும் வாழ்ந்து வருகிறது.

## தனிநபர் வழிபாடு

பாரதியார் தனி நபர் வழிபாட்டை விரும்பாதவர் என்றும் சொல்லலாம். இப்படிச் சொல்லும்போது தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், லாலா லஜபதி, காந்தியடிகள், வ. உ. சி. ஆகிய தேசியத் தலைவர் களை அவர் புகழ்ந்து பாடியிருப்பது நினைவுக்கு வருவது இயற்கை. அது தனி நபர் வழிபாடு அல்ல; தத்துவ வழிபாடு.

தாதாபாய், 1906-ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே "சுயராஜ்யம்" என்ற சொல்லை முதன் முதலில் உபயோகித்தார்.

அதன் பின்னர், அச் சொல் தேச பக்த மதத்தாரின் மந்திரச் சொல் ஆகிவிட்டது. இதனால், "சுயராஜ்யம்" என்ற தத்துவத்தைத் தந்துதவியவராக தாதா பாயைக் கருதி, அத் தத்துவத்தையும் தத்துவியையும் புகழ்ந்து பாடல் புனைந்தார்.

பாரதியார், லோகமான்ய பாலகங்காதர திலகரைப் புகழ்ந்து பாடல்கள் இயற்றக் காரணம், இவர் விடுதலைப் பாசறையின் முதல் தளபதி என்பதுதான். "சுயராஜ்யம்"

என்ற தத்துவத்தை தாதாபாய் தந்தாரென்றால், "அந்த சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. அதை என் வாழ்நாளில் நான் அடைந்தே தீருவேன்" என்று சொன்ன வியாக்கியான கர்த்தா திலகர்தான். அதனால், தத்துவியான தாதா பாயைப் புகழ்ந்த பாரதியார், அதற்கு வியாக்கியானஞ் சொன்னவரையும் புகழ்ந்தது இயற்கைதானே!

இதுபோல, லாலா லஜபதிராயைப் புகழ்ந்து பாடியது, அவர் ஒரு தலைவர் என்பதனால் மட்டுமல்ல; நாடு கடத்தப்பட்டு அமெரிக்காவிலிருந்தபோதுதான் லஜபதியைப் பாடினார். அது, பாரதியார் தம் கண்ணீரால் வரைந்த சோக கீதமாகும். கண்ணிகளாகத்தான் பாடினார். லஜபதி நாடு கடத்தப்பட்ட கொடுமையைப் பாடியது தேச பக்தியை வளர்க்கத்தான்; தனி நபர் வழிபாட்டை வளர்க்க அல்ல!

## தத்துவ வழிபாடு

தமிழரான வ. உ. சிதம்பரனாரையும் பாடினார் பாரதியார். இது வெறும் புகழ்ச்சியல்ல; ஒரு நிகழ்ச்சியைப் பற்றியது. திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுத் துரைக்கும் சிதம்பரனாருக்கும் நடந்த வாக்குவாதத்தையே பாடலாக்கினார். "வேளாளன் சிறை புகுந்தான்" என்று தொடங்கும் வ. உ. சி. பற்றிய பாடலும் அவர் சிறை புகுந்த நிகழ்ச்சி பற்றியதாகும்.

காந்தியடிகள் பற்றிய பாடல்களிலே, அவர் புதிதாகத் தோற்றுவித்த அகிம்சை—சத்தியாக்கிரகம்—ஒத்துழையாமை ஆகிய தத்துவங்களைப் போற்றிப் புகழ்கிறார். வெறுந் தலைவராக அல்லாமல், தத்துவியாகவே காந்தியடிகளைப் புகழ்கின்றார்.

கவிஞன் தனி நபர்களைப் புகழ்ந்து பாடவே கூடா தென்று விதி வகுத்திட முடியாது. புதிதாக தத்துவந் தந்த தலைவனைப் பாடலாம்; அந்தத் தத்துவத்திற்கு முதன் முதலில் வியாக்கியானந் தந்த வியாக்கியான கர்த்தாவைப் புகழ்ந்து பாடலாம். உண்மையான தளபதியைப் பாடலாம். போர்க் களத்திலே நிகழும் ஒரு புரட்சியை யொட்டி அந்தப் புரட்சியை நிகழ்த்திய வீரனைப் புகழ்ந்து பாடலாம். தலைவர்கள் வரிசையிலே வைத்து எண்ணத் தக்க தலைவர்களை பாரதியார் புகழ்ந்து பாடவில்லை. அப்படிப்பட்ட தலைவர்கள் அவர் காலத்திலும் இருந்தனர். அவர்களையெல்லாம் பாரதியார் மதித்தார். ஆனால், இறவாத கவிதை படைப்பதற்கென்றே அவதரித்த அவர், சாமான்யர்களைப் பாடவில்லை; சரித்திர நாயகர்களையே பாடினார். அதனாற்றான், அவருடைய அந்தக் கவிதைகள் இறவாப் பெருவரம் பெற்று விட்டன.

[''செங்கோல்'', 4-9-77]

# பாரதியார் இலக்கியத்திலே தீண்டாமைக்கு எதிர்ப்பு!

*பாரதியார் தீண்டாமையின் எதிரி. இதனை அறிந்து கொள்ள ஆராய்ச்சி தேவைப்படவில்லை. ஆயினும், தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திற்கு பாரதியாரின் இலக்கியத்திலுள்ள சிறப்பிடத்தை ஆராய்ந்து அறிவது தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டாகும்.*

*நம் தேசியக் கவிஞர் தாம் புனைந்த கவிதைகளில் இங்கு மங்குமாக சில இடங்களில்தான் தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். ஆனால் தம்முடைய உரை நடைக் கட்டுரைகளிலே தீண்டாமை ஒழிப்புத் திருத்தொண்டை ஒரு இயக்கமாகவே உருவாக்க உதவி புரிந்திருக்கிறார். முதலில், பாரதியாரின் கவிதைகளிலுள்ள கருத்துக்களைத் தொகுத்துப் பார்ப்போம்.*

*பாரதியார் 1906 ஆம் ஆண்டில்தான் தம்மை ஒரு தேசியக் கவியாக தமிழினத்தாருக்கு அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார். அந்த ஆண்டில் அவர் புனைந்த "வந்தே மாதரம்" என்னும் தலைப்புள்ள நாட்டுப் பாடலிலே.*

**ஈனப் பறையர்களேனும்—அவர்**
**எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?**
**சீனத்த ராய்விடு வாரோ?—பிற**
**தேசத்தார் போற்பல தீங்கிழைப் பாரோ?"**

*என்ற வரிகளில் 'பறையர்' எனப்படுவோ ரெல்லாம் நம்மவரே, நம் நாட்டவரே; நமக்கு அன்னியரல்லர்; நமக்குத் தீங்கு செய்யக்கூடிய பிற தேசத்தவரல்லர் என்று பறைசாற்றுகின்றார். இந்த வரிகளைக் கொண்ட "வந்தே*

மாதரம்'' பாடலானது, ''சுதேச கீதங்கள்'' என்னும் தலைப்பில் 1908ல் வெளியான பாரதியாரின் கவிதைத் தொகுப்பு நூலிலே காணப்படுகிறது. இதனால், தீண்டா மையை எதிர்த்துப் போராடும் கொள்கையை முழக்கிக் கொண்டேதான் பாரதியார் தமிழ் நாட்டிற்கு அறிமுகமா னார் என்பது உறுதிப்படுகின்றது.

## நந்தனார் நாடகத்தில்

கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய ''நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'' என்பது, தீண்டாமைக்கு எதிராக ஒரு இயக்கத்தையே தோற்றுவித்த நாடக இலக்கியமாகும். அதனால், அந்த இலக்கியம் நமது பாரதியாரைப் பெரிதும் கவர்ந்து விட்டது. அதிலுள்ள வர்ண மெட்டுகளை அவர் தம்முடைய பாடல்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார். அந்தண சாதியாரின் உயர்வு மனப்பான்மையை குறிப்பிடும் நந்தனார் சரித்திரப் பாடல்களுக்குரிய வர்ண மெட்டுகளைப் பயன்படுத்தி, ஆளும் சாதியாரான ஆங்கிலேயரின் ஆணவத்தை எடுத்துக் காட்டும் பாடல்களை பாரதியார் புனைந்துள்ளார்.

''தொண்டு செய்யும் அடிமை'' என்னும் தலைப்பிட்டு பாரதியார் ஒரு பாடல் புனைந்துள்ளார். அதன் கீழே, ''ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது'' என்று அந்தப் பாடலின் பொருளை விளக்கும் துணைத்தலைப்பு ஒன்றையும் தந்துள் ளார். அந்தத் துணைத்தலைப்பின் கீழே,(நந்தனார் சரித்திரத் திலுள்ள ''மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திரு நாளா?'' என்ற பாட்டின் வர்ணமெட்டு) என்ற குறிப்பு ஒன்றையும் அடைப்புக்குள் கொடுத்துவிட்டு,

''தொண்டு செய்யு மடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா?

**பண்டு கண்டதுண்டோ?—அதற்குப்**
**பாத்திர மாவாயோ?"**

என்று ஆங்கிலேயன் இந்திய தேசபக்தனைப் பார்த்துக் கூறும் ஆணவ வாதத்தைத் தந்திருக்கிறார்.

1908-ல் "சுதேச கீதங்கள்" என்னும் பெயரில் வெளியான நூலிலே "மேதா திலகருக்குச் சொல்வது" என்னும் தலைப்புள்ள பாடலை,

**"ஓய் நந்தனாரே நம்ம சாதிக் கடுக்குமோ?**
**நியாயந்தானோ நீர் சொல்லும்"**

என்ற நந்தனார் சரித்திரக் கீர்த்தனையின் வர்ண மெட்டிலே பாடியுள்ளார்.

## மிதவாதிகளுக்குத் தாக்கு!

செல்வச் செருக்கு காரணமாக உயர்வு மனப்பான்மை கொண்டவர்கள் பாரதியார் காலத்துக் காங்கிரசிலே தேசத் தலைவர்களாக வேஷம் போட்டனர். அவர்கள், "தேசியம்" பேசிக் கொண்டே பிரிட்டிஷாரிடம் விசுவாச முடையவர்களாகச் செயல்பட்டு வந்தனர். அந்த மிதவாதிகள் லோகமான்ய திலகரின் தலைமையில் திரண்டுவந்த தேசாவேசம் படைத்த உண்மைத் தேசிய வாதிகளை "கலகக்காரர்கள்" என்று வருணித்தனர். இவர்களை, நந்தனாருக்கு அறிவுரை புகன்ற சேரித் தலைவர்களின் நிலையில் வைத்து,

**"ஓய் திலகரே! நம்ம ஜாதிக் கடுக்குமோ?**
**செய்வது சரியோ, சொல்லும்"**

என்னும் பல்லவியைக் கொண்ட பாடலை இயற்றியுள்ளார்.

1906ஆம் ஆண்டு தொடங்கி 1908ஆம் ஆண்டு வரை தேசம் முழுவதிலும் "சுதேசிக் கிளர்ச்சி" உருவானது. அந்தக் கிளர்ச்சியை, காங்கிரஸ் தலைவர்களாக இருந்தவர்

களிலே ஒரு சாராரான மிதவாதிகள் அடியோடு வெறுத்தனர். அவர்களை நந்தனுடைய முற்போக்கு மனம் கண்டு அதிர்ச்சியடைந்த சேரித் தலைவர்களோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் பாரதியார். அந்தப் பாடலின் தலைப்பு "நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்" என்பதாகும். பாடலின் பல்லவியிலே, "நாமென்ன செய்வோம், துணைவரே! இந்த பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம்" என்று கூறுகின்றார்.

மேலே எடுத்துக் காட்டிய பாடல்களிலே சேரி மக்களைத் துன்புறுத்தும் உயர் சாதியாரின் கொடுமையை, இந்திய மக்களைத் துன்புறுத்தும் ஆங்கிலேயர் செயலுடன் பாரதியார் ஒப்பிட்டிருக்கிறார். இந்து சமுதாயத்திலே தோன்றிய தீண்டாமைக் கொடுமைதான் இந்தியாவை ஆங்கிலேயர் அடிமை கொள்ளக் காரணமாக இருந்தது என்பதனைச் சொல்லாமல் சொல்லுகிறார்.

நந்தனார் சரித்திரத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் தந்துள்ள பாடல்களின் வர்ணமெட்டுகளேயன்றி, அந்தப் பாடல்களின் கருத்துக்களையும் தழுவித் தேசியப் பாடல்களை பாரதியார் இயற்றியிருப்பது இலக்கியத் துறையில் அவர் நிகழ்த்திய புரட்சி என்று சொல்லலாம்.

சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்திலே சேரிவாழ் நந்தனை சிவபக்தனாக மட்டுமே காட்டினார். அதிலே அந்தண மிராசுதார் பாத்திரம் கிடையாது. சேக்கிழாரின் நந்தன் ஏர் பிடித்து உழுது பயிர்த் தொழில் செய்யும் உழவனுமல்லன். கோபால கிருஷ்ண பாரதியார் படைத்த நந்தனார் சரித்திரத்திலே தான் அந்தண மிராசுதார் பாத்திரம் புதிதாகப் படைக்கப் பட்டிருக்கிறது. அதிலே, நந்தனை உழவனாக்கி, அந்தணர் —அரிசனர் போராட்டத்தை மட்டுமன்றி, உழவன்—

மிராசுதார் போராட்டத்தையும் கோபால கிருஷ்ண பாரதியார் காட்டியிருக்கிறார். பார்ப்பன மிராசுதாரரை எதிர்த்துப் போராடும் கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார்தான் பாரதியாரைக் கவர்ந்தார். அதனால்,

"நந்தனைப் போலொரு பார்ப்பான்—இந்த
நானிலத்தில் இல்லை கண்டீர்"

என்று பாடினார். உரை நடைக் கட்டுரைகளிலேயும் அந்தண மிராசுதாரரை எதிர்த்துப் போராடும் உழவனாகவே நந்தனைக் குறிப்பிடுகின்றார்.

தேச விடுதலையிலே நந்தன் குலத்தினர் விடுதலையும் அடங்கியிருக்க வேண்டும் என்று பாரதியார் அறிவுறுத்தினார். இந்திய மக்களின் விடுதலை வாழ்வு அரிசன மக்களின் விடுதலை வாழ்விலிருந்துதான் ஆரம்பமாக வேண்டுமென்றும் அவர் விரும்பினார்.

## பறையருக்கும் விடுதலை!

"விடுதலை" என்னும் தலைப்புடைய பாடலிலே, 'பரவர்'—'குறவர்'—'மறவர்' ஆகிய பிற்பட்ட சாதியாரின் விடுதலையையும் குறிப்பிடுகிறாரென்றாலும், 'பறையர்' — 'தீயர்'— 'புலையர்' எனப்படும் தாழ்த்தப்பட்ட சாதிகளின் விடுதலைக்கே முதன்மை தருகிறார். "விடுதலை" என்னும் பாடலின் முதல் வரிகள் வருமாறு;

"பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை"

பாரதியாரின் கவிதைத் தொகுப்பிலே தீண்டாமைக்கு எதிராக மேலே நாம் எடுத்துக் காட்டிய கருத்துக்களையே காண முடிகின்றது. பொதுவாக, சாதி வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்க்கும் கருத்துக்களே கவிதைத் தொகுப்பில் மிகுதியாகக் காணப்படுகின்றது. அதிலே தீண்டாமை எதிர்ப்புணர்ச்சியும் கலந்திருக்கிறது அல்லவா?

இனி, பாரதியாரின் உரைநடைக் கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களைத் தொகுப்போம்.

"பாரதியார் - கட்டுரைகள்" என்னும் நூலிலே, "சமூகம்" என்னும் துணைத் தலைப்பின் கீழ் "ஆறிலொரு பங்கு" என்னும் கதைப் போக்கிலான கட்டுரை ஒன்று காணப்படுகின்றது. தலைப்பிலேயே இந்து சமுதாயத்தின் மக்கள் தொகையில் ஆறிலொரு பங்கு தாழ்த்தப்பட்ட சாதியார் என்று அறிவிக்கின்றார் பாரதியார். இந்தக் கட்டுரைக்கு அவர் எழுதியுள்ள 'முகவுரை' வருமாறு:

"ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.

"இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும், அமரத் தன்மையும் கொடுக்கும் "நாந்ய: பந்தா வர்த்ததே அயநாய;" வேறு வழியில்லை.

"இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்."

## உழவர், வணிகரா?

பண்டை நாளில் இந்து சமயத்தில் நிலவிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணங்களிலே உழவுத் தொழில் செய்வோரை நான்காவதாக உள்ள வேளாளர் வருணமாகவே வகுத்தனர். வடமொழியிலே பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற வருணங்

களாகச் சொல்லப்பட்டது. ஆனால், வழக்கத்திலே நான்காவதாகவுள்ள சூத்திர வகுப்பு இழிசாதியாகக் கருதப்பட்டு வந்தது. தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களிலே மிகப் பெரும்பாலோர் உழவுத் தொழிலையே செய்து வருகின்றனர். பாரதியார் நான்காவது வருணத்தவராகக் கருதப்பட்ட உழவர்களை மூன்றாவது வருணத்திலே சேர்த்து வடமொழியின் வழியிலே வைசியர் என்று குறிப்பிட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட சாதிக்கு இழைக்கப்படும் கொடுமையை எதிர்க்கும் கட்டுரையை அந்தச் சாதிக்கே அர்ப்பணம் செய்திருக்கிறார்.

> "நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரட்சிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்கள்."

என்று பாரதியார் குறிப்பிட்டிருப்பது அந்நாளில் புரட்சிகாமான கருத்தாகும்.

அரிசன மக்களை வைசிய வருணத்தில் தாம் சேர்த்ததற்கு "ஆறிலொரு பங்கு" என்னும் கட்டுரையிலேயே காரணம் சொல்லுகிறார்.

> "தென்னாட்டில் கடைசி வகுப்பினர் என்று கருதப்படுவோர் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே கைக்கொண்டிருக்கிறார்கள். உழவுத் தொழிலுடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்களாக வேண்டும்."

# பாரதியார் இலக்கியத்தில் தீண்டாமைக்கு எதிர்ப்பு!

எட்டயபுரம் தேசியக் கவிஞர் பிறப்பால் அந்தணர். ஆயினும், "பஞ்சம வருணத்தவர்", "பறையர்" என்றெல்லாம் கூறி புறக்கணிக்கப் படுவோருக்காகப் புரட்சிக் கீதம் பாடினுர். கட்டுரை பலவும் கனல் தெறிக்க எழுதினுர். இதோ :

"தாழ்ந்த ஜாதியாரை நாம் மிதமிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பயன்களை நாம் அனுவிக்கிறேம்."

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததையெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிருர்கள்."

"நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும் நெட்டால் திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களாஞல், ஊருக்கு வெளியே சேரிகளில்தான் வாசம் செய்ய வேண்டும். ஸாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. சுருக்கம்: நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம். இப்போது, நம்மெல்லோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகின்றுர்கள்.

"நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினர் என்று விலக்கினேம்; இப்போது, ஹிந்து ஜாதி முழுவதையுமே உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகின்றது".

## நமது இரத்தத்தின் ரத்தம்!

பாரதியார் தீண்டாமைக் கொடுமையானது தாழ்த்தப் பட்ட மக்களை பயங்கரமான பஞ்சத்திலும் பட்டினியிலும் ஆழ்த்தி யிருப்பதை வேதனையோடு வருணித்திருக்கிறார். அதையும் பார்ப்போம்:

''பஞ்சத்தில் பெரும்பாலும் பள், பறை வகுப்பினரே மடிந்து போகிறார்கள். இதைப்பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமலிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து, நூற்றுக் கணக்கான மனிதர்களையும், முக்கியமாக திக்கற்ற குழந்தைகளையும் கிறிஸ்து மதத்திலே சேர்த்துக் கொள்கிறார்கள். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்த மடைந்து வருகின்றனர்.

''ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம் சதை, நமது எலும்பு, நமது உயிர் — ஹிந்துஸ்தானத்து ஜனங்கள்—ஏன் என்று கேட்பாரில்லாமல் பசிப் பிணியால் மாய்ந்து போகின்றனர்.''

(ஆறில் ஒரு பங்கு; அத். 3.)

பாரதியார் தமது உரைநடைக் கட்டுரைகளிலே ''பறையர்,'' ''பஞ்சமர்'' என்னும் இருவேறு தலைப்புகளின் கீழ் இரண்டு கட்டுரைகள் தாழ்த்தப்பட்ட சாதியார் பற்றியே எழுதியிருக்கிறார். இதோ, ''பறையர்'' என்னும் கட்டுரையில் அவர் கூறுகிறார்:

''பறையரை'', 'பரை' (அதாவது ஆதிசக்தி முத்துமாரி) யின் மக்களென்றும் பொருள் சொல்வதுண்டு. நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம்

நேரே நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கைநீட்டாமல் இருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள். சென்னைப் பட்டணத்திலே நாலு பட்லர்கள் ஹிந்து மதத்தை உல்லங்கனம் செய்த போதிலும், நாட்டிலுள்ள பறையர் எல்லாரும் உண்மையான ஹிந்துக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்களைக் கைதூக்கி விட்டு மேல் நிலைக்குக் கொண்டு வருதல் நம்முடைய தொழில்.

"மடாதிபதிகளே! நாட்டுக் கோட்டைச் செட்டிகளே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக் கூடிய கைங்கர்யம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாக்கும் கைங்கர்யம்."

"பஞ்சமர்" என்னும் தலைப்புள்ள கட்டுரையிலும் பாரதியார் தாழ்த்தப்பட்ட சாதியாருக்கு உரிமைகள் வழங்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறார். அதற்காக முயற்சி எடுத்து வருவோரை யெல்லாம் பாராட்டுகிறார். அது வருமாறு:

"முற்காலத்தில் நந்தனார் தோன்றியது போலவே, இப்போது மேற்படியார் குலத்தில் ஸஹஜாநந்தர் என்ற ஸந்யாஸி ஒருவர் நல்ல பக்தராயும் ஸ்வஜனாபிமானம் உடையவராகவும் தோன்றியிருக்கிறார். அவரது முயற்சிகளை முன்னுக்குக் கொண்டு வரும்படி உதவி செய்ய விரும்புவோர் குத்தியில் ஸ்ரீ. கேசவப்பிள்ளை திவான் பகதூருக்கு எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

"மேற்படி ஸஹஜாநந்தர் சிதம்பரத்திற்கு அருகே ஒரு கிராமத்தில் பறைப் பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் போட்டிருக்கிறார். இப்போதைக்கு மண் கட்டிடம்; கூரை வேய்ந்திருக்கிறார்கள். அதில் 400 பிள்ளைகள் வரை ஏற்கனவே சென்று படிக்கின்றார்கள்.

"தியஸாபிகல் சங்கத்தார் சில பஞ்சம பாடசாலைகளை ஏற்படுத்தி அந்த ஜாதியாரை மேன்மைப்படுத்தும் பொருட்டு மிகுந்த சிரத்தையுடன் உழைத்து வருகிறார்கள். ஸ்ரீமதி அனிபெஸண்டுக்கு இந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அன்பும் உத்ஸாஹமும் மெச்சத் தகுந்தன.

"ஹிந்துக்களுடைய விடுதலையிலும் மேம்பாட்டிலும் மிகுந்த நாட்டத்துடன் உழைத்து வரும் ஸ்ரீ. நீதிபதி மணி ஐயரும், வைத்தியர் நஞ்சுண்ட ராயரும், சுதேசமித்திரன் ரங்கசாமி ஐயங்காரும் பறையர் குலத்தைக் கைதூக்கி விடுவதில் தம்மால் இயன்றவரை உதவி செய்து வருவதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்."

## 'ஜாதிக் குழப்பம்!'

"ஜாதிக் குழப்பம்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையிலும் தீண்டாமை ஒழிப்புபற்றிக் குறிப்பிடுகிறார். அது வருமாறு:

> "பெரும்பாலும் தாழ்ந்த ஜாதியார்களே அதிக ஏழைகளாக இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத விஷயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்தி வரும் வகுப்பினருக்குள்ளே அதிக வலுவு ஏற்படும். அநீதி உலகம் முழுவதிலும் இருக்கிறது. எனினும், நம்முடைய தேசத்தைப் போல் இத்தனை மோசமான நிலைமை வேறெங்கும் இல்லை".

இந்திய பெருநாடு அயல் நாடுகளிலிருந்து படையெடுத்து வந்தவர்களுக்கு அடிமைப்படக் காரணமாக

இருந்தது தீண்டாமைக் கொடுமைதான் என்று தக்க சான்றுகள் காட்டி பாரதியார் கூறுகின்றார்.

"1200 வருஷங்களுக்கு முன்பு வட நாட்டிலிருந்து மகமதியர்கள் பஞ்சாபில் பிரவேசித்தபோது நம்மவர்களின் இமிசை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர் பறையர் பேரிகை கொட்டி மணிகள் அடித்துக்கொண்டு போய் எதிரிகளுக்கு வரவு கூறி, அவர்களுடன் கலந்து கொண்டதாக இதிகாசம் சொல்லுகின்றது. அப்போது நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கின்றது."

இந்தியா அடிமைப்பட்டதற்கு மட்டுமின்றி, ஹிந்து மதம் பலவீனப்பட்டதற்கும் தீண்டாமைக் கொடுமையே காரணம் என்பது பாரதியாரின் கருத்து. அவர் சொல்லுகிறார் :

"பசித் துன்பம் எல்லோருக்கும் பொதுவாக இருந்தாலும், கீழ் வகுப்பினருள் அதிகமாகப் பாதிக்கிறது. நாட்டில் பஞ்சம் நேரிட்டால் பஞ்சமர் முதலிய தாழ்ந்த வகுப்பினர் அதிகமாகச் சாகிறார்கள். பறையரும் புலையரும் பள்ளரும் சக்கிலியரும் நம்மைப்போல ஹிந்துக்கள் என்பதையும், விபூதி நாமம் போட்டுக் கொண்டு நமது தெய்வங்களை வணங்குவோர் என்பதையும் மடாதிபதி, புரோஹிதர், குருக்கள் முதலியவர்கள் சற்றே மறந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது."

## திருத்தொண்டர் புராணம்

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களை ஆராய்ந்தால், தீண்டாமை என்னும் கொடுமைக்குத் தமிழரிலே ஒரு பகுதியார் ஆளான செய்தியை முதன் முதலாக பெரிய புராணத்திலேதான் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள

முடிகிறது. ஆம்; "திருநாளைப் போவார் புராணம்" என்னும் பெயரிலுள்ள நந்தனர் கதையின் மூலமாக! திருத் தொண்டர் புராணத்திலே வரும் திருநீலகண்ட யாழ்ப் பாணர் புராணத்திலேயும் தீண்டாமையின் சுவடு தெரிகிறது. சேக்கிழார் பெருமான் தீண்டாமையை ஒழிக்கும் வகையிலேயே நந்தனரையும், திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். இந்தப் புராணத் திற்குப் பின் வந்த எந்த இலக்கியத்திலேயும் தீண்டா மைக்கு எதிரான கருத்துக்கள் திட்டவட்டமாகக் கூறப் படவில்லை.

தேவாரத்திலும், நாலாயிரப் பிரபந்தத்திலும் 'புலையர்' எனும் சாதியாரைப் பற்றிய குறிப்பு ஒன்றிரண்டு இடங்களில் காணப்படுகின்றது. "கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில், ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் அவரே யாம் வணங்கும் அடிகளார்" என்கிறார் திருநாவுக்கரசர். "ஆதியாய் அரவணையாய் என்பாராகில், அவர் சாதியால் புலையராயினும், பக்தியால் எம்மவரே" என்கிறார் ஒரு ஆழ்வார்.

## தீண்டாமையின் எதிரி!

இதெல்லாம் சமூக ரீதியில் தீண்டாமையை எதிர்த்துச் சொன்ன கருத்துக்களல்ல. வள்ளற் பெருமான், சாதி வேறுபாடுகளையே அடியோடு வெறுத்தார். அவர்கூட, தீண்டாத சாதியார் பற்றித் தனியாக கவிதையிலோ, உரை நடைக் கட்டுரைகளிலோ எதுவும் கூறவில்லை. சேக் கிழாருக்குப் பின் வாழையடி வாழையெனத் தோன்றிய தமிழ்க் கவிஞர்களிலே சுப்பிரமணிய பாரதியார் ஒருவர் தான் தீண்டாமையை எதிர்த்துக் கட்டுரைகளையும் கவிதை

களையும் புனைந்தளித்தார். அது, பாரதியாருக்குள்ள தனிப் பெருமை யாகும்.

தீண்டாமையை ஒழிப்பதிலே தீவிரங் காட்டத் தொடங்கியிருக்கும் தமிழ் நாட்டுச் சீர்திருத்தக்காரர்கள், பாரதியாரின் இலக்கியங்களிலுள்ள புரட்சிகரமான கருத்துக்களைப் பயன்படுத்துவார்களானுல், அது தமிழுக்குச் செய்யும் தொண்டாகவும் இருக்கும்.

# பாரதியாரின் தீர்க்கதரிசனம்!

பாரதியார், மூன்று மகா கவிகளைத் தேர்ந்தெடுத்து, ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்—வள்ளுவர்போல்—இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று அவர்களைப் புகழ்ந்து பாடினார். தனி நபர்களை, தத்துவங்களை மதிப்பிடுவதிலே பாரதியாருக்குத் தனித்திறமை இருந்திருக்கிறது. அவருக்கு இருந்த அந்தத் திறமையை வேறு கவிஞர்களிடம் காண முடியவில்லை.

வாழையடி வாழையெனத் தோன்றி வந்த கவிஞர்களிலே சீவக சிந்தாமணி காவியம் தந்த திருத்தக்க தேவர் இருக்க, திருத்தொண்டர் புராணம் தந்த சேக்கிழார் இருக்க, கந்தபுராணம் படைத்த கச்சியப்பர் இருக்க, திருவிளையாடல் புராணம் தந்த பரஞ்சோதி முனிவர் இருக்க, கம்பனையும்—வள்ளுவனையும்—இளங்கோவடிகளையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டியதற்குக் காரணம் என்ன?

## மூவகைப் புலவர்

இலக்கிய வகைக்கு ஒருவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார். நீதி நூலுக்காக வள்ளுவரையும், தமிழிலே தலைக் காப்பியம் தந்ததற்காக இளங்கோவையும், வால்மீகி ராமாயணத்திற்கு வழிநூல் படைத்ததற்காக கம்பரையும் தேர்ந்தெடுத்தார். தமிழிலே எத்தனையோ நீதிநூல் இருந்தாலும் வள்ளுவன் படைத்த முப்பாலுக்கு ஒப்பாக ஒரு நூல் ஏது? இளங்கோவுக்கு முன்பு பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் இருந்திருப்பினும், காப்பியமில்லாத குறை

யைச் சிலப்பதிகாரத்தைப் படைத்ததன் மூலம் இளங்கோ வடிகள்தானே தீர்த்து வைத்தார்?

தமிழிலே வடமொழி இலக்கியங்களுக்கு வழி நூல் களாகத் தோன்றிய காப்பியங்கள் பல இருக்கின்றன. ஆனால், அவற்றுள்ளே தலையாயது கம்பன் படைத்த ராமா யணக் காப்பியந்தானே! இந்த உண்மைகளை உணர்ந்து தான் அந்த முப்பெரும் புலவர்களைத் தமிழ்க் கவிஞர்களின் பட்டியலி லிருந்து தனியே பிரித்தெடுத்து அவர்களைப் பாராட்டியிருக்கிறார்.

இந்திய நாட்டிலே தேசப் பெருந் தலைவர்களெல்லாம் சோஷலிசம் பற்றிச் சிந்திக்காத காலத்திலே பாரதியார் அதுபற்றிக் கவிதைகள் மூலமாகவும், கட்டுரைகள் மூல மாகவும் மக்களுக்குப் போதித்தார். "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை" என்று பாடினார். சோஷலிசச் சித்தாந்தத்திலே உலக நாடு களுக்கு வழி காட்டியாக சோவியத் யூனியன் மலராத காலத்திலே, பாரதி பாடியிருக்கிறார் சோஷலிசத்தைப் பற்றி.

"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினி யுண்டோ?"

"இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்று பாடினார். இந்த சோஷலிச உணர்வு பாரதியாரிடம் வெளிப்பட, அவருக்குத் துணை புரிந்த சக்தி எது? அவரையும்

அவரது குடும்பத்தையும் வாட்டி வதைத்த "வறுமை" தான். பாரதியாருக்கு சோஷலிசத்தைக் கற்றுக் கொடுத்தது அவர் அன்றாடம் சந்தித்து வந்த வறுமைதான். அவரது வீட்டின் அடுப்பில் பூனை தூங்கியதே, அந்தக் காட்சி சோஷலிசத்தைக் கற்றுக் கொடுத்தது. அவருக்குப் பிறந்த பச்சிளங் குழந்தை பாலுக்காகப் பதறியழுததே, அந்த அழுகுரலின் மூலம் சோஷலிசத்தை அவர் அறிந்திருக்க வேண்டும். அதனுற்றான், 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்' என்று குரல் கொடுத்து உண்மை சோஷலிஸ்டாக இருந்தார்.

## காந்தியம் கலந்த சோஷலிசம்!

பாரதியார் அந்த நாளிலேயே காந்திசத்தோடு இணைந்த சோஷலிசத்தையே விரும்பினுர். அப்போதுதான் தோன்றிக்கொண்டிருந்த காந்திசத்தை வரவேற்று, ஐந்து செய்யுள்களால் "காந்தி பஞ்சகம்" பாடினுர். வெறும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாக இருந்தவரை 'மகாத்மா, நீ வாழ்க, வாழ்க!' என்று பாடுமளவுக்குத் தீர்க்கதரிசியாக இருந்தார் பாரதியார். இந்திய அரசியலில் காந்தியடிகள் ஈடுபடத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே அவரிடம் அடங்கியிருந்த ஆற்றல்களை நம்முடைய ஏழைக் கவிஞர் அறிந்திருந்தார். பிற்காலத்தில் அடிகள் வெளிப்படுத்த விருக்கும் அற்புதங்களை யெல்லாம் பாரதியார் அறிந்திருந்தார். அதனுற்றான்,

**'மாந்த ரெல்லோரும் சோர்வை**
**அச்சத்தை மறந்து விட்டார்.**
**காந்தி சொல் கேட்டார், காண்பார்**
**விடுதலை கணத்தினுள்ளே'**

என்று பாடினுர். இதைச் சொல்லத் தீர்க்கதரிசனம் மட்டுமல்லாமல், நெஞ்சுத் துணிவும் தேவைப்பட்டது அந்த

நாளிலே! 1941ஆம் ஆண்டிலே கூட—பாரதியார் மறைந்து 20 ஆண்டுகள் சென்ற பின்னர் கூட—"காந்தியடிகளின் சத்தியாக்கிரக முறையால் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்காது" என்று பேசிய பேரறிஞர்கள் உண்டு. காந்தியடிகள்—ஒத்துழையாமைப் போர், உப்பு சத்தியாக்கிரகப் போர், தனிநபர் சத்தியாக்கிரகம் ஆகிய போராட்டங்களை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நடத்தி, ஆகஸ்டுப் புரட்சிக்கு நாட்டைத் தயாரித்துக் கொண்டிருந்த நேரத்திலேயும், "காந்தி சொல் கேட்டால் தேச விடுதலையைக் காண முடியாது" என்று அவலக்குரல் எழுப்பும் தேசத் தலைவர்கள் இந்த நாட்டில் இருந்தனர். அதற்கு விலக்காக 1917லேயே "காந்தி சொல் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தினுள்ளே" என்று நம்முடைய செந்தமிழ்ப் பாவலன் பாடினான் என்றால், அவன் இதயத்திலிருந்து இறைவனே அப்படிப் பாடவைத்தான் என்றுதான் சொல்லவேண்டும்.

தேசத் தலைவர்கள் பாரத மண்ணுக்குச் சுதந்திரம் தேடுவது பற்றி நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், "பாரதப் பெருநாடு பெறும் சுதந்திரமானது இந்திய சமுதாயத்திலுள்ள கடைத்தரமான மனிதனுக்கும் பயன் படவேண்டும்" என்று பாரதியார் பாடினார். காந்தியடிகள், அறிஞர் ரஸ்கினுடைய உபதேசமான "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்னும் பொன்மொழியை இந்திய மக்களுக்குப் போதித்தார். இந்தப் பொன்மொழியின் பொருளை நினைவில் கொண்டு,

"பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!"

என்றார் பாரதியார். தேசம் பெறும் விடுதலையிலே உயர் சாதியினரின் கொடுமைகளால் வருந்தும் தாழ் சாதிகளுக்கும் பங்கு இருக்க வேண்டுமென்று எண்ணியது பாரதி

யின் உள்ளம். இந்த நாட்டிலே மக்களை சாதி சாதியாகப் பிரித்து, ஒரு சாதிக்கு இன்னொரு சாதியை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறோம். அப்படி அடிமைப்பட்டிருக்கும் சாதிகள் ஒன்றல்ல, பல; அந்த சாதிகளுக்கும் விடுதலை வேண்டும் என்கிறார் பாரதி. மறவருக்கும் விடுதலை—அவர் களினும் தாழ்ந்த நிலையிலுள்ள பரவருக்கும் விடுதலை—அவர்களினும் தாழ்ந்த நிலையிலுள்ள குறவருக்கும் விடுதலை —அவர்களினும் தாழ்ந்த நிலையிலுள்ள பறையருக்கும் விடுதலை—அவர்களினும் தாழ்ந்த நிலையிலுள்ள புலையருக் கும் விடுதலை அமைவதாக தேச விடுதலை இருக்க வேண்டும் என்கிறார். இன்னும் ஒருபடி மேலே போய், பெண் குலத் திற்கும் விடுதலை வேண்டும் என்கிறார்.

> "மாதர் தம்மை இழிவு செய்யும்
> மடமையைக் கொளுத்துவோம்"

என்கிறார். "தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்றும் பெண் விடுதலையைப் பிரகடனம் செய்தார். நாடு சுதந்திரம் பெற்று பெண்மணி ஒருவர் பிரதமர் பதவிக்கு வருவதற்கு முன்பே—சுதந்திர இந்தியா வில் ஆண்களுக்குள்ள அனைத்து உரிமைகளும் பெண்களுக் கும் உண்டு என்று இந்திய அரசியல் சட்டம் உறுதியளிப்ப தற்கு முன்பே—பாரதியார் பெண்ணுரிமை பற்றிப் பாடினார்.

**'எம்மிடங் காட்டினார்'...**

> "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
> பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று புதுமைப் பெண் பாடுவதாகப் பாடி வைத்துள்ளார் பாரதியார். அவர் காலத்திலே இப்படிச் சொல்வதற்குத் துணிவு தேவைப்பட்டது. பெண்களை அடிமைப்படுத்திய

ஆண்களுக்கு மத்தியிலே வாழ்ந்துகொண்டு அவர் பெண்ணுரிமை பற்றிப் பாடினுர். பாரதி கண்ட புதுமைப் பெண் பாடுகிருள்:

**"மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்**
**மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே—**

வீட்டினில் காட்டினுர்; யாரிடம் காட்டினுர்? படித்த பெண்களாகிய எம்மிடம் காட்டினுர்; என்ன ஆயிற்று? அதை—"ஆடுகள் மாடுகள் போன்று, பெண்களை வீடுகளைத் தொழுவமாக்கி அடைப்பதை—வெட்டி விட்டோம் என்று கும்மியடி" என்கிருள். மேலும் பாடுகிருள் புதுமைப் பெண்.

**"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே**
**கடற்கரை சென்று உலாவிடு வோம்."**

என்று அவள் பாடவில்லை. "காதல் ஒருவனைக் கைப் பிடித்து, அவன் காரியம் யாவினும் கை கொடுப்போம்" என்று பாடுகின்ருள். "அப்படிச் செய்தால் பழைய அறங்கள் என்ன ஆவது?" என்று கேட்கும் பாட்டிமார் களுக்கு அந்தப் புதுமைப் பெண்,

**"மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!"**

என்று சொல்கின்ருள்.

## புதுமைக் கவி

தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார் இந்நாளைய சமூக சீர்திருத்தக்காரர்களாலும் புதுமைக் கவி என்று போற்றப்படுகிருர். அவர் செய்த புதுமைகளிலே தலையாயது பெண் விடுதலைக்குப் பாடியதாகும். அதிலே அவர்தான் முன்னேடியாக விளங்குகிருர்.

அவர் காலத்திலே சமுதாயத்தில் சரிபாதியினரான பெண்கள் அடிமைத்தனத்தில் ஆழ்த்தப்பட்டிருந்தனர். அந்தக் கொடுமை கண்டு பாரதியார் குமுறினார். பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்து,

**''பெண்ணுக்கு விடுதலையென்று**
**இங்கோர் நீதி பிறப்பித்தேன்!''**

என, தமது சுயசரிதையில் கூறுகின்றார் பாரதியார். 'பெண்மை' என்னும் தலைப்பிட்டு கவிதை ஒன்றைப் படைத்தார். அதிலே, ''பெண்மை வாழ்க' என்று கூத்திடுவோமடா!'' என்றும், ''பெண்மை வெல்க' என்று கூத்திடுவோமடா!'' என்றும் கூறுகின்றார்.

ஆம்; ஆண்கள் எல்லாம் கூடி, 'பெண்மை வாழ்க' என்று ஓராயிரம் முறை கூறி, ஆணோடு ஆண் கைகோத்துக் கூத்தாட வேண்டுமாம்! பெண்ணுக்கும் ஆணுக்கும் வாழ்க்கைத் துறைகளிலே போட்டி ஏற்பட்டு விட்டால், ''பெண்மை வெல்க!'' என்று முழக்கமிட்டுக் கூத்தாட வேண்டுமாம்! யார்? பெண்களிடம் தோல்வியுற்ற ஆண்கள்! பலே, பலே!

## 'நாடு குலுங்கிடக் கும்மியடி!'

பாரதியார் புதுமைப் பெண்களைக் கற்பனை செய்து, அந்தப் பெண்கள் கும்மியடித்துப் பாடுவதாக ஒரு கவிதை புனைந்துள்ளார். கும்மியடித்துப் பாடி மகிழ்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டுக் கலையல்லவா? அந்தக் கும்மிப் பாட்டுக்கு ''பெண் விடுதலைக் கும்மி'' என்று பெயர் தந்துள்ளார். அப்பாடலின் தொடக்கத்திலே,

**''கும்மி யடி! தமிழ் நாடு முழுதும்**
**குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!''**

என்று கூறுகின்ருள், பாரதி கண்ட புதுமைப் பெண். பழமையில் நம்பிக்கையுடைய பெண்கள் கூடிக் கும்மியடித் தால், அவர்களுடைய கொங்கைகள் மட்டுமே குலுங்கு மாம். ஆம்; அப்படிப் பாடிய புலவர்களும் உண்டு. புதுமைப் பெண்கள் கூடிக் கும்மியடித்தால், தமிழ் நாடு முழுவதுமே குலுங்கிடுமாம்! இது, பாரதியின் சித்தாந்தம். இன்று நடைமுறையிலும் அதைத்தானே பார்க்கிருேம். சமுதாயத்தைத் தலைகீழாக மாற்ற—சோஷலிச சமுதாயம் படைக்க—ஒரு தலைவி தோன்றிஞல், நாடே குலுங்கு கிறதே! புதுமைப் பெண்களைப் பாரதியார் கற்பனையில் தான் கண்டார்; நாமோ, இன்று கண்ணெதிரே காண் கின்ருேம். பாரதி கண்ட புதுமைப் பெண்,

**''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;**
**எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்**
**இளைப்பில்லை காண்என்று கும்மியடி''**

என்று பாடுகின்ருள். பாரதியார் பாடியுள்ள பெண் விடுதலைக் கீதங்களை இன்று வெறுப்பாரில்லை; விரும்பிப் படிப்பாரே உண்டு. ஆனல், அவர்களில் எத்தனை பேர் பெண்ணின் தலைமைக்குப் பெருமை செய்கின்றனர்?

## பெண்மையரசு!

இந்நூற்ருண்டில் உலகில் நான்கு நாடுகளில் பெண் களிடம் ஆட்சியை ஒப்புவித்தனர், அந்த நாடுகளிலுள்ள மக்கள். ஒன்று, இஸ்ரேல்; மற்ருென்று, இலங்கை; இன்னென்று, இந்தியா. பின்னென்று, பிரிட்டன்.

இந்த நான்கு நாடுகளிலே இந்தியாதான் மிகப் பெரிய நாடு. இஸ்ரேலில் பெண்மணி ஒருவர் பிரதமராக இருந்தபோது, அரபு நாடுகள் படையெடுத்தன. அதை

முறியடித்து வெற்றி கண்டார் இஸ்ரேலின் பெண் பிரதமரான கோல்டன் மேயர்.

இந்தியாவிலும், பெண்மணி ஒருவர் பிரதமராக இருந்தபோதுதான் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்கா வின் பயமுறுத்தலிலிருந்தும்—பக்கத்து நாடான பாகிஸ் தானின் படையெடுப்பிலிருந்தும்—நாடு பாதுகாக்கப் பெற்றது. சாதனைகளிலே, மற்ற மூன்று நாடுகளின் பெண் பிரதமர்களையும் விஞ்சி நின்ருர், இந்தியாவின் பெண் பிரதமரான இந்திரா காந்தி.

துரதிர்ஷ்டம் என்னவென்ருல், பெண்மணியின் தலை மையை ஏற்று நடக்கும் முற்போக்கு மனப்பான்மை ஆண் களுக்கு இல்லையென்பதுதான்.

பெண்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வரும்போது ஆண்களால் எதிர்க்கப்படும் அவலமும் ஏற்படத்தான் செய்யும் என்பதனை பாரதியார் அறிந்திருந்தார். அதனுற்ருன்,

> ''பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
> பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை''

என்று பாடினுர். ஆம்; பெண்ணின் தலைமையை ஆண் மக்கள் வீரம் பேணு தொழுகின், நாடு தாழ்வுறும் என்பது பாரதியின் சித்தாந்தம்.

**பாரதத் தாய்...**

பெண்கள் எளிதில் ஆவேசம் கொள்வதில்லை. கொண்டு விட்டால், தீமையை வேரும் வேரடி மண்ணு. இல்லாமல் அழித்தொழிக்கும் வரை அவர்கள் அமைதி பெறுவதில்லை. இதனை, இளங்கோ படைத்த கண்ணகி யிடம் காப்பியத்தில் கண்டோம். இன்று பாரதத்தில் தோன்றியுள்ள தலைவியிடமும் அதையே காண்கின்ருேம்.

பாரதியும், பாரதப் பெருநாட்டை ஒரு பெண்ணுக—தாயாகக் கற்பனை செய்து பாடுங்கால்,

''பூமியி னும்பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடும்
துர்க்கை யனையவள் தாய்''

[தோம்—துரோகம்]

''நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாள்எங்கள் தாய்—அவர்
அல்லவ ராயின் அவரைவி ழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள்''

என்று பாடுகின்ருர். ஆம்; பாரதி கண்ட புதுமைப் பெண் நல்லவருக்கு நல்லவள்; நல்லவரல்லாதாருக்குத் தீயவள். புதுமைப் பெண்ணின் நாவிலே, வேதம் ஒலிக்கும்; கையிலே கொடுவாள் ஜொலிக்கும்! இதனை,

''நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள்''

என்னும் வரிகளிலே அறிவிக்கிருர் பாரதியார்.

ஐவகை நிலங்களுக்குத் தெய்வங்களைக் கற்பித்த நம்முடைய ஆன்ருேர், போருக்குரிய நிலமான பாலைக்கு மட்டும் ''கொற்றவை'' என்னும் பெயரில் பெண் தெய்வத்தையே காட்டினர். அத் தெய்வத்திற்குத் துர்க்கை—காளி—பத்ர காளி—பிடாரி என்றெல்லாம் பெயர் தந்தனர் பிற்காலப் புலவர்கள். இது ஒன்றே சமுதாயக் கேடுகளை அழித்தொழிக்க ஆணைவிடவும் பெண்ணே தகுதியுடையவள் என்பதைக் காட்டும்.

## மதுரையில் "நெருக்கடி நிலைமை"

சிலப்பதிகாரக் கண்ணகி, கோவலன் கொலையாவதற்கு முன்பு, அச்சம்—மடம்—நாணம்—பயிர்ப்பு என்னும் பெண்மை அறங்களைக் கடைப்பிடித்தாள். ஆனால், கோவலன் கொலைக்குப் பின்னர், கொடுங்கோலர்களை எதிர்க்கத் தொடங்கியபோது, பெண்மையோடு ஆண்மையும் கலந்த துர்க்கையாகவே மாறினாள்.

அவள் மதுரைக்குள் புகுந்த பின், அங்கு "நெருக்கடி நிலை" தோன்றியது. அந்த நெருக்கடிக் காலத்திலே அவள் கடைப்பிடித்த நடைமுறையானது விரும்பி வரவேற்கத் தக்கவையல்ல. ஆயினும், ஆன்ற புலவர்கள்—அறிவுடைச் சான்றோர்கள்—கற்புடைப் பெண்டிர்கள் — அருளுடைத் தேவர்கள்—அதற்காக அவளைப் பழிக்கவில்லை. மதுரையை எரித்தாள் என்பதற்காக அவளை நரகத்திற்கு அனுப்பவில்லை. மாறாக, சொர்க்கத்திற்கே தேவர்கள் அழைத்துச் சென்றனர்.

கண்ணகி மதுரையை எரிப்பதற்குக் காரணமாயிருந்த பாண்டி மன்னனின் கொடுங்கோன்மையை மனத்திற் கொண்டு, மற்றதை மறந்தனர். கண்ணகி நிலையில் வேறு எந்தப் பெண் இருந்தாலும் அவளைப் போல்தான் நடந்து கொண்டிருப்பாள் என்ற முடிவுக்கு வருகிறது புலமை உலகம்.

பாரதியார் புதுமைப் பெண்ணைப் போற்றாத ஆண்மையை "பிசாசுத்தனம்" என்கின்றார். அதையும் புதுமைப் பெண்ணைக் கொண்டே சொல்ல வைக்கின்றார்.

**"நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**
**நன்மை கண்டோம் என்று கும்மியடி!"**

இது, புதுமைப் பெண்ணின் வெற்றி முழக்கம்!

பாரதப் பெரு நாட்டிலே வறுமை என்னும் கொடுமை மக்களை வாட்டுகின்றது. மனிதர் உணவை மனிதர் பறிக்கும் கொடுமை எட்டுத் திக்கிலும் கூத்தாடுகின்றது. சாதிக்கொரு நீதி பேசும் நீசத்தனம் நர்த்தனமாடுகின்றது. படித்தவன் சூதும் வாதும் பண்ணுகிறான்.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பெண்களைக் காரணமாக்குவதற்கில்லை. பெண் குலத்தையும் அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்தும் ஆண் குலமே காரணமாகின்றது. இதற்குப் பரிகாரம் காணப் பெண்மையிடம் தான் அடைக்கலம் புக வேண்டும் போலும்!

பாரதியார் பெண்மையைப் பெருமைப்படுத்திப் பாடிய பாடல்களைப் படித்துப் படித்துச் சுவைக்கின்றோம். அதற்காக அவரைப் பாராட்டுகின்றோம். ஆனால், நம் கண்ணெதிரே பெருமைக்குரிய பெண் ஒருத்தியை கயவர்கள் கல்லால் அடித்துக் கொல்ல முயன்றால், அதைக் கண்டிப்பதற்கு நாம் துணிவு கொள்வதில்லை.

['செங்கோல்', 18-12-77]

# யாதுமாகி நின்ருர் பாரதியார்!

தேசியக்கவி—மகாகவி—மக்கள் கவி—புரட்சிக் கவி என்றெல்லாம் போற்றப்படும் எட்டயபுரம் சி. சுப்பிரமணிய பாரதியார் 1920 செப்டம்பர் 11ல் இம்மண்ணுலகிலிருந்து மறைந்தார். அந்த நாள் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடைய தமிழர்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## ஒரே கவி!

விடுதலைப் போராட்ட காலத்தில் "தேசியக் கவி" என்று அழைப்பதற்குரிய தகுதிகள் அனைத்தையும் பெற்று ஒரே கவிஞர்தான் இந்தியாவில் தோன்றினர். அவர் வேறு யாருமில்லை; நம்முடைய பாரதியார்தான்.

பாரதியார் பாரத தேசத்தின் அருமை பெருமைகளையெல்லாம் வருணித்துப் பல பாடல்களைப் பாடினர். பாரத நாட்டின் விடுதலையை விரும்பியும், விடுதலைப் போராட்டத்தை ஊக்குவித்தும், விடுதலைப் போரின் தளபதிகளான தாதாபாய், திலகர், காந்தி, வ. உ. சி., லஜபதி ஆகியோரைப் போற்றியும் கவிதைகள் புனைந்தார்.

உரிமை உணர்வால் உந்தப்பட்டு எல்லையற்ற தியாகங்கள் புரிந்த நம் முன்னோரான சத்ரபதி சிவாஜி, குரு கோவிந்த சிங் ஆகியோர் மீது இறவாப் பெருங் கவிதைகள் படைத்தார். இத்தாலி நாட்டு விடுதலை வீரரான மாஜினியின் புகழ்மிக்க சபதத்தை தெள்ளு தமிழில் கவிதையாக்கி, இந்திய விடுதலை வீரர்களுக்கு வழங்கினர்.

இந்திய விடுதலைக்குப் பாடியதோடு, விடுதலைபெற்ற இந்தியா எப்படி யெல்லாம் இருக்க வேண்டுமென்றும் பாட்டிசைத்து வைத்து விட்டுப் போனார். அந்த வகையில் அவருடன் ஒப்பிட்டுக் காட்ட உலகில் இன்னொரு கவி பிறக்கவில்லை.

பாரதி விரும்பியது வெறும் அரசியல் விடுதலை மட்டுமல்ல; சாதிக் கொடுமை, சமயப் பொய்மை, பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றிலிருந்தெல்லாம் மக்களை விடுவிக்கப் பாடல்கள் புனைந்தார். ஒரு "தேசியக் கவி"க்குத் தேவைப்படும் அத்தனைத் தகுதிகளையும் பாரதியார் பெற்று விட்டார். அதனால்தான், அவருடன் ஒப்பிட்டுப் பேச இன்னொரு கவிஞர் இந்தியாவில் பிறக்க வில்லை என்கிறோம்.

## போர்க்களப் புலவன்!

பாரதியார், நாடு விடுதலை பெறப் பாடியதோடன்றி, விடுதலைப் போர்க்களத்தில் தாமும் குதித்தார், சிறைப் பட்டார். ரகசியப் போலீசார் தமது நிழல்போல் தம்மைத் தொடரும் வகையில் விடுதலைப் போரில் இரண்டறக் கலந்திருந்தார். வ. உ. சி., வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா ஆகிய தம் காலத்து விடுதலை வீரர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய புரட்சிப் பணிகளுக்குத் துணை புரிந்தார். போலீசார் தந்த தொல்லைகள் காரணமாக, பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுவைக்கு ஓடி, அங்கு 12 ஆண்டுகாலம் தனிமை வாழ்க்கை நடத்தினார்.

தாமும் தம்முடைய மனைவியும் மக்களும் பசி, பட்டினி யால் வாடிக் கொண்டிருந்த நிலையில்தான் அந்த மகாகவி தாய் நாட்டின் விடுதலைக்காகப் பாடினார்; பாடு பட்டார். அவர் பட்ட அல்லல்களை வருணித்துப் பாட இன்னொரு மகாகவி தோன்ற வேண்டும்.

பாரதியார், பாரதப் பெரு நாட்டுக் கலாசாரத்தின் காவலராகத் திகழ்ந்தார். அவர் காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் அங்கிங்கெனுதபடி பாரதப் பெருநாடு எங்கணும் ஆதிக்கஞ் செலுத்தியது. அந்தக் காலத்திலே, இந்திய— இந்து—தமிழக கலாச்சாரங்களின் சிறப்புக்களை வருணித்து வருணித்துப் பாடினுர். அன்னிய நாகரித்தில் படித்த தமிழருக்கிருந்த மோகத்தைச் சாடிப் பாடினுர்.

## எங்கெங்கும் ஆங்கிலம்!

பாரதி வாழ்ந்த காலத்தில் அன்னிய மொழியான ஆங்கிலமே ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக, நீதி மன்ற நிர்வாக மொழியாக, சுருங்கச் சொன்னுல், இந்திய மக்களின்—குறிப்பாக, தமிழ் மக்களின் அன்ருட வாழ்க்கை மொழியாக ஆக்கப் பட்டிருந்தது. தமிழ் மொழி அடுப்பங்கரையிலேயும், சந்தைக் கடையிலேயும், குழாயடி யிலேயும் ஒலிக்கும் பாமரர் மொழியாக மட்டுமே இருந்து வந்தது. இப்படி, தமிழர் வாழ்விலே தமிழ் முதன்மை பெருதிருந்த நிலைகண்டு பாரதியார் வேதனைப் பட்டார். உயர் கல்வி கற்ற தமிழரெல்லாம் தமிழிலே புலமையற் றவராக தமிழகத்தைப் பற்றிய சரித்திர ஞான மற்றவராக இருந்த நிலை கண்டு பாரதியார் விம்மினுர்; பொருமினுர்.

இந்த நிலையிலிருந்து தமிழினத்தாரை—சிறப்பாக' உயர் கல்வி கற்றவர்களை மீட்க, தமிழ் மொழியின் அருமைகளை வருணித்துப் பல பாடல்கள் பாடினுர். தம் காலத்தில் `தமிழகத்தில் வாழ்ந்த வ. உ. சி. போன்ற அரசியல் தலைவர்களை, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் போன்ற தமிழ்ப் புலவர்களை—அவர்கள் வாழ்ந்த நாளிலேயே—புகழ்ந்து புகழ்ந்து கவிதைகள் புனைந்தார்.

தமிழை—தமிழரை—தமிழகத்தைப் புகழ்ந்து பாடியது போல, தன் தாய் மொழியிடம்—தாய் இனத்

திடம்—தாய் நாட்டினிடம் தான் கண்ட குறைகளையும் அஞ்சாது எடுத்துக் கூறி, இடித்துக் காட்டி, அவை களையப்பட வேண்டுமென்றும் வற்புறுத்திப் பல கவிதைகள் பாடினார்.

கவிதைத் தமிழை வளர்த்ததோடன்றி, உரை நடைத் தமிழை வளப்படுத்தவும் வளர்க்கவும் விரும்பி ஏராளமான கட்டுரைகளை எழுதினார். சிறு கதைகள் புனைந்தார். தமிழ் கவிதை நடையிலும், உரை நடையிலும் மாறுதல் வேண்டு மென்று மிகுந்த துணிவோடு வற்புறுத்தினார்.

## அவர் பாடாத பொருளில்லை!

"பாஞ்சாலி சபதம்" என்ற பெயரில் பழம் பெருங் காப்பியமான மகாபாரதத்துக்கு வழி நூல் படைத்தார். அத்துடனன்றி, "குயில் பாட்டு" என்ற பெயரில் புத்தம் புதிய குறுங்காப்பியம் படைத்தார்.

பாரதியார், தமிழகத்தில் தமக்கு முன் தோன்றிய தாயுமானவர், வள்ளலார் போன்ற மகா ஞானியரோடு ஒப்பிடத்தக்க பெரு ஞானியாக விளங்கினார். அந்த வகை யில், சமயத்தால் சாக்தராக, தத்துவத்தால் வேதாந்தி யாக, நடை முறையில் சமரச வாதியாக விளங்கினார் சமயக் காழ்ப்பின்றி சிவன், திருமால், முருகன், காளி, அல்லா, ஏசு ஆகிய தெய்வங்களைப் பற்றியெல்லாம் மிகுந்த பக்தியோடு பாடினார்.

நிலம், காற்று, நீர், நெருப்பு, வான் ஆகிய பஞ்ச பூதங்களைப் பற்றியும் தனித்தனியே பாடல்கள் புனைந்தார்.

அழகு, அறிவு, இருள், ஒளி ஆகியவற்றை வருணித்துப் புத்தம் புதிய பாணியில் பாடல்கள் இயற்றினார்.

அச்சம், பகை ஆகிய தீக் குணங்களைத் தூற்றியும்; அன்பு, கருணை ஆகிய நற்குணங்களைப் போற்றியும் தனித் தனியே செய்யுள்கள் படைத்தார்.

தமது சுயசரிதத்தின் ஒரு பகுதியைப் பாடி, தமிழ் இலக்கியத் துறையில் புதுமை நிகழ்த்தினார்.

அருணகிரியார், தாயுமானவர், கோபால கிருஷ்ண பாரதியார் ஆகிய முன்னோர்கள் பாடிய சந்தங்களைப் பயன் படுத்தியதோடு, தாமே புதிய சந்தங்கள் பலவற்றைப் படைத்தார்.

தமிழ் இலக்கணங்கள் கூறும் பாவினங்களை யெல்லாம் பயன்படுத்திக் கவிதைகள் புனைந்து, தமக்குள்ள இலக்கண ஞானத்தை புலவருலகுக்குப் புலப்படுத்தினார்.

இசைப் புலவர்களால் மதிக்கப்படாத குடுகுடுப் பாண்டியின் சந்தத்தைப் பயன்படுத்தி, குறி கூறும் பாடல் புனைந்தார்.

பாரதியார், வறட்டுத் தேச பக்தராகவோ, வைதீக மதவாதியாகவோ, விடுதலை வீரராகவோ மட்டும் இல்லா மல், சிறந்த பொருளாதார நிபுணராகவும் இருந்தார். ஆம்; "வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்!" என்னும் பாடலிலே, விடுதலை பெற்ற பாரதம் கனரகத் தொழில் துறையிலும், உள்நாட்டு—வெளிநாட்டு வாணிபத்திலும் முன்னேற்றமடைவதற்குத் திட்டம் தந்தார்.

## உலகங் காணாத உயர்கவி!

இதுகாறும் எடுத்துக் காட்டிய திறமைகளும் தகுதி களும் தியாக வரலாறும் படைத்த ஒரு மகா கவியை பாரதமோ, தமிழகமோ, பிற நாடுகளோ கண்டதுண்டா? 'இல்லை' என்று சொன்னால், அது மிகையாகாது. துரதிர்ஷ்ட

வசமாக, பாரதியார் புகழ் பாரதப் பெருநாடு முழுவதும் பரவவில்லே. அது, இந்த நாட்டின் தேசியப் பண்பிலுள்ள குறைபாடு.

இந்திய ஆட்சி பாரதியாரின் புகழை வேங்கடத்துக்கு வடக்கேயும் பரப்ப முன் வரவில்லை. டில்லியிலுள்ள சாகித்ய அகடமி கூட அதுபற்றிச் சிந்திக்கவில்லை. தமிழ் நாட்டில் இருபதாண்டுகள் நடந்த காங்கிரஸ் ஆட்சியும் பாரதியின் புகழ் பரப்ப திட்டமிட்டுச் செயலாற்றவில்லை. நல்ல வேளையாக, பின்வந்த அரசுகள் பாரதியார் புகழ் பரப்ப அடுத்தடுத்து பல பணிகளை ஆற்றி வந்துள்ளன.

புதுவை அரசு, பாரதி வாழ்ந்த இல்லத்தை விலைக்கு வாங்கி, அதை நினைவாலயமாக்கியது. ஆண்டுதோறும் பாரதி விழாக் கொண்டாடவும் ஏற்பாடு செய்தது.

தமிழக அரசு, சென்னைக் கடற்கரையில் பாரதியாரின் உருவச் சிலையை நிறுத்தியது.

சென்னையில் பாரதியார் பெயரால் மண்டபம் எழுப்ப 63 மனை நிலத்தை திரு. மகாலிங்கம் தலைமையில் இயங்கி வரும் பாரதியார் சங்கத்திற்கு வழங்கியது.

எட்டயபுரத்தில் பாரதியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, அதனை அந்த மகாகவியின் நினைவாலய மாக்கியது.

பாரதியார் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டும். அதற் கென்றே தமிழ் இளைஞர்களிலே சிலர் தங்களை அர்ப் பணித்துக் கொள்ள வேண்டும்.

["செங்கோல்", 14-9-75]

# மூவேறு பக்திகளைப் பிணைத்த முதற் கவிஞன் பாரதி*

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் விழா என்றாலே எனக்கு இதயத்திலே ஒரு எழுச்சி ஏற்படுகின்றது. இளங்கோ விழாவிலே, கம்பர் விழாவிலே, வள்ளுவர் விழாவிலே கலந்துகொள்கிற போதும் என் மனத்திலே மகிழ்ச்சி பொங்கி வழிகிறது என்றாலும், பாரதியார் விழாவில் கலந்து கொள்கிறபோது எனது இதயத்தில் நன்றி உணர்வோடு கூடிய ஒரு எழுச்சி ஏற்படுகிறது. அதற்கு இணை அதுதான். என்னை உருவாக்கியவனே சுப்பிரமணிய பாரதிதான். நான் படித்த முதல் இலக்கியம் பாரதியின் தேசியக் கவிதையே. இப்படிச் சொல்வதனால், பாரதியாராலேயே பாராட்டப்பட்ட வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பரையும் நான் குறைத்துப் பேசுவ தாக யாரும் எண்ணிவிட வேண்டாம்.

## என்னை வளர்த்த பாரதி

இரண்டாவது வகுப்போடு எனது பள்ளிப் படிப்புக்குப் புள்ளி விழுந்துவிட்டது. அத்தகைய துரதிருஷ்டசாலி யாகிய நான் வள்ளுவனிடந் தொடங்கி, இளங்கோ வையும் தொட்டு, கம்பனையும் கண்டு புலவனாவதற்குச் சந்தர்ப்பம் ஏது? எனக்குப் புரிகிற எளிய நடையிலே பாடினான் பாரதி. எனக்கு எது தேவையோ அதைப் பாடினான் பாரதி. என்னைத் தேச பக்தனாக்கியவன்

---

* 11-9-78ல் எட்டயபுரத்தில் தமிழக அரசு நடத்திய பாரதியார் விழாவிலே நிகழ்த்திய தலைமையுரை.

பாரதிதான். என் தாய்மொழி யிடத்து நான் பற்று கொள்ளச் செய்தவனும் பாரதிதான். தெய்வ பக்தியை என் அன்னையிடந்தான் நான் கற்றேனென்றாலும், அதற்கு உரமேற்றினன் பாரதி. தெய்வப் பற்றும், தேசப் பற்றும், மொழிப் பற்றும் கலந்த வாழ்க்கை நடத்துபவன் தான் முழு மனிதன் என்ற உண்மையை எனக்கு உணர்த்தியவன் பாரதிதான். அதனாற்றான், பாரதி விழாவில் கலந்துகொண்டு பேசும்போது எனது இதயம் எழுச்சி கொள்கிறது. நன்றி உணர்ச்சி எனது உடலிலுள்ள நாடி நரம்பெல்லாம் பொங்கி வழிகிறது.

''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்று பாரதி கூறிய வாசகம் எனது நெஞ்சைத் தொட்டது. அதன் பின்னர்தான் நான் சிலம்பைப் பயின்றேன். கண்ணகியின் வீரத்தைக் கண்டேன். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று பாரதி கூறியதனைப் படித்த பின்னர்தான் நான் திருக்குறளைக் கையிலெடுத்தேன். வள்ளுவத்தைப் பயின்றேன். அதன் வழி வாழ்வதற்கும் முயன்று வருகிறேன்.

''கம்பன் பிறந்து காப்பியம் படைத்ததால் தமிழச் சாதி அமரத் தன்மை பெற்றுவிட்டது.'' என்று பாரதி சொல்லியிருப்பதைப் படித்த பின்னர்தான் கம்பனுடைய காப்பியக் கடலிலே நீந்தி மகிழ முயன்றேன்.

## ஆங்கில ஆதிக்கத்தின் எதிரி!

தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டும் என இன்று முழங்குகின்றேனே, அந்த முழக்கத்தையே எனக்குத் தந்தவன் பாரதிதான். ஆங்கிலக் கல்வி முறையை வெறுப்பதற்கு என்னைத் தூண்டியவனே பாரதிதான். ஆங்கிலக் கல்வியை அவுணர் (அரக்கர்) கல்வி

என்கிறான். 'அரக்கர்' என்னும் பொருளில்தான் அவுணர் என்னும் சொல்லை அவன் பயன்படுத்துகிறான். "அல்லல் மிக்கதோர் மண்படு கல்வி" என்றும் அவன் கூறுகின்றான்.

"குள்ள நரிக்குணம் படைத்த சேவகர்களும், நாயெனத் திரி ஒற்றர்களும், அடிமைப்புத்தி படைத்த தாசர்களும், பிறர்க்கு இச்சகம் பேசி வயிறு வளர்க்கும் பேடியரும் பயின்றிடும் ஆங்கிலக் கல்வி"—என்கின்றான் பாரதி.

இதை எல்லாம் படித்த பின்னரே நான் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தைப் பெற்றேன். பாரதியின் பாடலுக்கு உரையாக அமைந்தது காந்தியடிகளின் உபதேசம். என்னை விடுதலைப் போரில் ஈடுபடுத்தியதே பாரதியின் பாடல்கள்தான். 144 தடையுத்தரவை மீறி, தேசபக்தர்களுடன் சென்னை நகர வீதிகளிலே ஊர்வலம் சென்றபோது, பாரதியாரின் பாடல்களைப் பாடித்தான் நடைபோட்டேன். ஊர்வலத்தின் இரு புறத்திலும் குண்டாந்தடியைக் கையிலேந்திய போலீசாரும் நடைபோட்டு வருவார்கள். எந்த நேரத்திலே ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி, எங்கள் தலைகளிலே குண்டாந்தடி கொண்டு போலீசார் தாக்குவார்களோ என்ற அச்சம் என் உள்ளிட்ட ஒவ்வொரு தொண்டர் உள்ளத்திலேயும் எழத்தான் செய்யும். அந்த அச்சத்தை உள்ளத்திலிருந்து வெளியேற்றவேண்டி, "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்ற பாடலைப் பாடிய வண்ணம் நடைபோட்டுச் செல்வோம். அதை பாடத் தொடங்கியதுமே அச்சம் தொலைந்து ஆண்மையோடு கூடிய ஆவேசம் உள்ளத்தில் தோன்றி உச்சந்தலைவரை ஏறும்.

போலீசாரிடம் தடியடி பட்ட அனுபவமும் எனக்கு உண்டு. தடியடி தலையில் விழும் என்று தெரிந்ததுமே

எங்கள் வாய்கள், "வந்தே மாதரம், வந்தே மாதரம், வந்தே மாதரம்" என்று மும்முறை முழங்கும். ஆம்; முழங்குகிறோம் என்ற நினைப்பற்று முழங்குவோம். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் முதலில் கொகெய்ன் இன்செக்ஷன் போடுவார். அதனால், அறுக்கும் போது வலி தெரியாது. அதுபோல, போலீசார் அடிக்கும்போது வலி தெரியாமல் இருப்பதற்காகவும் வந்தே மாதர கோஷம் எழுப்புவோம். உண்மையில் வலி தெரியாது. இந்த அனுபவத்தைப் பெற்றவர்கள் இன்னும் ஒரு சிலர்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய வாழ்வு இன்னும் சில ஆண்டுகளில் மறைந்து போகும். அப்புறம் இதை அனுபவத்தோடு சொல்ல ஆள் இருக்காது.

## அடிபட்டு வளர்த்தோம் பாரதியின் புகழை!

பாரதியின் புகழைப் பாடிமட்டுமா வளர்த்தோம்? போலீசாரிடம் அடிபட்டும் வளர்த்தோம். தேசத் துரோகிகளிடம் உதைபட்டும் வளர்த்தோம். பாரதியின் பாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் இன்று பரிசுகள் பெறுகிறார்கள். அன்று பாரதி பாடலைப் பாடினால், அது ராஜத்துரோகம். அரசாங்க விரோதம். அதனால், பொதுவிடத்திலே தடையை மீறி பாரதி பாடல்களைப் பாடினால், அடி கிடைக்கும். ரிசர்வ் போலீசாரின் பூட்ஸ் கால்களால் உதை கிடைக்கும். நீதிமன்றத்திலே சிறைவாசத் தண்டனையும் கிடைக்கும். இவையே பாரதியார் பாட்டைப் பாடிஅன்று நாங்கள் பெற்றபரிசுகள். அப்படி எல்லாம் பாரதியின் புகழை வளர்த்தோம் அந்த நாளிலே!

தமிழ்நாட்டில் பாரதி தோன்றியில்லையானால், விடுதலைப் போரிலே தமிழகம் இன்று பெற்றுள்ள

பெருமைக்குரிய இடத்தை அது பெற்றிருக்க முடியாது. இன்னும் எங்கோ பின்னடைந்திருக்கும்.

## புதிய மதம், புதிய தெய்வம், புதிய பதிகம்!

பாரதியார், ஒரு புதிய தெய்வத்தைப் பாடினார். அவர் காலத்திலே ஒரு புதிய மதம் பிறந்தது. அது, "தேசபக்தி!" அந்த மதத்தின் பெயரால் ஒரு புதிய தெய்வமும் கற்பிக்கப் பட்டது. அதன் பெயர் "பாரத மாதா!" அந்தப் புதிய தெய்வத்தை—பாரத மாதாவை வழிபடுவதற்கான பக்திப் பாடல்களை எழுதிக் குவித்தான் பாரதி. அது அவனுக்குள்ள தனிப் பெருமை. அவன் மூடபக்தன் அல்ல; பகுத்தறிவு வாதிதான். ஆனால், தமிழகம் தெய்வ பக்தி மணக்கும் திருநாடு. அந்தத் தெய்வ பக்தியோடு கலந்து தேசபக்தியை ஊட்டினால்தான் தமிழர் எழுச்சி கொள்வார்கள் என்பது பாரதிக்குத் தெரிந்திருந்தது. அதனால், தேசபக்தியை மதமாக்கினான். அந்த மதத்தின் தெய்வமாக பாரத மாதவைப் படைத்தான். அந்தத் தெய்வத்தின் மீது பக்திப் பதிகங்கள் பாடினான்.

சிவபெருமானை வழிபடுவோர், "சிவாய நம" என் பார்கள். விஷ்ணுவை வழிபடுவோர், "நாராயணாய நம" என்பார்கள். அல்லாவை வழிபடுவோர், "அல்லாஹு அக்பர்" என முழங்குவதைக் கேட்கிறோம். அதுபோல, தேசபக்த மதத்தார், தங்கள் தெய்வமான பாரதமாதாவை வழிபடும் மந்திரமாக, "வந்தே மாதரம்" என்ற வாசகத்தைப் பயன்படுத்தினர்.

தேசபக்தர் சிதம்பரனார், பிறவிச் சைவர். சைவ சித்தாந்த சாத்திரமான சிவஞான போதத்துக்கு உரை எழுதிய உத்தமர். ஆனால், உயிர் விடுங்கால், அவர் 'சிவாயநம' என்று சொல்லவில்லை. 'வந்தே மாதரம்'

என்று சொல்லித்தான் உயிர் விட்டார். மரணம் நெருங்கிய போது, மணிவாசகரின் திருவாசகப் பாடலைக் கேட்க அவர் விரும்பவில்லை. தேசபக்த மதத்தாரின் திருவாசகமான பாரதியாரின் தேசியப் பாடலைக் கேட்கவே விரும்பினர்.

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?''

என்ற பாடலை தேசபக்தர் ஒருவர் பாட, அதைக் கேட்டுக் கொண்டே அந்த மாவீரர் மரணத்தைத் தழுவி விட்டார். அப்படி, உயிர்விடும் போதும் தேசபக்தர் கேட்க விரும்பிய பெருமை படைத்தது பாரதியாரின் தேசியப் பாடல்.

## பிணத்தின் பின்னே தேசிய பஜனை!

விடுதலைப் போராட்ட காலத்திலே, ஒரு விடுதலை வீரன் மாண்டுவிட்டால், அவனது பிரேத ஊர்வலத்தின் பின்னே பஜனை செல்லும். சிவ பஜனையோ, விஷ்ணு பஜனையோ அல்ல; பாரதியாரின் தேசபக்தப் பாடல்களை முழக்கும் தேசியப் பஜனை!

சிறைச் சாலைகளிலே மாதக் கணக்கில்—ஏன், ஆண்டுக் கணக்கில் அடைபட்டபோதும் காலையிலும் மாலையிலும் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடிப்பாடி சிறைத் துன்பங்களை மறப்போம்—மறக்கச் செய்யும் அந்த மகாகவியின் பாடல்கள்!

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே''

என்று தொடங்கும் பாடலிலேதான் எவ்வளவு தேசபக்தி! எத்தகைய தமிழ்ச்சுவை! எப்படிப்பட்ட பழம் பெருமை!

தேசபக்தி வேறு; தமிழ் பக்தி வேறு; தெய்வ பக்தி வேறு என்று வேறுபடுத்திப் பார்க்காதவன் பாரதி. அவன்

தேசபக்தியைப் பாடும்போதும் அதிலே தெய்வ பக்தியைக் கலந்துவிடுவான், தன்னை அறியாமலே! "தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை" என்ற தேசபக்திப் பாடலிலே, தெய்வ பக்தியும் மணக்கிற தல்லவா? தெய்வ பக்தியோடு அவன் பராசக்தியைப் பாடியுள்ள பாடல்களிலே, தேசபக்தியும் மணப்பதைப் பார்க்கிறோம். அப்படியே தேசபக்தியையும் தெய்வ பக்தியையும் போதிக்கும் பாடல்களிலே, தன்னையறியாமலே தமிழ் பக்தியையும் கலந்துவிடுகிறான். தமிழை வாழ்த்தும்போது, "எங்கள் தமிழ் வாழியவே" என்று தமிழ் மீது சொந்தம் கொண்டாடி, தன் தாய் மொழியை வாழ்த்துகிறான். "எங்கள் தமிழ்" என்று ஒரு முறையா சொல்கிறான்? இல்லை. "எங்கள் தமிழ் மொழி, எங்கள் தமிழ்மொழி" என்று இருமுறை சொல்லி வாழ்த்துகிறான். இன்று மட்டும் வாழவேண்டுமென்று வாழ்த்துகிறான்? "என்றென்றும் வாழியவே" என்றல்லவா வாழ்த்துகிறான்? "வாழ்க நிரந்தரம்" என்றல்லவா வாழ்த்துகிறான்? 'இன்பத் தமிழ்மொழி' "ஏழ் கடலுக்கு அப்பால் வைப்பினும் அதன் மணம் வீசி இசைகொண்டு வாழியவே!" என்றல்லவா வாழ்த்துகிறான்? "வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி" என்று சொல்லியல்லவா வாழ்த்துகிறான்? "வானம் அறிந்தது அனைத்தும் அறிந்த வளர்மொழி" என்று சொல்லியல்லவா வாழ்த்துகிறான்?

கொடுமை மிக்க கலியுகம் அழிந்து தருமமிக்க கிருதயுகம் தோன்ற வேண்டுமானால், உலகெலாம் தமிழ் ஓங்க வேண்டுமாம்! என்ன இறுமாப்பு! எத்துணைப் பெருமிதம்!

> "சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
> துலங்குக வைய கமே!"

என்கிறான்.

வாழ்க தமிழ் மொழி,
வாழ்க தமிழ் மொழி,
வாழ்க தமிழ் மொழியே!

இது, தேசபக்தி யுடையவனுடைய தமிழ்பக்தி! இன்றைய தமிழகத்திலே தேசபக்தர்களிடம் தமிழ் பக்தியைக் காணோம்; தமிழ் பக்தர்களிடம் தேசபக்தியைக் காணோம். தேசபக்திக்கும் தமிழ் பக்திக்குமிடையே போராட்டம் வேறு நிகழ்கிறது. பாரதியின் நினைவு நாளிலே இதனை நினைத்துப் பார்க்கவும் எனது நெஞ்சம் நடுங்குகின்றது.

## சுதந்திரம் சும்மா வரவில்லை!

இன்று நாம் அனுபவிக்கிறோமே, அந்தச் சுதந்திரம் சும்மா வந்துவிடவில்லை. அது கடையில் வாங்கிய சரக்கல்ல. சுக்கா, மிளகா கடையில் வாங்கி விட! பாடு பட்டுப் பெற்றது இன்று நாடு அனுபவிக்கும் சுதந்திரம். பாரதியார், சுதந்திரத்திற்காகப் பாட்டும் பாடினார். சிறை புகுந்து பாடுபட்டும் அதைத் தேடினார்.

பாரதி, வறண்ட நிலமான கோயில்பட்டித் தாலுக்கா வில்தான் பிறந்தார். அந்தத் தாலுக்காவுக்குத்தான் எத்துணைப் பெருமை? கோயில்பட்டித் தாலுக்காவிலுள்ள பாஞ்சாலங் குறிச்சியில்தான் வீரபாண்டியக் கட்டபொம் மன் பிறந்தான்.

அதே தாலுக்காவிலே பாஞ்சாலங்குறிச்சியை அடுத்து உள்ள ஒட்டப்பிடாரத்திலேதான் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. பிறந்தார். பாரதி பிறந்த எட்டயபுரத்திலே அவருக்கு முன்பே இசைச் சக்கரவர்த்தி முத்துசாமி தீட்சதரும், சுப்பராம தீட்சதரும் பிறந்தனர். பாரத முழுவதனு

டன் ஒப்பிட்டு நோக்கும்போது ஒட்டை சாண் நிலம்கூட இல்லை கோயில்பட்டித் தாலுக்கா. அதற்குத்தான் மொழி உலகிலே, இசை உலகிலே, அரசியல் உலகிலே எவ்வளவு பெருமை! அதற்கு இணையாக இன்னொரு தாலுக்காவைச் சொல்ல முடியாதே! வாழ்க, எட்டயபுரந்தந்த மகாகவி

# தேசாபிமானத்தை வென்ற மனிதாபிமானி பாரதி!

பாரதியார் மிகச் சிறந்த தேசாபிமானி. ஆனால், அவருக்கு இருந்த மனிதாபிமானம் தேசாபிமானத்தை விடவும் வலிமை பெற்றதாகும். தேசாபிமானமா, மனிதா பிமானமா? — என்ற வினா எழுந்தபோது, தேசாபி மானத்தை வென்று நின்றது அவருக்கிருந்த மனிதாபி மானம்.

ஆஷ் என்பவர், தூத்துக்குடியில் வ. உ. சி. சுதேசிக் கிளர்ச்சி நடத்திய காலத்தில் திருநெல்வேலி மாவட்டத் தின் துணைக் கலெக்டராக இருந்தார். அப்போது அவர் தேசபக்தர்களை வேட்டையாடினார். வ. உ. சி. இரண்டு ஆயுள் தண்டனை பெற துணைக் கலெக்டர் ஆஷ் துரையும் காரணமாவார். பின்னால், அவர் நெல்லை மாவட்டத்தின் கலெக்டராகப் பதவி உயர்வு பெற்றார்.

## கலெக்டர் ஆஷ் கொலை!

நெல்லை மாவட்டத்தில் உருவாகியிருந்த பயங்கரப் புரட்சிக் கூட்டத்தில் ஒருவராக இருந்தார் வாஞ்சு என்ற இளைஞர். அவர் ஒரு நாள் கலெக்டர் ஆஷ் தன் இளம் மனைவியோடு ரெயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது, தானும் அதே ரெயிலில் பயணம் செய்து, ரெயில் மணியாச்சி நிலையத்தை அடைந்தபோது, தன் கைத் துப்பாக்கியால் ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்று, பிறகு தன்னையும் சுட்டுக்கொண்டு மாண்டார்.

இந்த நிகழ்ச்சி விடுதலை ஆர்வங்கொண்ட தேசாபிமானிகளுக்கு மகிழ்ச்சியளித்ததுண்டு, அந்த நாளிலே!—குறிப்பாக, ஆஷ் துரையின் கொடுங் கோன்மையால் துன்புற்ற நெல்லை மாவட்ட தேசாபி மானிகள் அவரது கொலைக்கு வருந்தவில்லை; மகிழ்ந்தனர். ஆனால், கவிஞரும் கலைஞரும் ஆன்ம ஞானியுமான பாரதியார், ஆஷ் கொலையுண்ட செய்தி கேட்டதும், மனிதாபிமானத்தால் உந்தப்பட்டு, வேதனைப்பட்டார்! அதுவும், இளம் மனைவியோடு ஜோடிப் புருக்கள்போல இருந்த நேரத்திலே, பெண் புருவிடமிருந்து ஆண் புரு வைப் பிரித்ததுபோல திருமதி ஆஷிடமிருந்து அவரது கணவனைப் பிரித்தது கொடுமை என்று கூறினார்.

## பாரதியின் கண்டனம்

கலெக்டர் ஆஷ் கொலையை நியாயமாக்கிவிடக் கூடியது தான் அவருக்கிருந்த தேசாபிமானம்! ஆயினும், அந்த நேரத்திலே தேசாபிமானத்தை வென்று விட்டது மனிதாபிமானம்! அதனால், வாஞ்சிநாதனின் கொலைச் செயலைக் கண்டித்து எழுதினார், தமது பத்திரிகையிலே! அது வருமாறு:

"ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம்! (இதை 'எதிர்பாராத விபத்து' என்று நான் சொல்லட்டுமா? ஏனென்றால், இம் மாதிரியான மற்றொரு சம்பவம் நமது ராஜதானியில் நடந்ததேயில்லை.) இந்தியாவின் தென்கோடி ஜில்லாவில் மணியாச்சி ஸ்டேஷனில் நடந்தது. திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சி அய்யர் என்ற இளைஞர் சுட்டுக் கொன்று விட்டார். இது மகத்தானதோர் சோக சம்பவம்.

"கலெக்டர் ஆஷுடன் அவரது மனைவியைத் தவிர வேறு யாரும் இல்லை. அவர் அடுத்த ஜில்லாவிலுள்ள புகழ்

பெற்ற ஆரோக்கிய ஸ்தலமான கோடைகானலுக்கு உல்லாசமாகக் காலம் கழிக்கவோ, தேக சுகம் பெறவோ போய்க் கொண்டிருக்கிறார்.

"கொலையுண்ட மனிதர் தமது மனைவியுடன் இருக்கிறார். அவர்கள் யுவர்கள்; தெரிந்தவரையில், ஒருவரையொருவர் பரஸ்பரம் காதலிக்கும் தம்பதிகள்; ஜோடியாக இருவரும் குதூகலத்துடன் உல்லாச யாத்திரை போகிறார்கள். இதுபோன்றதோர் நிலைமை, பக்திசிரத்தையுள்ள எந்த இந்துவின் உள்ளத்திலும் புனிதமான எண்ணங்களையே தூண்டிவிடும்.

"தன்னைக் கைது செய்ய வந்தவர்களையெல்லாம், வெற்றிகரமாகப் பயமுறுத்திவிட்டு, கலெக்டரைக் கொன்ற சில நிமிடங்களில் வாஞ்சி அய்யர் தம்மைத் தாமே சுட்டு மாய்த்துக்கொண்டார். இதற்குப் பின் இம்மாதிரி இன்னொரு சம்பவம் நடைபெறவில்லை என்ற விஷயம் சென்னை ராஜதானிக்கே பெருமையளிக்கிறது. சென்னை ராஜதானியில் பயங்கர இயக்கம் பிறக்கும்போதே உயிரற்ற பிண்டமாய்ப் பிறந்தது."

(பாரதி புதையல்; பக். 238, 240)

இதிலே, மனிதாபிமானத்தை மட்டுமா பார்க்கிறோம்? பெண் குலத்தாரிடம் காட்டும் இரக்கத்தையும் அல்லவா பார்க்கிறோம். 'பெண் என்று சொல்லிடிலோ, பேயும் இரங்கும்' என்று பாடியவரல்லவா!

## லேடி கர்ஸான் மரணத்தின் போது...

இதுபோல, இன்னொரு நிகழ்ச்சி!

இந்தியாவுக்கு வந்த பிரிட்டிஷ் வைசிராய்களிலே மிகவும் கொடியவராகக் கருதப்பட்டார் லார்டு கர்ஸான். அவர் காலத்தில்தான்—அவரால்தான்—வங்காளம் பிரிக்

கப்பட்டது. அதனால், தேசாபிமானிகளெல்லாம் அவரை மிகவும் வெறுத்தனர். அந்த வைசிராயை ஏசிப் பேசாத தேசாபிமானியே அந்நாளில் இல்லை எனலாம். அவரது மனைவி இந்திய அரசியலிலே மிகுந்த செல்வாக்கோடு விளங்கினார். சிம்லாவிலே பழைய வைசிராய் மாளிகையிலே லேடி கர்ஸானின் படுக்கையறையானது அவர் பயன் படுத்திய கட்டிலோடு இன்னமும் பாதுகாக்கப்பட்டு வரு கிறது. ஆம்; வேறு எந்த வைசிராயின் மனைவிக்கும் இத்தகு சிறப்பு இல்லை.

அந்த லேடி கர்ஸான் 1906ல் அகால மரணம் அடைந்தபோது, கல்கத்தாவிலிருந்து பிரபல தேசியத் தலைவர் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த "அமிர்தபஜார்" பத்திரிகை என்ற ஆங்கில நாளேடு, கர்ஸான் மீது கொண்ட கோபத்தால், அவரது மனைவியான லேடி கர்ஸானின் அகால மரணத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்திருந் தது. அதைப் படித்துப் பாரதியார் திடுக்கிட்டுப் போனார். பாரதியாரும் கர்ஸானிடம் கோபமுடையவர்தான். தமது "இந்தியா" வாரப் பத்திரிகையிலே வாரந்தோறும் கண்டித்து எழுதிய வண்ணம் இருந்தவர்தான். "களக்கமற மார்லி நடம்" எனத் தொடங்கும் தன் பாடலொன்றிலே, "கர்ஸான் எனும் குரங்கு" என்று வருணித்தவர்தான்! ஆயினும், லேடி கர்ஸான் மரணத்திற்கு 'அமிர்த பஜார்' ஆசிரியர் மகிழ்ச்சி தெரிவித்தது மனிதாபிமானமற்ற செயலாகப்பட்டது பாரதியாருக்கு! அதனால், "அமிர்த பஜாரி"ன் மனோபாவத்தை வன்மையாகக் கண்டித்து எழுதினார் தமது 'இந்தியா' பத்திரிகையிலே!

## தலை சிறந்த ஜீவாபிமானி!

தேசாபிமானம் மனிதாபிமானத்தைவிடப் பெரிதல்ல; மனிதாபிமானத்தைக் கொன்று விடும் ஆற்றலை தேசாபி

மானம் பெற்றுவிடுமானுல், அது மனித சமுதாயத்திற்கே கேடாக முடியுந்தானே!

பாரதியார் தேசாபிமானத்தை விடவும் மனிதாபிமானத்தைப் பெரிதாகக் கருதியதுபோல, இந்த இரண்டையும்விட ஜீவாபிமானத்தையே பெரிதாகக் கருதினுர். மனிதாபிமானமா, ஜீவாபிமானமா?—என்ற வினு எழுந்த போது, ஜீவாபிமானத்திற்கே முதன்மை தந்தார்.

தமது மனைவியார் நடுப்பகல் வேளையில் சோறு சமைக்கக் கழுவி வைத்திருந்த அரிசியை, அவர் வெளியே போயிருந்தபோது, தம் வீட்டின் முற்றத்தில் வந்து 'கா', 'கா' என்று குரல் கொடுத்த காக்கைகளுக்குப் பாரதியார் போட்டுவிட்டாராம். மனைவியார் வந்து இந்த 'விளையாட்டை'ப் பார்த்து, "ஐயோ, குழந்தைகளைப் பட்டினி போட்டு விட்டீர்களே!" என்று கூறி வேதனைப் பட்டபோது,

"காக்கை குருவி எங்கள் சாதி— நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களி யாட்டம்"

என்று பாடினுராம்! ஆம்: பாரதியாருக்குத் தம் குழந்தைகளிடமும் மனைவியிடமும் இருந்த மனிதாபிமானத்தை வென்று விட்டது காக்கைகளிடம் வைத்த ஜீவாபிமானம்! காக்கை யொன்று 'கா', 'கா' வென்று கரைந்தால், 'காப்பாற்று, காப்பாற்று' என்று அது வேண்டுவதுபோல அவர் பொருள் கொண்டார். தமிழிலே 'கா' என்பது ஒரு எழுத்து மட்டுமல்ல, 'காத்தல்' என்னும் பொருளுடைய ஒரு சொல்லும் ஆகும் அல்லவா! ஜீவாபிமானத்திலே வள்ளலாரோடு ஒப்பிடத்தக்கவர் பாரதியார்!

["செங்கோல்"; 3-10-76]

# பாரதி, ராம பக்தரா? கிருஷ்ண பக்தரா?

எட்டயபுரம் சி. சுப்பிரமணிய பாரதியார் இராமாயணம், மாபாரதம் ஆகிய காப்பியங்களில் பெரிதும் கவர்ச்சியுற்றிருந்தார். ஆராய்ச்சி அறிவையும் பெற்றிருந்தார் என்று சொல்ல வேண்டும். அவருக்கு சமஸ்கிருதத்திலும் போதிய புலமை இருந்ததால், வால்மீகியின்—வியாசரின் உள்ளங்களை உணர்ந்து கொள்ளவும் அவரால் முடிந்திருக்கிறது.

"அணி செய் காப்பியம் ஆயிரம் கற்பராம்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்"

என்று, அவரே புலவருலகத்திலுள்ள குறையைச் சுட்டிக் காட்டியிருக்கிறாரல்லவா! அந்தக் குறை அவரிடம் இல்லை. தனிக் கவிதையாயினும் சரி, காப்பியமாயினும் சரி; அவற்றைப் படைத்த கவியின் உள்ளத்தை ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து கொள்ளும் திறன் பாரதியாருக்கு உண்டு. அந்த வகையிலே, தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனான இராமனை இராமாயணக் காப்பியத்தின் தலைவனாகத் தான் அவர் கருதினார். திருமாலின் பத்து அவதாரங்களுள் இராமாவதாரமும் ஒன்று என்பதனை எட்டயபுரம் கவிஞர் மறுக்கவோ, மறக்கவோ இல்லை. ஆயினும், இராமனை வழிபடு தெய்வமாக பாரதியார் கருதினார் என்று சொல்வதற்கில்லை. சுமார் ஆயிரம் கவிதைகளைப் படைத்த பாரதியார், இராமாயணக் காப்பியத்தின் தலைவனான இராமன் மீது பக்தி பாவத்துடன் ஒரு பாடலைத்தான் படைத்துள்ளார். அது, பல்லவி, சரணத்தோடு கூடிய

இசைப் பரடலாகும். "சாகா வரம்" கேட்கிருர் இராம னிடம்! இதனுல் இராமனிடம் தெய்வாம்சம் இருந்தது என்பதனை அவர் ஏற்றுக் கொண்டார் என்று நம்பலாம். ஆனுல், கலைமகள், பார்வதி, பராசக்தி, காளி என்னும் பல்வேறு பெயர்களால் சக்தியை வழிபடு தெய்வ மாகக் கொண்டு பாடிப் பாடிப் பரவினுர் பாரதியார். முருகன் மீதும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடி, பக்தி செய்து வழிபடுகின்ருர். மாபாரதக் காப்பியத்தின் சூத்திரதாரியாக விளங்கும் கண்ணனைத்தான் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒரே தெய்வமாக அவர் ஏற்ருரோ என்று நாம் கருது மளவுக்கு அந்தத் தெய்வத்தின் மீது எண்ணற்ற பாடல்களை இயற்றியுள்ளார். தமது புலமைத் திறனையெலாம் கண்ணன் பாடலிலே கொட்டிக் குவித்துள்ளார். கண்ணனைத் தெய்வமாக மட்டுமன்றி, தந்தையாக — அரசனுக — காதலனுக — காதலியாக — தோழனுக — குருவாக — வேலைக்காரனுக எல்லாம் கற்பனை செய்து பாடியுள்ளார். கண்ணனைப் பக்தியுடன் வழிபடுவதிலே ஆழ்வாராதியர்களையும் விஞ்சி நிற்கிருர் பாரதியார். மாபாரதத்திலே அர்ச்சுனனுக்கு கண்ணன் கீதோபதேசம் செய்ததனை எண்ணற்ற இடங்களில் எடுத்துக் காட்டுகின்ருர். கீதையின் கருப் பொருள்களை இதய எழுச்சியுடன் பல்வேறிடங்களில் சுட்டிக் காட்டுகின்ருர்.

## இருவேறு கட்சிகள்

வடபுலத்திலே இராமன் கட்சி என்றும், கிருஷ்ணன் கட்சி என்றும் இருவேறு கட்சிகள் உண்டாம். கிருஷ்ண னைத் தெய்வமாகக் கொண்டோர் இராமனின் எதிரி களல்லர்! இராமாயணக் காப்பியத்தின் தலைவனுக அவனைக் கொள்கின்றனர். அதற்குமேல் கண்ணனைப்

போல பிரதான தெய்வமாக இராமனை அந்தக் கட்சியார் ஏற்பது இல்லையாம். இதனைத் தமது உரை நடைக் கட்டுரையிலே பாரதியாரே எடுத்துக் காட்டு கின்றார் :

"வட ஹிந்துஸ்தானத்திலே சில இடங்களில் இராமன் கக்ஷி, கிருஷ்ணன் கக்ஷி என இரண்டு பகுதி களாகப் பிரித்து சிலர் பரஸ்பரம் பகையைச் செலுத்து கிறார்கள். இஃதெல்லாம் மடமையின் இலட்சணம்."

[பாரதி கட்டுரைகள்—தத்துவம்—யாரைப் பெறுவது?]

பாரதியார், இராமனை வெறும் சக்கரவர்த்தியின் மைந்தனாகவோ, இராமாயணக் காப்பியத் தலைவனாகவோ மட்டுங் கருதி, அவனிடம் உள்ள மானுடத் தன்மைக்கும் மேலானதான தெய்வாம்சத்தை ஏற்க மறுப்பதனை வெறுத்திருக்கிறார். அந்த வகையில்தான் கண்ணன் கட்சி யாரின் ராமத் துவேஷத்தை "மடமை" என்று சொல்லிக் கண்டித்திருக்கிறார். ஆனால், அவரும் இராமனை விடவும் கண்ணனுக்கே அதிக முதன்மை தந்திருக்கிறார் என்பதனை அவருடைய பாடல்களை ஆராய்வோர் எவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

பாரதியார் தமது கவிதைகளிலும், கட்டுரைகளிலும், கதைகளிலும் கண்ணனைப் பற்றித் தந்துள்ளவற்றைத் தொகுத்தால், ஒரு பெரிய தனி நூலாக அது அமைவது உறுதி. இராமனைப் பற்றி அவர் கூறியுள்ளவற்றைத் தொகுத்தால், சில பாராக்கள் அளவில்தான் அமையும். ஆயினும், ராமாயணத்தை "ஆரிய சம்பத்து"—அதாவது, இந்திய சமுதாயத்தின் சொத்து—என்று கூறி, அதன்பால் தமக்குள்ள பற்றுதலை ஐயந்திரிபுக்கு இடமின்றி அவர் அறிவித்திருக்கிறார். பொதுவாக, வடபுலத்திலே கண்ண னுக்குள்ள செல்வாக்கு இராமனுக்கு இல்லையென்று சொல்

லப்படுகிறது. இந்த நிலையை இடைக் காலத்தில் மாற்றிய பெருமை துளசிதாசருக்கும் இராமதாசருக்கும் உண்டு.

## காந்திஜியின் ராமபக்தி

இவர்களை விஞ்சிவிடக் கூடிய நிலையிலே காந்தியடிகள் இராமனுக்குப் பெருமை தேடிவிட்டார். தாம் காண விரும்பிய சுயராஜ்யத்திற்கு "இராம ராஜ்யம்" எனப் பெயர் வைத்து, விடுதலை வீரர்களின் உள்ளங்களிலெல்லாம் இராமனைக் குடியேற்றிவிட்டார். இராமனை விடக் கண்ணனை வடபுலத்து மக்களிலே மிகுதியானவர்கள் வழி படுவதற்குப் பிரதான காரணம் ஒன்று உண்டு. வடபுலத் திலே க்ஷத்திரியர்களாகக் கருதப்படும் யாதவர்கள் ஒரு கணிசமான அளவில் இருக்கின்றனர். தமிழகத்திலும் யாதவர்கள் உண்டு என்றாலும், அரச மரபினர் என்ற அந்தஸ்து அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. வட புலத்தில் பரவலாகவும், அரச பாரம்பரியத்தைச் சார்ந்த வர்களாகவும் இன்றைக்கும் செல்வமும், மக்கள் மீது செல் வாக்கும் படைத்தவர்களாகவும் விளங்கும் யாதவர்கள் என்போர் கண்ணன் வழிபாட்டைக் கடைப் பிடித்து வருகின்றனர். பாரதத்திலே தெய்வங்கள் செல்வாக்குப் பெறுவதற்குக் கூட சாதி பலம் தேவைப்படுகிறது. இந்த சாதி நிலைதான் இன்றைய அரசியலிலும் குமரி முதல் இமயம் வரை ஆதிக்கம் செலுத்துகிறது.

# பாரதி பாதையிலே நாம்!

தமிழரசுக் கழகம் தமிழினத்தின் சார்பில் செயல் பட்டு வரும் இனவழித் தேசிய இயக்கமாகும். தெய்வப் பற்று, தேசப் பற்று, தாய்மொழிப் பற்று ஆகிய மூன்றை யும் தமிழினத்தாரிடையே வளர்க்கவும், வலுப்படுத்தவும் தமிழரசுக் கழகம் தோன்றியது. அதற்காகவே ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடைய பார்லிமெண்டரி இயக்கமாக அது இயங்காமல், அதற்குப் புறம்பான தேசிய கலாசார அமைப்பாக இயங்கி வருகிறது. பார்லிமெண்டரி அரசியல் கட்சி எதுவும் தமிழினத்தாரிடையே ஒருமைப்பாட்டை உருவாக்குவது சாத்தியமில்லை.

சாதிப் பூசல், சமயப் பூசல் போல, கட்சிகளிடையே நிலவும் பூசலும் போட்டியும் போராட்டமும்கூட தமிழினத்தைப் பிளவுபடுத்திவிடும் என்ற உண்மையை நான் உணர்ந்ததாலேயே தமிழரசுக் கழகத்தைப் பார்லி மெண்டரி அரசியலுக்குப் புறம்பான இனவழித் தேசிய இயக்கமாகத் தொடங்கினேன். தான் பிறந்த நாளிலிருந்து இதுவரை எனது கழகம் அந்தப் பாதையிலே உறுதியாக நடை போட்டு வருகிறது.

## தமிழரசுக் கழகத்தின் தனித்தன்மை

பாரதியார், சாதி வேறுபாடுகளை வெறுத்தவர்; சமயப் பகைமைகளை எதிர்த்துப் பாடியவர். ஆகவே, சாதி—சமய வேற்றுமையின்றித் தமிழினத்தார் அனைவருக்கும் அவர் பொதுவாகிவிட்டார். அனைத்துச் சாதியினரும், அனைத் துச் சமயத்தாரும் அவர்மீது உரிமை கொண்டாட நியாயம் உண்டு. அதனுற்றான், தமிழினத்தின் தேசிய

இயக்கமான தமிழரசுக் கழகம் பாரதியாரைத் தனது வழி காட்டியாகக் கொண்டுள்ளது.

தமிழகத்திலே கட்சிகளும், கழகங்களும் ஏராளமாக இருந்து வருகின்றன. அவற்றுள் மகாகவி பாரதியாரை முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பது தமிழரசுக் கழகம் ஒன்றுதான். பாரதியார் தெய்வபக்தியைப் போதித் தாராதலால் தெய்வம் ஒன்று உண்டு என்பதிலே நம்பிக்கை யற்றவர்கள் அந்த அளவுக்கேனும் பாரதியாருக்கு அயலா ராகி வருகின்றனர்.

எட்டயபுரம் கவிஞர் இந்தியா முழுவதையும் ஒருமைப்பாடுடைய ஒரே நாடாகக் கருதி அதன்பால் பக்தி செலுத்தினார். அதனால், தேசிய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கையற்றவர்களுக்கும் அவருக்கும் நடுவே இடை வெளி ஏற்பட்டுவிடுகிறது.

புரட்சிக் கவி பாரதியார் தமிழிடத்து ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். தமிழர் என்ற இனவுணர்வையும் பெற் றிருந்தார். தமிழகம் தனி நாடு என்றும் பாடி வைத் துள்ளார். இவையனைத்தையும் "மாகாண வெறி" என்று சொல்லிப் பழிக்கின்ற தேசியவாதிகள் பாரதியாரோடு இரண்டறக் கலந்து விடுவது சாத்தியமில்லை.

பாரதியார் சாதி வேறுபாடுகளைச் சாடிப் பாடினார். "சாதிகள் இல்லையடி பாப்பா!" என்று பாப்பாவுக்குப் போதித்தார். அதனால், சுய சாதியிடத்துப் பற்றும், பிற சாதியிடத்துப் பகைமையும் கொண்ட "சாதிய வாதிகள்" பாரதியாரிடமிருந்து விலகி நிற்கின்றனர்.

தமிழரசுக் கழகம் தெய்வம் உண்டு என்று நம்புகிறது. உயிர்க்குலம் அனைத்துக்கும் தெய்வம் ஒன்றுதான் என்ப தனையும் ஏற்கிறது; சாதிகளை வெறுக்கிறது; சமயப் பகை மைகளை எதிர்க்கிறது; சமயங்களிடையே சமரசம் காணப்

பாடுபடுகின்றது. தேச பக்தியைக் கடைப்பிடிக்கின்றது. தேசிய ஒருமைப்பாட்டை உறுதியாக ஆதரித்து நிற்கிறது; தமிழிடத்துப் பற்று கொண்டு, அதனை வளர்ப்பதற்குப் பாடுபடுகிறது. தமிழர் என்னும் இனவுணர்ச்சியைத் தமிழர் உள்ளங்களிலே வளர்க்கத் தொண்டு புரிகின்றது; புதிய சோஷலிச சமுதாயம் படைப்பதிலே ஆர்வம் கொண்டு பணி புரிகின்றது.

இதன் காரணமாக, பாரதியாரைத் தனது முன்னோடியாக, தனக்கு வழிகாட்டியாக தமிழரசுக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனது கழகம் அவரை முழுசாக அங்கீகரித்து, அவர் கொண்டிருந்த கொள்கைகளைச் செயல் படுத்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

## முதன் முதலில் காங்கிரஸ் பெயரால்...

தமிழரசுக் கழகம் என்னிடமிருந்துதான் தோன்றியது. அதுபோல, பாரதியின் புகழ் பரப்ப கழகம் ஏற்றுக் கொண்டுள்ள பணி—கழகம் தோன்றுவதற்கு முன்பே—என்னிடமிருந்தே தோன்றியது. பாரதியின் கொள்கைகளைப் பரப்ப தமிழரசுக் கழகத்தார் ஆற்றி வந்துள்ள பணிகளை இங்கு தொகுத்துத் தர விரும்புகிறேன்.

1936 முதல் 1947 வரை நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாக இருந்து தேசத்திற்குத் தொண்டாற்றினேன். அந்தக் காலகட்டத்திலே பாரதியாரின் விழாவைக் கொண்டாடும் பணியையும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மூலமே முதன் முதலில் தொடங்கி வைத்தேன். அதற்கு முன் பாரதியாரின் விழாவைக் கொண்டாட காங்கிரஸ் முயன்றதில்லை. அதனை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக காங்கிரஸ் கருதியது. 1936க்கு முன் சென்னை

மகாஜன சபையும், திருவல்லிக்கேணியி லிருந்த பாரதி பிரசுராலயமுந்தான் மிகவும் அடக்கமான முறையில் செப்டம்பர் 11ல் பாரதி விழாவைக் கொண்டாடி வந்தன.

இரண்டாவது, மூன்றுவது வரிசையிலிருந்த காங்கிரஸ் காரர்களில் சிலரே—குறிப்பாக, பாரதியார் வாழ்ந்த காலத்திலே அவரோடு தோழமை கொண்டிருந்த வ. ரா., சங்கு சுப்பிரமணியம், சங்கு கணேசன் போன்றவர்களே பாரதி விழாவில் பேச அழைக்கப்பட்டனர்.

1936ல் நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரான பின்னர், செப்டம்பர் 11 தொடங்கி தொடர்ந்து ஒரு வாரம் வரை சென்னை நகரின் பல பேட்டைகளில் திட்டமிட்டு பாரதி விழாவை நடத்தினேன். தென் சென்னையில் காங்கிரஸ் மண்டபத்தில் தொடங்கி வடசென்னையில் ராபின்சன் பார்க்கில் முடியும் வகையில் பாரதி விழா வாரத்திற்குத் திட்டமிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஒன்றிரண்டு ஆண்டுகளில் செப்டம்பர் 11ல் வடசென்னையில் தொடங்கி 17ல் தென் சென்னையில் முடித்திருக்கிறேன்.

## வினு எழுந்தது!

அந்நாளிலும், "ஒரு தமிழ்க் கவிஞனின் விழாவை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கொண்டாட வேண்டுமா?" என்று வினு எழுப்பிய காங்கிரஸ்காரர்கள் உண்டு. அந்த வினுக்களுக்கெல்லாம் தக்கபடி விடையளித்துத்தான் நான் பாரதி விழாவை நடத்த வேண்டியிருந்தது. ராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, சி. என். முத்துரங்க முதலியார் போன்ற காங்கிரஸ் பெருந் தலைவர்களை ஆண்டு தோறும் பாரதி விழாவில் பேச வைத்திருக்கிறேன்.

பாரதி விழா கட்சி வேற்றுமையற்ற முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதனை அப்போது நான் கொள்கை

யாகக் கொண்டிருந்தேன். அதனால், காங்கிரசுக்கு வெளியே யிருந்த—சிலவ்கையில் காங்கிரசோடு கருத்து வேறுபாடும் கொண்டிருந்த—திரு. வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் பி. வரதராசலு நாயுடு, தொழிற் சங்கத் தலைவர் திரு. வி. சக்கரை செட்டியார் ஆகியோரை யும் அழைத்து பாரதி விழாவில் பேச வைத்திருக்கிறேன். இதனை, காங்கிரஸ் முன்னணித் தலைவர்களிலே சிலர் வெறுத்தனர். "பிராமணரல்லாதார்" என்ற உணர்ச்சி யுடன் நான் பாரதி விழாவுக்கு அவர்களை அழைப்பதாகவும் என்மீது பழி சுமத்தினர். அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டுதான் தமிழர் தலைவர்களை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு பாரதி விழா மேடையைப் பயன்படுத்தி வந்தேன்.

## நாமக்கல் கவிஞரின் பாடல்கள்

தமிழ்ப் புலவர்களிலே திரு. வி. க. வையும் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரையும் பாரதி விழாவில் ஆண்டுதோறும் அழைத்துப் பேச வைப்பதைக் கடமை யாகக் கொண்டிருந்தேன். "காங்கிரஸ் மேடையிலே தமிழ்ப் புலவர்கள் பேச வேண்டுமா?". என்று என்னை வெறுப்புடன் கேட்ட தலைவர்களும் உண்டு.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் பாரதி விழாவைக் கொண்டாடத் தொடங்கிய ஆண்டிலே அந்த மகாகவியைப் புகழ்ந்து கவிதைகள் புனைந்து தருமாறு நாமக்கல் கவிஞரை கடித மூலம் வேண்டிக் கொண்டேன். அவரும் எனது வேண்டுகோளின்படி பத்துச் செய்யுட்களைப் புனைந்து எனக்கு அனுப்பி வைத்தார். நாமக்கல் கவிஞரின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ள நூலிலே "பாரதி பாட்டு" என்னும் தலைப்பின் கீழுள்ள பத்துச் செய்யுள்கள் அவர் எனக்கு எழுதி அனுப்பியவை

யாகும். அவை, 'தினமணி', 'சுதேசமித்திரன்' ஆகிய நாளிதழ்களில் வெளிவரச் செய்தேன். புகழ்மிக்க நடிகரான —பெண்வேடம் தாங்கி நடிப்பதில் பெயர்பெற்றவரான— ''ஆரிய கான'' கே. எஸ். அனந்தநாராயண ஐயர், தமது பிற்காலத்தில் என்னோடு நெருங்கி தோழமை கொண்டிருந்தார். அவருடைய தோழமையை எனக்குக் கிடைத்த பெரும் பேருகக் கருதினேன். அந்த அளவுக்கு அவர் சிறந்த தேசபக்தர். தமிழிடத்துப் பற்றுடையவர். லட்சக்கணக்கான மக்கள் அடங்கிய பெருங்கூட்டத்திலேயும் உணர்ச்சி வயப்பட்டுப் பாடக்கூடியவர். பாரதிவிழாக் கூட்டங்களிலே — ஏன்? காங்கிரஸ் கூட்டங்களிலேயும் நாமக்கல் கவிஞர் எனக்குப் புனைந்தளித்த பாரதியார் பாடல்களை அனந்த நாராயணரைக் கொண்டு பாடச் செய்தேன். இப்படி, பல ஆண்டுகள் ஐயர் பாரதியார் பாடல்களைப் பாடி வந்தார்.

## உருவச் சிலை

பாரதியாருக்கு நினைவுச் சின்னம் வைப்பதற்கு முதன் முதலில் நான்தான் முயற்சி எடுத்தேன். 1939-டிசம்பரில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. யின் முக உருவச் சிலையை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் நிறுத்தினேன். அதனையடுத்து, பாரதியாரின் முக உருவச்சிலையை நிறுத்தப் போவதாக வ. உ. சி. உருவச்சிலை திறப்பு விழாவிலேயே அறிக்கை விடுத்தேன். அது, பத்திரிகைகளி லெல்லாம் வெளிவந்தது. காங்கிரஸ் மண்டப நுழைவாயிலின் வலது புறத்திலே வ. உ. சி. முக உருவச்சிலையை நிறுத்தி, அதற்கு இணையாக இடது புறத்தில் பாரதியாரின் முக உருவச் சிலையை வைப்பதற்குத் திட்டமிட்டேன். ஆனால் வ. உ. சி. யின் சிலை திறக்கப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே காங்கிரஸ் மண்டபம் தீ விபத்தால் அழிந்துபோய்விட்டது.

பாதுகாப்பற்றிருந்த நிலையில் வ. உ. சி. சிலையும் யாரோ ஒரு விஷமியால் சேதப்படுத்தப்பட்டு விட்டது. இந்த விபத்து நிகழ்ந்த சில மாதங்களுக்குள் தனி நபர் சத்தியாக்கிரகமும், அடுத்து ஆகஸ்டுக் கிளர்ச்சியும் தோன்றின. காங்கிரஸ் மகாசபை தொடர்ந்து மூன்றாண்டு காலம் சட்ட விரோதமாக்கப்பட்டிருந்தது. அதனால், திரும்பவும் வ. உ. சி. க்கும் சிலை எழுப்பி, முதலில் திட்டமிட்டபடி பாரதியாருக்கும் சிலை எழுப்புவது சாத்தியமில்லாமல் போய்விட்டது.

## ஆகஸ்டுப் போரின் மத்தியில் பாரதி விழா

1942 ஆகஸ்டு 13ல் நான் சிறை புகுந்தேன். 1944 ஜனவரியில் இனி பிழைக்க மாட்டேன் என்று மருத்துவர் சொன்னதால் விடுதலை பெற்றேன். அந்த ஆண்டிலேயே சென்னை நகரில் பாரதி விழாவை நடத்த முற்பட்டேன். அப்போது சட்ட விரோதமாக்கப்பட்டிருந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் என்ற முறையிலேயே பாரதி விழாவிற்குப் பொறுப்பேற்று நடத்தினேன்.

திரு. வ. ரா. தலைமையிலே, என்னையும் கம்யூனிஸ்டுத் தலைவர் பி. ராமமூர்த்தியையும் கூட்டுச் செயலாளர்களாகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் நடத்தினேன். அரசு அந்த விழாவைத் தடை செய்யக் கூடும் என்ற சூழ்நிலையில்தான் 1944ல் பாரதி விழாவை நடத்தினேன்.

அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டுகள் ஆகஸ்டுக் கிளர்ச்சியின் எதிரிகள் என்று கருதப்பட்டவர்களாதலால், அவர்களின் தலைவரான திரு. பி. ராமமூர்த்தியைச் சேர்த்துக் கொண்டு நான் பாரதி விழா நடத்துவதை காங்கிரஸ்

காரர்களில் சிலர் எதிர்த்தார்கள். கோகலே ஹாலில் நடந்த விழாவிலே சலசலப்பும் செய்தார்கள்.

1946ல் நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுபட்டுவிட்டேன். அதன் பின் அந்தக் கமிட்டி பாரதி விழாவை நடத்தப் பொறுப்பு ஏற்கவில்லை. ஆம்; இதுவரையில்!

நான் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னர், அந்தக் கழகத்தின் மூலமே ஆண்டுதோறும் செப்டம்பர் 11ல் பாரதி விழா கொண்டாடப் பட்டது. தலைநகரான சென்னையில் மட்டுமல்லாமல், வெளி மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான ஊர்களில் கிளைக் கழகங்களாலும் பாரதி விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வந்தது.

## புகழ் பாடும் புது நூல்கள்

இப்படி, பாரதியார் விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வந்த அரசியல் சார்புள்ள அமைப்புதமிழரசுக் கழகம் ஒன்றுதான். சென்னை பாரதியார் சங்கத்தின் செயலாளராக இருந்த திரு. ஆக்கூர் அனந்தாச்சாரியார் மறைந்த பின்னர், அவர் வகித்த பதவியை நானும் பாரதி பக்தர்கள் பலரும் தூண்டியதன் பேரில் ஔவை தி. க. சண்முகம் ஏற்றுக்கொண்டார். முந்தைய ஆண்டு களைப்போல் சிறந்த முறையில் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்னையில் அவர் நடத்தி வந்த பாரதி விழாவுக்கு நான் முழுஅளவில் ஒத்துழைப்பு தர வேண்டியிருந்தது. அதனுல், சென்னை நகரில் தமிழரசுக் கழகம் தனியே நின்று பாரதிவிழாவை நடத்து வது தேவையற்றுப் போய்விட்டது.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் பாரதியாரின் கொள்கைகளைப் பரப்பும் பிரசார நூல்கள் பலவற்றை நான் வெளியிட்டு வந்துள்ளேன். அவை வருமாறு:

1. எங்கள் கவி பாரதி
2. பாரதியாரும் தேசிய ஒருமைப்பாடும்
3. வள்ளலாரும் பாரதியாரும்
4. உலக மகாகவி பாரதி
5. பாரதியும் ஆங்கிலமும்
6. பாரதியாரின் பாதையிலே...

## கழகத்தவரின் பணிகள்

தமிழரசு இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர் சிலரும் பாரதியாரின் கொள்கைகளைப் பரப்பும் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். திண்டுக்கல் தோழர் திரு. ந. முத்துலக்கையன் "பாரதி தாசனும் பாரதியாரும்" என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னை பாரதி சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெற்ற பாரதி பிறந்த நாளில் அறிஞர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகளை சிறப்பு மலராக வெளியிட்டு வந்தார் ஔவை சண்முகம்.

முன்னர் நான் நடத்திய 'தமிழ் முரசு', 'தமிழன் குரல்' ஆகிய திங்கள் ஏடுகளிலும், தற்போது நடத்திவரும் "செங்கோல்" வார ஏட்டிலும் பாரதியாரின் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் வகையில் ஒரு நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். வேறுபல பத்திரிகைகளுக்கும் கட்டுரைத் தொகுப்பு நூல்களுக்கும் பாரதியார் பற்றிக் கட்டுரைகள் வழங்கியுள்ளேன்.

பாரதியாரின் பாடல்கள் அவரது குடும்பத்தினரின் தனி உடைமையாக இருந்த நிலையை மாற்றி அவற்றை அரசுடைமையாக்குவதற்கு முயன்று அதிலே வெற்றி

கண்டார் முத்தமிழ் கலா வித்வரத்தின ஔவை தி. க. சண்முகம். தமிழரசு இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர் என்ற நிலையிலே, அவரது சாதனையைச் சுட்டிக்காட்டி நான் பெருமைப்படலாந்தானே! இந்தப் பணியிலே அவருக்குத் துணையாக இருந்தவர்கள் நாரண. துரைக்கண்ணன், புத்தனேரி சுப்பிரமணியம் ஆகியோருட் பட பலர் ஆவர்.

இன்னும் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் ஜகதீசன் ஆகிய தமிழரசு இயக்கத் தோழர்கள் பாரதி யார் பேரில் எண்ணற்ற கவிதைகளைப் புனைந்துள்ளனர்.

பேச்சு மேடைகளிலே இதுவரை யான் நிகழ்த்தியுள்ள பல்லாயிரக் கணக்கான சொற்பொழிவுகளிலேயும், பல் வேறு விஷயங்களைப்பற்றி எழுதியுள்ள கட்டுரைகளிலே யும், யான் எழுதி வெளியிட்டுள்ள நூல்களிலேயும் பாரதியாரின் பாடல் வரிகள் கலவாத பேச்சோ, கட்டுரையோ, நூலோ இல்லையென்று உறுதியாகச் சொல்வேன்.

பாரதியாரின் கொள்கைகளைப் பரப்ப நான் ஆற்றி வந்துள்ள பணிகளைப் பாராட்டும் வகையிலே சென்னை பாரதியார் சங்கம் வெள்ளிக் கேடயம் ஒன்றை எனக் களித்து என்னைப் பெருமைப்படுத்தியுள்ளது.

தமிழரசு இயக்கம் இதுவரை நடத்தி வந்துள்ள எண்ணற்ற போராட்டங்களிலே பாரதியாரைத் தனது தளபதியாகப் பயன்படுத்தி வந்துள்ளது. இனியும் பயன் படுத்தும்.

## முழுமையான பக்தன்

மகாகவி பாரதியாரைப்பற்றிப் பேசுவதற்கு அவருடைய இலக்கியங்களைப் பயின்றதால் மட்டுமே நான் உரிமை பெற்றுவிடவில்லை. அவரைப் போலவே தேசபக்த பாரம்பர்யத்தைச் சார்ந்தவன் — ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டவன் — தமிழிடத்தில் பற்றுடையவன்— தமிழன் என்னும் இனவுணர்வுடையவன்—மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் இணைத்து வாழ்க்கை நடத்துபவன் — தெய்வபக்தியுடையவன் — தேசபக்தியுடையவன் — ஏற்றத் தாழ்வோடு கூடிய சாதிகளற்ற சமுதாயத்தை விரும்புபவன்—சமயங்களிடையே சமரசத்தை நாடுபவன்— சுரண்டலற்ற சோஷலிச சமுதாயம் படைக்கத் துடிப்பவன் என்ற தகுதிகளாலும் நான் பாரதியைப் பற்றிப் பேச உரிமை பெற்றவனாக இருக்கிறேன். தமிழரிலே ஒவ்வொருவரும் இந்த நிலையை தங்களுக்கும் உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்பது எனது பிரார்த்தனை!

வாழ்க, பாரதி புகழ்!

# மகாகவி பாரதி பாடிய பாஞ்சாலி சபதம்

உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார், இளங்கோ வடிகள், கம்பர் போன்று மாகாப்பியம் பாடி வைக்கவில்லை. ஆனால், இன்றைய உலகில் உள்ள அநீதிகளை மறை முகமாகச் சாடி, தன் இதயத்தே உருவான எண்ணற்ற நீதிகளை எடுத்துக் காட்டி, "குறுங் காப்பியம்" ஒன்றைப் படைத்துள்ளார். அது, தமிழில் அவர் படைத்த முதல் காப்பியமன்று. வியாசர் படைத்த மாபாரதத்தை அடி யொற்றி, அதன் ஒரு பகுதியைப் பாடிவைத்த வழிக் காப்பியமாகும். அதன் பெயர் **பாஞ்சாலி சபதம்.**

## தனிக் காப்பியம் பாடாததேன்?

பாரதிக்கு தனிக் காப்பியம் பாடும் புலமையும் திறமையுமுண்டு. ஆனால், அந்தப் பணியில் அவரை ஊக்குவிக்கும் சூழ்நிலை அந்நாளில் அவருக்கில்லை. இளங்கோ காப்பியம் செய்த காலத்தில், தமிழகத்தைத் தமிழரே ஆண்டனர். கம்பர் காப்பியம் பாடிய தலைமுறை யில், செந்தமிழ் நாட்டில் தமிழர்தம் சொந்த ஆட்சி நடைபெற்றது. வாய் மணக்கப் பாடும் கம்பருக்கு வரை யாது வழங்க சடையப்ப வள்ளலும் இருந்தார். புராண காப்பியங்கள் பாடிய புலவர்கள் காலத்து நிலையும் இது தான். ஆனால், பாரதியின் காலத்து நிலை வேறு.

அவர் காலத்தில், குமரி முதல் இமயம் வரை உள்ள நம் தாய்நாடு பிரிட்டிஷ் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்தது.

தமிழகத்தில், தமிழ் ஆட்சி மொழியாக, கல்வி பயிலும் அறிவு மொழியாக இல்லை. நீதி மன்றங்களிலேயும் தமிழ் இல்லை. படித்த தமிழர்களின் நெஞ்சங்களிலே தமிழ்ப் பற்று இல்லை. தமிழர் என்னும் இன உணர்வு தமிழகத்து மக்களுக்கு இல்லாத காலம். தமிழகத்திலே எங்கும் எதிலும் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்தியது.

இந்த நிலையில் நம் செந்தமிழ்க் கவி பாரதி சிலப்பதிகாரத்தைப் போன்று பெருங்காப்பிய மொன்றைப் படைக்காதது குறித்து வியப்பதற்கில்லை. மற்று, எட்டயபுரக் கவிஞர், தன் இல்லத்திலே தனித்து வாழாமல், விடுதலைப் போர்க்களத்திலே, வீரர்களோடு வீரராகக் கலந்து வாழ்ந்தார். தன்னை விரட்டி வரும் இரகசியப் போலீசார் தரும் தொல்லைகளுக்கு நடுவே தமிழுக்குத் தொண்டு புரிந்தார். போதாக் குறைக்கு, பட்டினியும் பசியும் அவரை வாட்டின. தரித்திரக் குடும்பத்தின் தலைவராகவும் இருந்தார். வாரி வழங்க மனம் படைத்த வள்ளல்கள் அவர் காலத்திலும் இருந்தார்கள். ஆனால், அவர் "ராஜத் துரோகி!". அந்நாளில் "தேசபக்தர்" என்று மக்கள் யாரைக் கருதினர்களோ, அவர்களுக்கு "ராஜத்துரோகி" எனப் பெயரிட்டு, அவர்களை வேட்டையாடியது வெள்ளையராட்சி. அதனல், ஆட்சியின் பகை வருமோ என்று அஞ்சி, பாரதியைக்கண்ட மாத்திரத்திலேயே பதுங்கி மறைந்தார்கள் பணம் படைத்த வள்ளல்கள். இந்த நிலையில் மகாகவி பாரதி மாகாப்பியம் பாடுவதெங்ஙனம்!

## 'பாஞ்சலி சபதம்' பாடினர்!

புரட்சிக்கவி பாரதி, தமிழிலுள்ள காப்பியங்கள் அனைத்தையும் படித்து முடித்திருந்தார். வடமொழிக் காப்பியங்களிலேயும் போதிய ஞானம் பெற்றிருந்தார். ஆங்கில மொழிக் காப்பியங்களையும் ஆழப் படித்திருந்தார்.

ஆகவே, நாட்டின் சூழ்நிலை சாதகமாக இருந்திருந்தால் மாகாப்பியம் படைப்பதிலே இளங்கோவையும் கம்பரையும் விஞ்சியிருப்பார். ஆனால், தமிழ் செய்த துரதிருஷ்டத்தால் அவரால் பெருங்காப்பியம் பாட இயலவில்லை. ஆயினும், காப்பியம் பாடும் திறன் தமக்கு உண்டு என்பதைக்காட்டும் வகையில் "பாஞ்சாலி சபதம்"பாடினார்.

தாம் பாடிய பாஞ்சாலி சபதத்தைத் தம் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களும் புலவர்களும் பாராட்டாதது குறித்து அவர் மனம் வருந்தினார்.

## 'விதவைப் பசங்கள்'!

"பொன்வால் நரி" என்னும் பெயருடைய நகைச்சுவை மிக்க சிறுகதை ஒன்றை 1914 ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார் பாரதியார். அந்த ஆங்கில நூலைப் படித்த பரங்கி மொழி பக்தர்களான தமிழர் சிலர், பாராட்டுக் கடிதங்கள் எழுதினர் பாரதியாருக்கு. அந்தக் கடிதங்களைக் கண்டு பாரதி மகிழவில்லை; வருந்தினார். குவளைக் கண்ணன் என்ற தம் அருமை நண்பரிடம்,

> "போகச் சொல்லு, விதவைப் பசங்களை! நான் என்னுடைய பாஷையில் என் முழு மூளையையும் கசக்கிப்பிழிந்து பாஞ்சாலி சபதம் எழுதியிருக்கிறேன். அது நன்றாக இருக்கிறது என்று ஒருவனும் ஒரு கடிதமும் எனக்கு எழுதவில்லை. அந்தப் புத்தகத்தை நீ ஒருவன்தான் வாசிக்கிறாய். ஆங்கிலத்தில் எழுதின இந்தப் 'பொன்வால் நரி'க்கு ஐந்நூறு பிரதிகள் உடனே வேண்டுமாம்."

என்று பாரதி கூறினாராம்.

இதிலிருந்து தமிழ்க் கவிஞனை, அந்தக் கவிஞன் படைக்கும் காப்பியத்தைப் பாராட்டும் சூழ்நிலை இல்லாத

காலத்தில் பாரதி வாழ்ந்தாரென்பது புலனாகும். இந்த அவல நிலையிலே, பாரதக் கதையின் ஒரு பகுதியை எடுத்து வழிநூல் செய்வதற்கே அந்த மகாகவி முழு உழைப்பு எடுத்திருக்கிறார் என்பது "என் முழு மூளையையும் கசக்கிப் பிழிந்து பாஞ்சாலி சபதம் எழுதியிருக்கிறேன்" என்று நண்பர் குவளைக்கண்ணனிடம் அவரே கூறியிருப்பதால் அறிகிறோம்.

## சமர்ப்பணத்தில் புதுமை

"பாஞ்சாலி சபதம்" பாடிய பாரதி, அதன் முகப்பிலே "சமர்ப்பணம்" என்னும் தலைப்பிட்டு எழுதியுள்ள பகுதி வருமாறு :

### ஸமர்ப்பணம்

**தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப் போகிற வரகவிகளுக்கும் அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப் போகிற பிரபுக்களுக்கும் இந்நூலைப் பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன்.**

—ஆசிரியன்.

தனது நூலை இறந்து போனவர்களுக்கோ, இருந்து வாழும் பெரிய மனிதர்களுக்கோ சமர்ப்பணம் செய்வது தான் எழுத்தாளர் கடைப்பிடிக்கும் வழக்கம். புதுமைக் கவி பாரதி, இனி தோன்றவிருக்கும் வரகவிகளுக்கும், அவர்களைப் போஷிக்கவிருக்கும் பிரபுக்களுக்கும் தமது நூலை சமர்ப்பணம் செய்துள்ளார். இதனால் வள்ளுவர், இளங்கோ, கம்பன் போன்ற வரகவிகள் சுதந்திர நாட்டிலே தோன்றுவார்கள் என்பதில் அந்த மகாகவிக்கிருந்த மன உறுதி புலனாகிறது. அவரது சமர்ப்பணத்தில் வெளிப் படும் இன்னொரு புதுமை என்னவென்றால், வரையாது

வழங்குகின்ற பிரபுக்கள் தோன்றினாலன்றி, வரகவிகள் தோன்ற மாட்டார்கள் என்பதாகும்.

பாரதியார், பாஞ்சாலி சபதத்திற்கு தாம் எழுதியுள்ள முகவுரையில்,

> "எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுது வதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படா மலும் நடத்துதல் வேண்டும்.

> "காரியம் மிகப் பெரிது. எனது திறமை சிறிது. ஆகையால், இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று; வழிகாட்டியாக."

என்று குறிப்பிட்டுள்ளார்.

இளங்கோவையும் கம்பரையும் பின்பற்றி இந்நாளில் காப்பியம் செய்யும் வரகவிகள் தோன்ற வேண்டுமென்று விரும்பும் பாரதியார், பொதுஜனங்கள் பொருளுணர்ந்து கொள்ளும் முறையில் பழகு தமிழில் எழுத வேண்டு மென்றும் சொல்லாமல் சொல்லுகின்றார். சந்தத்திலும் மெட்டிலும் கூட இந்நாளைய மக்களின் விருப்பத்திற்கும் ரசிகத் தன்மைக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் கூறு கின்றார். ஆனால், வாழையடி வாழையெனத் தோன்றி வந்துள்ள காப்பியப் புலவர்களைப் பின்பற்றி, காப்பியத்துக் குரிய நயங்கள் குறைவுபடாமல் எழுத வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்கின்றார். தாமே கூறும் இந்த

இலக்கணங்களுக்கு ஒரு இலக்கியமாக தமது பாஞ்சாலி சபதத்தைப் படைத்துள்ளார் பாரதியார்.

## பெயரிடுவதிலேயும் தேசபக்தி!

தனது குறுங் காப்பியத்திற்குப் பெயர் வைப்பதிலேயும் ஒரு புதுமை நிகழ்த்தியுள்ளார். ஆம்; பாரதத்தில் துரியோதனன் சபையிலே தருமனும் சகுனியும் சூதாடும் கட்டம் தொடங்கி, துச்சாதனன் துகிலுரிந்த கொடுமைக்குப் பின்னர் பாஞ்சாலி சூளுரைக்கும் கட்டம் வரையுள்ள கதைப் பகுதிக்கு, "பாஞ்சாலி சபதம்" எனப் பெயரிட்டார் பாரதியார்.

பாகவதர்களோ, "திரௌபதை மான ஸம்ரட்சணம்" என்று பெயர் தந்தனர். பிற்கால நாடகக் கலைஞர்களோ, "சூது துகிலுரிதல்" என்று சுவைபடப் பெயர் வைத்தனர். வில்லிபுத்தூரார், காப்பியம் படைத்த கவிஞராதலால், மேலே நிகழவிருக்கும் பெரும் போருக்கு "ஒத்திகை" என்பதனை உணர்த்த "சூதுபோர்ச் சருக்கம்" என்றார்.

பாகவதர்கள், பக்தை ஒருத்திக்கு பகவான் அருள் சுரந்து ஆடை அளித்த அற்புதத்தைப் பாமர மக்களுக்கு உணர்த்த விரும்பியவர்களாய், திரௌபதியின் மானத்தைச் சம்ரட்சித்த பெருமையை வெளிப்படுத்திப் பெயரிட்டனர்.

நாடகக் கலைஞர்களுக்கு வசூலைப் பெருக்க பாமர மக்களைத் திரட்டுவதே நோக்கமாதலால், துகிலுரியும் காட்சியை நினைப்பூட்டும் வகையில் பெயர் வைத்தனர்.

நமது மகாகவி பாரதியார், இத்துணைப் பெயர்களையும் புறக்கணித்து, "பாஞ்சாலி சபதம்" எனப் பெயர் தந்தார்.

கொடுங்கோலன் அவையிலே நின்று சபதம் செய்த பாஞ்சாலியின் வீரத்தை, அடிமைப்பட்டு, அன்னிய

அரசுக்கு அடங்கி வாழும் பாரத மக்களுக்கு நினைப்பூட்டி, அவர்களை எல்லாம் விடுதலைக்குப் போராடும் வீரர்களாக மாற்றும் நோக்குடன் தன் குறுங் காப்பியத்திற்குப் பெயர் தந்தார்.

தான் பாஞ்சாலி சபதம் பாடியதனை தன் அறிவின் திறத்தால் நிகழ்த்திய செயலாகக் கருதாமல்,

> "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டு மென்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாள்"

என்கிறார் முன்னுரையிலே.

"புதிய ருஷ்யா" என்னும் பாட்டில் "மாகாளி பரா சக்தி கடைக்கண் வைத்தாள்" என்று தொடங்கியது போல, பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையிலும், "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர மாகாளி பராசக்தி கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறாள்" என்று கூறி, தமிழினத்தின் எதிர்காலம் நல்லவிதமாக அமையுமென்பதில் தமக்குள்ள நம்பிக்கையைப் புலப்படுத்தியுள்ளார்.

பாரதியார், ஆணவப் பேயிடம் அகப்படாத அறிஞர் பெருமகனாவார். உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்கும் ஒழுக்கமுடையவர். அதனால்,

> "இந்நூலை வியாச பாரதத்தின் மொழி பெயர்ப் பென்றே கருதி விடலாம். அதாவது, "கற்பனை" திருஷ்டாந்தங்களில் எனது "சொந்தச் சரக்கு" அதிக மில்லை. தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி."

என்று மிகுந்த அடக்கத்துடன் கூறியுள்ளார். தன்னடக்கத்தால் அவர் அப்படிக் கூறியிருப்பினும், பாஞ்சாலி சபதத்தில், முதல் நூலில் வியாசர் புனையாத புதுப் புதுக் கற்பனைகளை எல்லாம் புனைந்து காட்டியிருக்கின்றார்

புதுமைக்கவி பாரதியார். உவமானங்களில் சில அவருக்கே சொந்தமானவை. பாத்திரங்களின் பண்பு களிலேயும் காலத்திற்கேற்றபடி மாறுதல் செய்து "தன் கைவரிசை"யைக் காட்டியுள்ளார்.

தாம் இயற்றிய பாஞ்சாலி சபதம் என்னும் நூலின் இறுதியில் "பொருள் விளக்கமும் குறிப்புக்களும்" என்னும் தலைப்பின் கீழ் தனது குறுங் காப்பியத்தின் சில நிகழ்ச்சி களுக்கும் வாசகங்களுக்கும் உரைநடையில் விளக்கம் எழுதியுள்ளார் பாரதியார். அந்த விளக்கம் வியாசர் படைத்த மாபாரதக் காப்பியம் பற்றிய திறனாய்வாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. சான்றாக, பாண்ட வருக்கும் கௌரவருக்கும் நடந்த பாரதப் போர் தவிர்க்கப் பட்டிருக்க வேண்டும் என்றும், அப்படித் தவிர்க்கப் படாததற்கு அக்கால பிராமணர்கள் தங்களுக்குரிய ஆச்சா ரத்தைக் கடைப்பிடிக்கத் தவறியதே காரணமென்றும் கூறியுள்ளார். பாரதப் போரினால், அழியக் கூடாத க்ஷத்திரியர் குலம் அழிந்துவிட்டதென்று ஆயாசப்பட்டுக் கொள்கிறார்.

> "ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின் அறிவு மழுங்காதிருக்கும் வரை அதற்கு நாசம் ஏற்படாது.
>
> "பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தி யிருப்பார்களானால் மற்றக் குலத்தவரும் நெறி தவறி யிருக்கமாட்டார்கள்; மஹாபாரதப் போர் நடந் திராது; பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா"

## அக்ரஹார வருணனை!

இது மாபாரதப் போர் பற்றி, பாரதி கொண்ட கருத் தாகும். இதனைப் பாஞ்சாலி சபதத்திலும் கவிதை வடிவில்

கொடுத்துள்ளார். அஸ்திஞபுரத்தின் அக்கிரகாரத்தை வருணிக்குமிடத்தில்,

''அந்தணர் விதிக ளாம்;—மறை
யாதிக ளாம்கலைச் சோதிக ளாம்;
செந்தழல் வேள்விக ளாம்;—மிகச்
சீர்பெருஞ் சாத்திரக் கேள்விக ளாம்;
மந்திர கீதங்க ளாம்;—தர்க்க
வாதங்க ளாம்; தவ நீதங்க ளாம்;
சிந்தையி லறமுண்டாம்—எனிற்
சேர்ந்திடும் கலிசெயும் மறமுமுண் டாம்.''

என்று பாடுகின்ருர்.

மாபாரதப் போர் நிகழ்வதற்கு முன்பே, ''அந்தணர் என்போர் அறவோர்''என்று வள்ளுவர் கூறியபடி, அஸ்திஞ புரத்திலிருந்த அந்தணர்களுக்கு அற உணர்வு இருந்ததாம். ஆனுல், செயலிலல்ல; வெறும் சிந்தையிலே! செயலில் கலியுகத்தைத் தோற்றுவிக்கும் மறத் தன்மைகள் மலிந் திருந்தனவாம்.

## குருடர்களெல்லாம் கவிஞர்கள்!

பாரதியார், பாஞ்சாலி சபதத்தின் ஓரிடத்திலே அந்தி மாலையில் அஸ்தமித்துக் கொண்டிருக்கும் சூரியனின் அழகை மிக மிகச் சுவையாக வருணிக்கின்ருர். அந்த வருணனைக்கு உரை நடையில் விளக்கம் தரும் இடத்தில், தற்காலத்து வைதிகர்களையும் போலிக் கவிஞர்களையும் சாடுகின்ருர்.

''ஸஹோதரா, ஸூர்யாஸ்தமனத்தின் விநோதங் களைச் சென்று பார். ஸூர்யனைப் பார்த்தால் கண் ணுக்குக் கெடுதி என்னும் குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூர்யனைப் பார்ப்பது பாவ

மென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண் கொண்டு பார்க்காதே.

"நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்த மெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங் கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர்.

"இக்காலத்திலேதான் இந்தத் துரதிருஷ்ட நிலை கொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்களெல்லோரும் கவிகளென்று சொல்லி வெளி வருகிறார்கள்."

மற்றொரிடத்தில், சகுனி தன்னைச் சூதாட்டத்திற்கு அழைத்தபோது, அதற்கு மறுப்புக் கூறாமல், இசைவு தெரிவித்து அவனோடு சூதாடிய தருமனின் செயலைச் சாடுகின்றார்.

சகுனி தன்னைச் சூதாட்டத்திற்கழைத்தபோது தருமன் முதலில் மறுக்க, அவனைப் பார்த்துச் சகுனி சொல்கிறான்:

"சாத்திரம் பேசுகின்றாய்'—எனத்
தழல்படு விழியொடு சகுனி சொல்வான்;
'கோத்திரக் குலமன் னர்—பிறர்
குறைபடத் தம்புகழ் கூறுவ ரோ?
நாத்திறன் மிக உடை யாய்!—எனில்
நம்மவர் காத்திடும் பழவழக் கை
மாத்திரம் மறந்துவிட் டாய்;—மன்னர்
வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண் டோ?"

## மூடப் பழக்கம்!

இந்தப் பாட்டில், "நம்மவர் காத்திடும் பழவழக்கை மாத்திரம் மறந்துவிட்டாய்" என்ற வரிக்குக் கீழ் வருமாறு பாரதியார் விமர்சனம் எழுதியுள்ளார்:

> "ஒரு அரசனை மற்றொருவன் 'என்னுடன் சூதாட வா' என வலிந்தழைக்கும்போது மாட்டேனென்று சொல்லலாகா தென்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்க வேண்டுமென்ற நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களுள் இது ஒன்று. அறிவுடையவர்கள் கூடப் 'பூர்வாசார' மென்ற காரணத்தால் தீய வழக்கங்களை அனுசரித்த தால் பாரத தேசத்திற்கு ஏற்பட்ட சாபம் இப்போது தான் நீங்கி வருகிறது."

பாரதியார், சுத்த வேதாந்தி. அதனாலோ என்னவோ, தாம் படைத்த பாஞ்சாலி சபதத்தின் துவக்கத்தில், சைவரான அவர் பிரம்மத்தை வழிபடுபவராகி, பிரம்ம ஸ்துதி பாடியுள்ளார். அந்தப் பாடல் வருமாறு:

> ஓ மெனப் பெரியோர் கள்—என்றும்
> ஓதுவ தாய், வினை மோதுவ தாய்,
> தீமைகள் மாய்ப்பது வாய்,—துயர்
> தேய்ப்பது வாய், நலம் வாய்ப்பது வாய்,
> நாமமும் உருவும் அற்றே—மனம்
> நாடரி தாய்ப்புந்தி தேடரி தாய்,
> ஆ மெனும் பொருளனைத் தாய்,—வெறும்
> அறிவுடன் ஆனந்த இயல்புடைத் தாய்;
> நின்றிடும் பிரமமென் பார்;—அந்த
> நிர்மலப் பொருளினை நினைத்திடு வேன்.

தமக்கு முன்தோன்றிய காப்பியப் புலவர்களைப்போல, துவக்கத்திலே நகர் சிறப்புப் பாடுவாராகி, அஸ்தினபுரத்

தின் அழகை எல்லாம் அங்கு வாழ்வோரின் பெருமைகளை எல்லாம் வருணிக்கின்றார். பின்னர், நேராகத் துரியோதனன் அவைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார். அந்த அவையிலே தலைவனாக வீற்றிருக்கும் துரியோதனனை முதலில் அறிமுகப்படுத்துகின்றார்.

துரியோ தனப்பெய ரான்;—நெஞ்சத்
துணிவுடையான், முடி பணிவறியான்.
'கரியோ ராயிரத் தின்—வலி
காட்டிடு வான்' என்றக் கவிஞர் பிரான்
பெரியோன் வேத முனி—அன்று
பேசிடும்படி திகழ் தோள்வலி யோன்,
உரியோர் தாம்எனினும் —பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனை யான்.
தந்தை சொல் நெறிப்படியே—இந்தத்
தடந்தோள் மன்னவன் அரசிருந் தான்.

## கருணனிடம் அனுதாபம்!

பின்னர், 'ஆரிய வீட்டுமன் அங்கிருந்தான்' என்று கூறி, ''மெய்ந்நெறி யுணர் விதுரன்'' இருக்க, ''வேறு பல் அமைச்சரும் விளங்கி நின்றார்'' என்று கூறியவர்,

''பொய்ந்நெறித் தம்பிய ரும்—அந்தப்
புலைநடைச் சகுனியும் புறமிருந் தார்''

என்று பாடுமிடத்தில், 'புலை நடையோன்' என்றொரு பட்டத்தைச் சகுனிக்கு வழங்குகின்றார். இனி, கருணனையும் அறிமுகப் படுத்துகின்றார், சிறிது அனுதாபத்தோடு! பெற்றோரை அறியாத பெருமகனாதலால், போக்கிட மறியாமல் துரியோதனனுதியர் அவையில் புகுந்திருக்கிறானும்.

'மைந்நெறி வான்கொடை யான்—உயர்
மானமும் வீரமும் மதியுமு ளோன்,

**உய்ங்நெறி அறியா தான்—இறைக்கு**
**உயிர்நிகர் கன்னனும் உடன் இருந்தான்**

என்பது கருணன் பற்றி பாரதியின் வருணனை. அவன் தன் அரசஞன துரியோதனனுக்கு உயிர்போன்றவனும்!

## இனவுணர்வு!

அடுத்து, தருமன் நடத்திய ராஜசூய யாகத்தின் போது மன்னுதி மன்னர்கள் எல்லாம் அம்மாமன்னனுக்குச் செய்த சிறப்புக்களைத் துரியோதனன் பொருமையுடன் வருணிப்பதாகப் பாடுகின்றுர் பாரதி. அந்த இடத்தில், தமிழினத்தின் அரசியல் வரலாற்றிலே காணப்படும் ஒரு தனிச்சிறப்பையும், "தமிழன்" என்ற இன உணர்ச்சியோடு எடுத்துக் காட்டுகின்றுர்.

மாபாரதப் போர் நடந்த காலத்தில் தமிழகத்தைத் தமிழரே ஆண்டனர். வடவர் ஆதிக்கம் தமிழினத்தின் மீதில்லை. வேற்றரசரின் கொம்புக்கும் செம்புக்கும் அஞ்சி வாழும் அவலம் தமிழரசருக்கில்லை. அதனுல்,தருமனுடைய ராஜசூயத்திற்கு நட்பு முறையில் சென்றிருந்த பாண்டி வேந்தன், தரணி வேந்தன் என்ற முறையில் தருமனின் தலைமையை ஏற்கும் வகையில் அவனுக்குப் பரிசளிக்காமல், தான் வேறு எந்த மன்னனுக்கும் கட்டுப்பட்டவன் அல்லன் என்பதை உணர்த்தும் வகையில், தருமன் தம்பியான பார்த்தனுக்கு மார்பணி ஒன்றைப் பரிசளித்தானும். இதனை,

**'உற்றதோர் தம்பிக்குத் தென்னவன்**
**மார்பணி தந்ததும்'**

என்ற வரிகளில் தெளிவுபடுத்துகின்றுர் பாரதியார். பாண்டவர்களில் ஒருவஞன,பார்த்தன் பாண்டிவேந்தனின் மாப்பிள்ளை யாவான் என்ெருரு கதையுமுண்டு.

அதனை நினைவில் கொண்டு, மற்றவர்கள், மன்னன் தருமனுக்குப் பரிசளிக்க, தென்பாண்டி நாட்டில் தனிச் செங்கோலோச்சிய பாண்டி மன்னன் மட்டும் தன் மாப்பிள்ளைக்கு மார்பணி தந்தான் என்ற பொருளில் பாடினார் என்றும் கொள்ளலாம். இது எப்படியாயினும் சரி; வடவேந்தரின் ஆதிக்கத்திற்கு அடங்காதவன் தென் பாண்டி வேந்தன் என்ற வரலாற்றுச் செய்தியினை மறந்து விடாமல் உரிய இடத்தில் வலியுறுத்திய அமரகவி பாரதிக்கு அஞ்சலி செலுத்துவோம்.

இதற்கப்புறம் தருமன் நடத்திய ராஜசூய யாகத்திற்கு தான் சென்றிருந்தபோது, கோமாளியைப்போல், தான் அங்குமிங்குமாக ஆடியோடி அலைந்து ஓரிடத்தில் தடுக்கி விழுந்தபோது, தன்னைக் கண்டு பாஞ்சாலி சிரித்ததையே தன் வன்மத்திற்குக் காரணமாக்கி, அவளைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள விரதமெடுத்திருப்பதாகக் கூறுகின்றான் துரியோதனன். இதுதான் பாஞ்சாலி சபதத்தில் கதையின் கருப்பொருளாக அமைகின்றது.

## தேசபக்தியுடைய வருணனை

பாரதியார், ஆங்காங்கே தமக்கே உரிய பாணியில் நிகழ்ச்சிகளைச் சுவைபடுத்திக் கூறுகின்றார். விதுரனின் கூற்றாக, பாரதத்தின் சிறப்பையெல்லாம் ஓரிடத்தில் வருணிக்கின்றார் பாரதியார். அது வருமாறு:

"நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு;
நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பும் நாடு,
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழும்
குளிர்காவுஞ் சோலைகளும் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்

பாலடையும் நறுநெய்யும் தேனு முண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலும் நாடு''

பாஞ்சாலி சபதத்தில் வரும் விதுரன் மகா உத்தமன். துரியோதனுதியரின் கொடுஞ் செயல்களே வாய்ப்பு நேரும் போதெல்லாம் கண்டிப்பவன். பாரம்பர்யத்தால் துரியோதனன் அவையில் இருப்பினும் தன் உயர்ந்த பண்பாட்டால் பாண்டவருக்குப் பிரிந்து பேசுபவன். சகுனியுடன் தருமன் சூதாடத் தொடங்கியதனே விதுரன் வெறுத்துப் பேசியபோது, அது பொருத துரியோதனன் அவனே, ஏசுகின்ருன்.

'நன்றி கெட்ட விதுரா!—சிறிதும்
நாண மற்ற விதுரா!
தின்ற உப்பி னுக்கே—நாசந்
தேடுகின்ற விதுரா!
அன்று தொட்டு நீயும்—எங்கள்
அழிவை நாடுகின்ருய்;
மன்றில் உன்னே வைத்தான்—எந்தை
மதியை என்னுரைப்பேன்
ஐவ ருக்கு நெஞ்சும்—எங்கள்
அரண்மனைக்கு வயிறும்,
தெய்வம்அன் றுனக்கே—விதுரா!
செய்து விட்ட தேயோ?
மெய்வகுப் பவன்போல், பொதுவாம்,
விதிஉணர்ந் தவன்போல்
ஐவர் பக்கம் நின்றே,—எங்கள்
அழிவு தேடுகின் ருய்
வன்பு ரைத்தல் வேண்டா,—எங்கள்
வலிபொறுத்தல் வேண்டா,
இன்பம் எங்க ணுண்டோ—அங்கே
ஏகி'டென் றுரைத்தான்.

பாரதியார், தான் ஆவேசக்கவி, அரசியல் புரட்சிக் கவி என்பதனை வாய்ப்பு நேர்ந்த இடங்களிலெல்லாம் நினைந்தோ, நினையாமலோ வெளிப்படுத்தி விடுகின்றார். தருமன் சூதாடத் துணிந்ததனை வெறுத்துரைப்பார்:

வெய்ய தான விதியை நினைந்தான்
விலக்கொ ணாதறம் என்ப துணர்ந்தோன்;
பொய்ய தாகுஞ் சிறுவழக் கொன்றைப்
புலனி லாதவர் தம்முடம் பாட்டை
ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான்
ஐயகோ! அந்த நாள்முத லாகத்
துய்ய சிந்தைய ரெத்தனை மக்கள்
துன்பம் இவ்வகை எய்தினர், அம்மா!

இந்தப் பாடலின் இறுதியிலுள்ள மூன்று வரிகள், தாம் வாழ்ந்த காலத்தில் அடிமைப் பாரதம் அடைந்த கொடுமைகளையே அவர் நினைவூட்டும் வகையில் அமைந் துள்ளன.

## சூது தொடங்கும் போது...

இன்னும், தருமன் நாட்டை வைத்துச் சூதாடத் தொடங்கியபோது,

"ஐய கோஇதை யாதெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றோ?
மெய்ய தாகவோர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாளுங் கருத்தோ?
வைய மிஃது பொறுத்திடு மோ? மேல்
வான் பொறுத் திடுமோ? பழி மக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோ நாம்?"

என்று விதுரன் மனம் வெதும்பிக் கூறியதாக, தன் வேதனையை அவன் மேலேற்றிக் கூறுகின்றார் பாரதி.

சூதில் நாட்டைத் தோற்றுவிட்டான் தருமன். விடுதலைப் பாசறையில் நின்று பரங்கி ஏகாதிபத்தியத்தின் அழிவை விரும்பிப் பரணி பாடிய பாரதி, அந்த அநீதியைப் பொறுப்பாரா ?

கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை,
வைத்திழத்தல் போலும்;
ஆயிரங்க ளான— நீதி,
யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்;—சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்:
நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்,
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்,
காட்டு முண்மை நூல்கள்—பல,
தாங் காட்டினர்க ளேனும்
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்யவில்லை.
ஓரஞ் செய்திடா மே—தருமத்
துறுதி கொன்றிடா மே,
சோரஞ் செய்திடா மே—பிறரைத்
துயரில் வீழ்த் திடாமே
ஊரை யாளு முறைமை—உலகில்
ஓர் புறத்து மில்லை.

என்னும் வரிகளிலே, பாரத நாட்டின் பண்டைவேந்தர்களை, தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டு மொகலாயருக்கும் ஆங்கிலேயருக்கும் நாட்டை அடிமைப் படுத்திய முடி மன்னர்களைச் சாடி, நீண்ட நெடுங்காலமாக தம் நெஞ்சத்தில் வளர்ந்திருந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்கிறார்.

மனைவியைப் பணய மென்றான்...

தானும் தம்பியரும் அணிந்திருந்த அணிகளை யெல்லாம் முதலில் தோற்று, பின்னர், வேறுள்ள உடைமைகளை எல்லாமும் பந்தயம் வைத்து இழந்து, அடுத்து நாட்டையே சூதாட்டப் பகடைக்குப் பலியாக்கி, மேலும் உடன் பிறந்த தம்பியரையும் பணயம் வைத்திழந்த தருமன், பின்னர், தன்னையும் பந்தயம் வைத்துத்தோற்றான். இதனை,

—"இவன்
தன்னை மறந்தவ னாதலால்—தன்னைத்
தான்பண யமென வைத்தனன்,—பின்பு
முன்னைக் கதையன்றி வேறுண்டோ?'—அந்த
மோசச் சகுனி கெலித்தனன்.

இனி, தருமன் கையில் எஞ்சியிருக்கும் பொருள் பாஞ்சாலிதான். அவளையும் பந்தயம் வைத்து ஆடத் துணிந்துவிட்டான், தோல்விக்கு மேல் தோல்வியுற்றதால் அறிவை இழந்து விட்ட தருமன்! பாண்டவர் தேவியை, மாமன்னன் பாஞ்சாலனின் மகளைச் சூதாட்டத்தில் பந்தயமாக வைக்கும் கொடுமையைச் சகிக்க முடியாமல் குமுறிப் பாடுகின்றார் பாரதி.

வேள்விப் பொருளினையே—புலை நாயின் முன்
மென்றிட வைப்பவர் போல்,
நீள்விட்டப் பொன்மாளி கை—கட்டிப் பேயினை
நேர்ந்துகுடி யேற்றல் போல்,
ஆள்விற்றுப் பொன்வாங்கி யே—செய்த பூணை யோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்,
கேள்விக் கொருவரில்லை— உயிர்த் தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கி னான்.

என்று உணர்ச்சி பொங்கப் பாடுகின்றார். தருமன் பாஞ்சாலியைத் தோற்றானே இல்லையோ, துரியோதனன்

அவையில் "வெற்றி விழா" ஆரம்பித்து விட்டது! அந்த விழாவின் ஆரவாரத்தை பாரதியே வருணித்துள்ளபடி பார்ப்போம்:

திக்குக் குலுங்கிடவே—எழுந்தாடு மாம்
தீயவர் கூட்டமெல் லாம்
தக்குத்தக் கென்றே அவர்—குதித்தாடுவார்
தம்மிரு தோள் கொட்டுவார்
ஒக்குந் தருமனுக்கே—இஃதென்பர், 'ஓ!
ஓ!' வென் றிரைந்திடு வார்;
கக்கக்கென் றேநகைப் பார்—'துரியோ தன
கட்டிக்கொள் எம்மை' என்பார்
மாமனைத் 'தூக்கா'யென் பார்—அந்த மாமன் மேல்
மாலை பலவீசு வார்;
சேமத் திரவியங்கள்— பல நாடுகள்
சேர்ந்ததி லொன்று மில்லை
காமத் திரவிய மாம்—இந்தப் பெண்ணையும்
கைவச மாகச்செய் தான்;
'மாமனோர் தெய்வ' மென்பார்'—'துரியோதனன்
வாழ்க' வென் றார்த்திடுவார்.

இப்படி எல்லாம் "துரியோதனன் வாழ்க! மாமன் சகுனி வாழ்க" என்று புல்லர்களை வாழ்த்தி, அவ்விருவரையும் தத்தம் தோள்களிலே தூக்கிச் சுமந்து வெற்றி விழாக்கொண்டாடுகின்றதாம் சமயமுளபடிக் கெல்லாம் பொய் கூறி அறங் கொன்று வாழும் சுமடர் கூட்டம்.

இந்த ஆர்ப்பாட்டத்திலே மாமனை மறந்துவிடவில்லை மருமகனான துரியோதனன். மாமன் சகுனியைப் பார்த்து,

'என்துயர் தீர்த்தா யடா!—உயிர் மாமனே
ஏளனந் தீர்த்து விட்டாய்!
அன்று நகைத்தா ளடா! உயிர் மாமனே!
அவளை என் ஆளாக்கி னாய்

என்றும் மறவே னடா!— உயிர் மாமனே!
　　என்ன கைம்மாறு செய்வேன்?
ஆசை தணித்தாயடா!— உயிர் மாமனே!
　　ஆவியைக் காத்தா யடா!
பூசை புரிவோ மடா—உயிர் மாமனே!
　　பொங்க லுனக்கிடு வோம்!'

என்று மகிழ்ச்சி வெறியிலே மாமனை அர்ச்சிக்கிறான் கொடுங்கோலன் துரியோதனன்.

## பாஞ்சாலியின் சபதம்

வெற்றி வெறியிலே தான் சூதில் அடிமை கொண்ட பாஞ்சாலியை அவைக்கு அழைத்து வருமாறு தேர்ப்பாகனை ஏவுகிறான். அவனும் காந்தாரியின் அந்தப்புரத்தில் இருக்கும் பாஞ்சாலியை அணுகி, சோகம்ததும்ப, துடித்த குரலுடனே,

'அம்மனே போற்றி!
　　அறங் காப்பாய் தாள் போற்றி!'

என்று, பாஞ்சாலிக்குப் போற்றி பலகூறி, தான் கொண்டு வந்த செய்தியைக் கூறிவிடுகின்றான். ஆம்;

"எல்லோரும் கூடியிருக்கும் சபைதனிலே,
நின்னை அழைத்துவர நேமித்தான் எம்மரசன்"

என்று துரியோதனின் தேர்ப்பாகன் கூறினான். அது கேட்டுத் திடுக்கிட்டாள் பாஞ்சாலி-

............"யார் சொன்ன வார்த்தை யடா!
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா"

என்று கேட்டாள் பாஞ்சாலி. மேலும்,

''நல்லது; நீ சென்று நடந்ததை கேட்டு வா.
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர் தாம்
என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று சபையில் இச் செய்தி தெரிந்து வா''

என்று ஆணையிட்டாள் வீரப் பாஞ்சாலி. தேர்ப்பாகன் திரும்பவும் துரியோதனன் அவைக்கு ஓடி, பாஞ்சாலி விடுத்த கேள்வியினை அறிவித்து விடை தருமாறு அவனை வேண்டினன். 'அடிமை கொண்ட மன்னனுக்கு அடிமைப் பட்ட பெண் வினவிடுப்பதா?' என்று சீறி, ''கேள்விகளை இங்குவந்து கேட்கச் சொல்'' என்று தேர்ப்பாகனை மீண்டும் பாஞ்சாலியின்பால் விரட்டினன் துரியோதனன்.

தான் கேட்ட வினவுக்கு விடை பெறாமல், திரும்பவும் தன்னிடம் வந்த தேர்ப்பாகனிடம் பழைய கேள்வியையே, அதற்கான காரணங்களுடன் சேர்த்துக் கொடுத்தாள் பாஞ்சாலி.

நாயகர் தாந்தம்மைத் தோற்றபின்—என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை—புலைத்
தாயத்தி லேவிலைப் பட்ட பின்—என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்—அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்—புவி
தாங்குந் துருபதன் கன்னிநான்—நிலை
சாயப் புலைத்தொண்டு சார்ந்திட் டால்—பின்பு
தார முடைமை அவர்க்குண் டோ?

என்று காரணங்களைக் காட்டி, ''வர முடியாது'' என்ற பதிலையே திரும்பவும் கூறினள் பாஞ்சாலி. தேர்ப்பாகன் வெறுங்கையுடன் மீண்டதைக் கண்ட துரியோதனன்,

தம்பி துச்சாதனனைக் கூப்பிட்டு, "நீ போய் அந்த அடிமையை அழைத்து வா!" என்று ஆணையிட்டான்.

## துச்சாதனக் கொடியோன்!

பாரதியின் பாஞ்சாலி சபதத்திலே முதன் முதலாக இந்தக் கட்டத்தில்தான் வில்லனான துச்சாதனனை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார் மகாகவி பாரதி.

இவ்வுரை கேட்டதுச் சாதனன்—அண்ணன்
இச்சையை மெச்சி எழுந்தனன்—இவன்
செவ்வி சிறிது புகலு வோம்;—இவன்
தீமையில் அண்ணனை வென்றவன்;—கல்வி
எவ்வள வேனுமி லாதவன்—கள்ளும்
ஈரக் கறியும் விரும்பு வோன்;—பிற
தெவ்வர் இவன் றனை அஞ்சுவார்;—தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றெதுங்கு வார்!
புத்தி விவேக மில்லாதவன்—புலி
போல உடல்வலி கொண்டவன்—கரை
தத்தி வழியுஞ் செருக்கி னல்—கள்ளின்
சார்பின் றியேவெறி சான்றவன்.

ஆம்; எல்லோருக்கும் குடித்தால்தான் வெறி வெளிப்படும். துச்சாதனனோ குடிக்காமலே எந்த நேரத்திலும் வெறியோடு இருப்பானும்.

இவ்வளவு (அவ) லட்சணங்களையும் கூறி துச்சாதனனை நமக்கு அறிமுகப் படுத்தக் காரணம், அவன் பாஞ்சாலியை அணுகுங்கால் அவள்பால் நாம் அனுதாபப் பட வேண்டும் என்பதுதான்.

துச்சாதனன், தன் அன்னை காந்தாரியின் அந்தப் புறத்திற்குச் சென்று, அங்கிருந்த பாஞ்சாலியை அணுகி, தன் பசிக்குத் தீனி தேடி வெறிபிடித்து வந்த புலியைப் போல, அவள் எதிரே நின்றான். பாஞ்சாலி அவனைக்

கண்ட அளவிலேயே பயந்து நடுங்கி, அஞ்சி ஒதுங்கினாள். துச்சாதனன், "அடி! செல்வதெங்கே?" என்று இரைச்சலிட்டு, மேலும் அவளை நெருங்கினான்.

## 'ஆடி விலைப்பட்ட தாதி நீ!'

தன் மைத்துனன் துச்சாதனன் மனித சுபாவமுடையவன் என்று தான் எண்ணியதற்கு மாறாக, மாதவிடாய் காரணமாக தீண்டத்தகாத நிலையில் இருக்கும் தன்னை தீண்டவும் நெருங்கிவிட்ட அவனை, "ஆண்தகையற்ற புலையன்" என்று முடிவு செய்து கொண்டு, அச்சத்தை விட்டு துச்சாதனனை எதிர்த்து நின்றாள். நின்றவள், "தம்பி! நீ கொண்டு தந்த செய்தியைக் கூறிவிட்டு அப்பால் செல்" என்று ஆணையிட்டாள். துச்சாதனன் தான் கொண்டுவந்த செய்தியைக் கூறுகின்ற "பாணி"யைப் பாருங்கள்.

**ஆடி விலைப்பட்ட தாதி நீ;—உன்னை**
**ஆள்பவன் அண்ணன் சுயோதனன்—" மன்னர்**
**கூடி யிருக்கும் சபையிலே—உன்னைக்**
**கூட்டி வரு" கென்று மன்னவன்—சொல்ல**
**ஓடி வந்தேனிது செய்திகாண்;—இனி**
**ஒன்றுஞ் சொலாதென்னோடேகுவாய்—அந்தப்**
**பேடி மகனொரு பாகன் பால்—சொன்ன**
**பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே.**

ஆம், மண்ணாள்வோருக்கு மண்டைக் கர்வம் வந்துவிட்டால், நாக்கு நாகரிகமற்றுப் பேசும் என்பதனை எடுத்துக் காட்ட, அதிகார வெறி பிடித்த அரசியல் கூட்டம் ஆணவத்தின் சிகரத்தில் ஏறிவிட்டால் எப்படி நடந்து கொள்ளும் என்பதனை நினைப்பூட்ட துச்சாதனனை ஒரு உவமையாகக் கொள்கின்றார் பாரதி.

அவன், அறிவிலும் கற்பிலும் சிறந்தவளான தன் அண்ணன் மனைவியை, "ஆடி விலைப்பட்ட தாதி நீ"

என்று இழிவாகப் பேசுகின்றான். இதைவிடவும் கேவலமாக, "உன்மீது இனி ஐவருக்கு அதிகாரம் இல்லை. என் அண்ணன் துரியோதனனுக்கே ஆதிக்கம்" என்று ஆணவத்தோடு பேசுகின்றான்.

பாஞ்சாலி துச்சாதனனின் மிருகத்தனத்தி லிருந்து தான் இனி தப்பமுடியாதென்பதனை உணர்ந்து விட்டாள்.

**அச்சா, கேள் மாதவிலக் காதலா லோ ராடை**
**தன்னி லிருக்கின்றேன், தார்வேந்தர் பொற் சபைமுன்**
**என்னை யழைத்தல் இயல்பில்லை அன்றியே**
**சோதரர்தந் தேவிதனைச் சூதில் வசமாக்கி,**
**ஆதரவு நீக்கி, அருமை குலைத்திடுதல்.**
**மன்னர் குலத்து மரபோ காண்?**

என்று கண்களிலே நீரை ஆறாகப் பெருக்கிய நிலையிலே துச்சாதனனைக் கேட்டாள். இதயமற்ற அந்தப்பாவி தன் கொடுங்கரங்களை நீட்டி, "வீட்டுக்கு விலக்காக இருக்கிறேன்" என்று அவள் கூறியதாலோ என்னவோ, அவள் திருமேனியைத் தொட்டிழுக்காமல், அடர்ந்து நீண்ட அவளது கூந்தலைப் பிடித்துக் கரகர வென இழுத்து அரண்மனைக்கு வெளியிலே கொண்டுவந்து விட்டான்.

காந்தாரியின் அந்தப்புறத்தில் அவனுடைய காப்பிலிருந்த பாஞ்சாலியை துஷ்டன் துச்சாதனன் கூந்தலைப் பிடித்து இழுத்து அரண்மனைக்கு வெளியே கொண்டு சென்றபோது காந்தாரியின் நிலை என்ன? வியாச பாரதத்தில் இந்தக் கட்டத்தில் துரியோதனன் தாயான காந்தாரியைப் பற்றி கவிஞர் ஒரு குறிப்புக் கூடத் தர வில்லை. பாரதியார் வியாசரைப் பின்பற்றியவராதலால் அவரும் இந்தக் கட்டத்தில் காந்தாரியைக் காட்சிப் படுத்தவில்லை. வில்லிபுத்தூராரும் காந்தாரியை நேராக

அரங்கிற்குக் கொண்டு வரவில்லை என்றாலும் அவளுடைய நிலையை கவிக்கூற்றாகச் சில வார்த்தைகளில் நமக்கு நினைப்பூட்டுகின்றார்.

துச்சாதனன், பாஞ்சாலியைத் தொட்டு இழுக்க முயன்றபோது, அவள் தன் மாமியான காந்தாரியை அணுகி, "மாமி, உங்கள் மகன் செய்யும் அநீதியைப் பார்த்தீர்களா! அவனிடமிருந்து என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?" என்று அரற்றினாள். அதற்கு இரக்கமற்ற கொடியவளான காந்தாரி, "மைத்துனன் தானே கூப்பிடுகின்றான். அவன் பின்னே போயேன். அரசவைக்குப்போய் அங்கே கூறவேண்டியதைக் கூறு!" என்று சொன்னாளாம். பேரரசியான காந்தாரியின் நிலையைச் சொல்லுமிடத்து "ஏககாலத்தில் நூறு பாதகர்களைப் பெற்றெடுத்த மாபாவி" என்று அவளை வருணிக்கின்றார் வில்லிபுத்தூரார். இந்தக் கருத்தமைந்த பாடல் வருமாறு:

**பூவார் குழலி தளர்வொடு தன்**
**புறம்சேர் பொழுதும் சிறிது இரங்காள்,**
**"நீ வா" என்றே அருகு இருத்தி,**
**நெடுங்கண் பொழியும் நீர் துடையாள்**
**"மேவார் அல்லர்; தமர் அழைத்தால்,**
**மேல்உன் கருத்து விளம்பி வர,**
**பாவாய்! அஞ்சாது ஏகு!' என்றாள்**
**பல பாதகரைப் பயந்தாளே.**

ஆம்; பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்து இழுக்க துச்சாதனன் விரைந்து சென்றபோது, "நில்லடா பயலே' என்று அவனைத் தடுத்து நிறுத்தி, பாஞ்சாலியைத் தன் அருகில் அழைத்து, அவளுடைய கண்ணீரைத் துடைத்திருக்க வேண்டும் காந்தாரி—என்பது வில்லிபுத்தூராரின் கருத்து. ஆனால், அவள் நூறு பாதகரைப் பயந்தவளா

தலால், அவளிடம் அந்தப் பண்பை எதிர்பார்க்க முடியாது என்றும் அவரே கூறிவிடுகின்றார்!

## வீதியிலே வீரப் பாஞ்சாலி!

இனி, துச்சாதனன் பாஞ்சாலியை இழுத்துச் செல்லும் கோரக் காட்சியையும் இரண்டு பாடல்களால் வருணிக்கிறார் வில்லிபுத்தூரார்.

**தண்தார் விடலை தாய் உரைப்ப,**
**தாய் முன் அணுகி, தாமரைக் கைச்**
**செண்டால் அவள் பைங் குழல்பற்றி,**
**தீண்டான் ஆகிச் செல்கின்றான்;**
**வண்டார் குழலும் உடன் குலைய,**
**மானம் குலைய, மனம் குலைய,**
**"கொண்டார் இருப்பர்" என்று நெறிக்**
**கொண்டாள், அந்தோ! கொடியாளே!**
**"சூழும் கனல்வாய் உரும் அன்றி,**
**துளிவாய் முகிலும் மகிதலத்து**
**வீழும் கொல்லோ? உற்பாதம் விரவிற்று'**
**என்றே வெரூஉக் கொள்ள,**
**தாழும் பெரிய கரிய குழல்**
**தாரோடு அலைய, தழீஇக் கொண்டு**
**வாழும் சுரும்பு சுழன்று அரற்ற,**
**மண்மேல் இழுத்து வருகின்றான்.**

துரியோதனாதியர்கள், பாண்டவர்களுடன் சேர்ந்து பாஞ்சாலியையும் விருந்துக்கு அழைத்தனர். இப்போதோ, விருந்தாளியின் கூந்தலைப் பிடித்து வீதிவழியே இழுத்துச் செல்கின்றான் துச்சாதனன். இழுப்பவன், உறவால் மைத்துனன்; அதிகாரத்தால், அஸ்தினாபுரத்தின் இளவரசன். இழுக்கப் படுபவளோ, இழுப்பவனுடைய தமையன்மாரின் தேவி; தாய்க்குச் சமமானவள்! இத்தனைக்

கும் மேலாக, பரதேசியல்லள்; பாஞ்சாலத்தரசன் பெற்ற பைங்கொடி! திக்கெட்டும் புகழ் பெற்ற மாவீரன் திட்டத் தூய்மனின் தங்கை, கண்ண பெருமானுடைய பக்தையும் கூட. பாஞ்சாலியின் ஆடை குலைய, பாண்டவர்களின் மானம் குலைய, பார்க்கின்ற மக்கள் எல்லாம் மனம் குலைய இழுத்துச் செல்கின்றான். இந்த நிலையிலும், நம்பிக்கை இழந்துவிடவில்லை பாஞ்சாலி. கொடியோனான துரியோதனன் சபைக்குத்தான் தன்னைக் கொண்டு செல்கின்றார்கள் என்றாலும், அங்கு "கொண்டார் இருப்பர்"— அதாவது, தன் கணவன்மார் ஐவருமிருப்பர்; துச்சாதனனிடமிருந்து தன்னைக் காப்பர் என்ற ஒரு நம்பிக்கை அவள் உள்ளத்திலே ஒளிவிடுகிறதாம்.

**'ஊரவர் தம் கீழ்மை!'**

துச்சாதனன் பாஞ்சாலியை மண்மேல் இழுத்துச் செல்லுங்கால் ஊரிலுள்ள மக்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்ற வினாவை எழுப்பாமல் எழுப்பி, அதற்கு விடையும் தருகின்றார் பாரதி.

—பாஞ்சாலி கூந்தலினைக்
கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்
"ஐயகோ" வென்றே அலறி உணர்வற்றுப்
பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான், வழிநெடுக மொய்த்தவராய்,
"என்ன கொடுமையிது" வென்று பார்த்திருந்தார்.

இதற்கு மேலும் செய்திகள் உண்டு ஊரவர்தம் நிலைமை பற்றி உரைக்க. ஆனால், பாஞ்சாலியின் உதவிக்கு வராத ஊர் மக்களுடைய நிலைகண்டு வெட்கமும் வேதனையும் அடைகிறாராதலால், அவர் நிலையை தம் கவித்திறம் கொண்டு வருணிக்க கவியால் முடியவில்லை. வெஞ்சினத்

தால் விம்முகின்ருர். அதனுல், "ஊரவர்தம் கீழ்மை உரைகுந் தரமா மோ?" என்ற ஒரு வாசகத்திற்கு மேலே சொல்ல அவரால் முடியவில்லே. அதனுல், வில்லிபுத் தூராரின் துணேகொண்டு அஸ்திஞபுர மக்களின் நிலேயை அறிய முயல்வோம்.

துச்சாதனன் பாஞ்சாலியை வீதிவழியே இழுத்துச் செல்லுங்கால், அவள், "ஐயகோ" வென அலறிஞள் என்று பாரதியார் கூறிஞர் அல்லவா? அந்த அலறலேக் கேட்டு வீட்டுக்குள்ளிருந்த மக்கள் எல்லாம் வீதிக்கு வந்து விட்டார்களாம்! வந்தவர்கள், ஆணவம் பிடித்த துச்சாதனன் மீது பாய்ந்து, அவனே அடித்து விரட்டி, பாஞ்சாலியை அவனிடமிருந்து மீட்க முயற்சிக்கவில்லே. ஆனுல், வாய்மூடிச் சும்மா இருக்கவுமில்லே. ஆளுக்கொரு கருத்தை வெளியிட்டு அங்கலாய்த்துக் கொள்கிருர்களாம். பாஞ்சாலியின் கூந்தல் குலேந்து மண்ணில் புரள்வது கண்டு, "கூந்தலா குலேந்தது? இல்லே. அரவக் கொடி யோனுன துரியோதனனின் குலமன்ருே குலேந்தது" என்று கூறிஞர்களாம். "காந்தாரி தன் மகனே பாஞ்சாலியிடம் செல்லாதபடித் தடுக்காமல், அவன் பின்னே ஏகும்படி கூறிஞளே, அவள் மிகக்கொடியவள்" என்று கூறிக் குமுறிஞர்களாம். "அவளும் அவள் வழிவழி வம்சமும் அழிந்து ஒழிவார்கள்" என்று சபித்து அழுதார்களாம். "மானம் குலேய, மனம் குலேய பாஞ்சாலியை துரியோதனன் அவையில் நிறுத்துங்கால் அந்தக் கொடுமை கண்டு வீமன் பொறுப்பானு? அவன் பொறுத்தாலும், விசயன் சகிப்பானு? அவ்விருவரும் பொறுத்தாலும் சகித்தாலும் அவையில் கூடியுள்ள வேற்று நாட்டரசர்கள் சும்மா விட்டு விடுவார்களா?" என்றெல்லாம் கூறிஞர்களாம்.

அவர்களிலே கொஞ்சம் துணிவுள்ளவர்கள், "துச்சாதனன் பாஞ்சாலியை அரசவைக்குக் கொண்டு

போகுமுன்னரே நாம் ஓடி துரியோதனனிடம் முறையிடலாமா?" என்று எண்ணிஞர்களாம். ஆனுல், "முன்னே ஓடி முறையிட்டால் முனியும் கொல்லோ எமை?" என்று அஞ்சிஞர்களாம். "அந்தத் தருமனுக்குத்தான் அப்படி என்ன கேடு வந்துவிட்டது, பெண்டாட்டியை வைத்து சூதாடுவதற்கு?" என்று முரசக்கொடியோனே நிந்தித்தார்களாம்.

ஊர் மக்களின் உதவி கோரிக் கதறியழும் பாஞ்சாலியைப் பார்த்து 'அன்னே துன்பம்களேந்து இன்பம் ஆவாய்' என்று வாழ்த்திஞர்களாம்—அதாவது, "அம்மா! உனக்கு நேர்ந்த துன்பம் தொலேயட்டும்; மீண்டும் இன்பம் வரட்டும்" என்ருர்களாம்.

இந்த இடத்தில் ஊர் மக்களேக் குறை கூறவில்லே வில்லிபுத்தூரார். ஆம்; அவர் வாழ்ந்த காலத்தின் நிலே வேறு. பாரதியோ, பாரத தேசம் முழுவதும் பரங்கியருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் வாழ்ந்தார். அவருடைய புறக்கண்கள் அஸ்திஞபுத்து வீதியிலே அழுது செல்பவளே பாஞ்சாலியாகத்தான் காண்கின்றன. ஆனுல், அகக் கண்களோ, பரங்கியரால் துன்புறுத்தப்படும் பாரத தேவியையே காண்கின்றன.

## வீரமிலா நாய்கள்

அன்னியராட்சியை அகற்றும் ஆண்மையின்றி அவர் தம் ஆதிக்கத்திற்கு அடங்கி வாழும் பாரத மக்களின் நிலேயோடு, அஸ்திஞபுரத்து மக்களின் நிலேயை ஒப்பிட்டுக் காண்கின்ருர் பாரதி. அந்நிலேயில், கவிஞனின் நெஞ்சிலே கனல் பொங்குகின்றது. இதயம் நொந்து ஏசுகின்ருர் அஸ்திஞபுரத்து மக்களே.

—வழிநெடுக மொய்த்தவராய்,
"என்ன கொடுமையிது?" வென்று பார்த்திருந்தார்,
**ஊரவதுங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?**

வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்,
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

வாயால் உரைத்தலன்றிச் செயலால் எதையும் செய்யாத நாய்களுடன் ஒப்பிடுகின்றார் அஸ்தினாபுரத்து மக்களை! மிருகமாகிவிட்ட துச்சாதனனை உதைத்துத்தள்ளி அவனிடமிருந்து பாஞ்சாலியை மீட்டு, அப்பொற் கொடியைத் திரும்பவும் அந்தப் புரத்திற்கு அனுப்பி வைக்கத் துணிவில்லாத மக்களை "பெட்டைகள்" என்று பேசுகின்றார். 'அவர்கள் புலம்பி அழுவதால் பாஞ்சாலியின் துன்பம் தீர்ந்துவிடுமா?' என்றும் கேட்கின்றார்.

இனி, அஸ்தினாபுரத்து வீதியை விட்டு துரியோதன னுடைய அரசவைக்குச் செல்வோம் ஏனெனில்,

'பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே.'

நிறுத்திவிட்டான் துச்சாதனன். அங்கே போய் "கோ" வென்று அழுது அலறுகின்றாள், பாரதநாட்டுத் தலைவியான பாஞ்சாலி!

அவள் அழுவதை ஒப்பாரிப் பாணியிலே பாடி வைத்துள்ளார் பாரதியார். அவள் துரியோதனனைப் பார்த்து அழவில்லை. "அவன் கெட்டான் பேடி" என்பது அவள் நினைப்பு. பீஷ்மர், துரோணர், கிருபர் ஆகிய சான்றோரைப் பார்த்தும் முறையிடவில்லை. முதன் முதலில் துரியோதனனிடருக்குத் தன்னை அடிமைப் படுத்திய பாண்டவர்களைப் பார்த்தே விம்மி அழுதாள்,

—"விதியோ கணவரே!
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த் தீமுன் வேண்டி மணஞ் செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?"

என்று மிகவும் பரிதாபத்தோடு கேட்டாள். அந்த நிலையில் பாண்டவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதனை நாம் அறிய விரும்புகிறோமல்லவா? இதோ, அவர்களை நமக்குக் காட்டுகின்றார் பாரதியார்.

'...விஜயனுடன் ஏறுதிறல் வீமனுமே
குன்று மணித்தோள் குறிப்புடனே நோக்கினர்,
தருமனும்மற் றங்கே தலைகுனிந்து நின்றிட்டான்.'

ஆம்; வீமனும் விஜயனும் தங்கள் வீரத்தடந்தோள் களை ஒருமுறை பார்த்துக் கொண்டார்களாம். தருமனோ, தோளைப் பார்க்கவும் துணிவின்றி, வெட்கத்தால் தலை குனிந்து தரையைப் பார்த்தானும். துரியோதனன் அவையிலே "கொண்டார் இருப்பர்" என்றெண்ணி, அங்கு தனக்கு விடுதலை கிடைக்கும் எனக் கற்பனை செய்து கொண்டு வந்த பாஞ்சாலி, இங்கே தன் கணவன்மார் மௌனத்தில் ஆழ்ந்துவிட்ட நிலைகண்டு, "பாண்டவரை மின்செய் கதிர் விழியால் வெந்நோக்கு நோக்கினள்" என்கிறார் பாரதியார்.

## பெண்ணரசி கேட்கின்றாள்!

இந்நிலையில் சபையிலிருந்த சான்றோர்களைப் பார்த்துப் பேசுகின்றாள் பாஞ்சாலி,

—'வான் சபையில்
கேள்விபல வுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப் புரிந்த வேதியர்கள்,
மேலோர் இருக்கின்றார் வெஞ்சினமேன் கொள்கிலரோ?

என்று கேட்டாள்.

சபையிலுள்ள சான்றோர் வாய்மூடி மவுனிகளாயினர். இன்னும் பாஞ்சாலியின் கூந்தலை விடவில்லை பாவி துச்சாதனன். வேதநெறி தெரிந்திருந்த வீட்டுமாச்சாரியார் கூட வாய் திறக்கவில்லை. யாரும் துணை வராத அவலங் கண்டு, தானே துணிந்து துச்சாதனனை ஏசுகின்றாள் பாஞ்சாலி.

'மங்கியதோர் புன்மதியாய்! மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்லுகிறாய்
நின்னை யெவரும் "நிறுத்தடா" என்பதிலர்
என் செய்கேன்?

என்று அலறி அழுதாள்.

பாண்டவர்களும் சான்றோர்களும் மவுனமாயிருந்தாலும் பாஞ்சாலியை அடிமை கொண்ட துரியோதனாதியர் மவுனமாய் இருப்பார்களா?—இல்லை. துச்சாதனன், "நீ எங்கள் தாதியடி தாதி" என்று தீதுரைகள் கூறினான். கர்ணன் சிரித்தான்; சகுனி துச்சாதனனை வாயாரப் புகழ்ந்தான்.

## பீஷ்மரின் சமாதானம்!

இத்தனைக்கும் பின்னரே, பாஞ்சாலியின் கேள்விக்கு விடைதர முன்வந்தார், வீட்டுமாச்சாரியார்.

பாஞ்சாலி எழுப்பிய பிரச்சினை இதுதான்:

நாயகர் தாந்தம்மைத் தோற்றபின்—என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை—புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின்—என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?

இந்த வினாவுக்கு பீஷ்மர் விடையளிக்க முன்வந்ததுமே அரசவையில் ஒரே அமைதி! பாஞ்சாலியும் அழுகையை நிறுத்தி, பீஷ்மரின் பதிலைக் கேட்கத் தயாரானாள்,

முதலில் வியாசர் கண்ட பீஷ்மரின் பேச்சைக் கேட்போம்:

"பாக்கியவதியே! அறம் என்பது நுட்பமானது' மனைவி கணவனுக்கு உட்பட்டவள்; நெறி தவருத தருமன் தான் வெல்லப்பட்டதாக சபையில் ஒப்புக் கொண்டான். சுதந்திரம் இழந்து நின்ற தருமன் உன்னைப் பந்தயமாக வைத்து ஆடியது நியாயமா அல்லவா என்பதில் முடிவு எடுப்பது மிகவும் சிக்கலாக இருக்கிறது. இதனுல் நீ கேட்ட கேள்விக்கு மறு மொழி சொல்ல இயலாதவனுய் இருக்கிறேன்."

பீஷ்மரின் பேச்சிலே பாஞ்சாலி கேட்ட கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. "கேள்வி சிக்கலானது; என்னுல் விடை சொல்ல இயலவில்லை" என்பதே பீஷ்மர் பேச்சின் சாரம். ஆம்; "தன்னைத் தோற்ற தருமனுக்குத் தன் மனைவி மீது உரிமையில்லை" என்றுதான் பீஷ்மர் எண்ணுகின்ருர். ஆனுல், அதனைச் சொல்லத் துணிவில்லை அவருக்கு! அதனுல், எதையோ சொல்லி மழுப்பிவிட்டார். வில்லி பாரதத்திலும்,

"மன்தோற் றனன்வெஞ் சூதாகில்
வழக்காற் கொண்மின் மன் அவையில்
முன்தோற் றனனே, என்னையும்? தான்
முன்னே இசைந்து தனைத்தோற்ற
பின்தோற் றனனே? கரியாகப்
பெரியோர் உண்மை பேசுக"

என்று துரியோதனன் அவையிலுள்ள பீஷ்மர் முதலிய சான்றேரைக் கேட்டாள் பாஞ்சாலி. ஆனுல், பீஷ்மர் அங்கு பதில் சொல்லவில்லை! மற்றுள்ள சான்றேர் அனைவரும் வாய் பேசாப் பதுமைகள் போல அசைவற்றிருந் தனராம். இதனை,

'பொய்யோ அன்று, மெய்யாக
புனை ஓவியம்போல் இருந்தாரை,
ஐயோ! அந்தக் கொடுமையை யாம்
உரைக்கும் பொழுதைக்கு அதிபாவம்!'

என்ற வரிகளில், "நான் பொய் சொல்லவில்லை" என்று முன்னுரை கூறிக்கொண்டு, "எழுதப்பட்ட சித்திரப் பாவைகள் போலச் சான்றோர் இருந்த நிலையை நான் விரிவாக வருணிப்பேன். பெரியோரைக் குறை கூறுதல் பாவம். அதனால் விடுத்தேன்" என்கிறார் வில்லிபுத்தூரார்.

ஆனால், புரட்சிக் கவிஞர் பாரதியார், வியாசரை விட ஒரு படி மேலே போய்விட்டார். ஆம்; பாரதி கண்ட பீஷ்மர், "பாஞ்சாலியின் கேள்வியில் பசையில்லை" என்கிறார். "காலம் மாறிவிட்டதால் தருமமும் மாறிவிட்டது. ஆகவே, தருமன் சூதில் தன்னைத் தோற்றபின்னும் தன் மனைவியின் மீது உரிமை பெற்றிருக்கிறான்" என்று தீர்ப்புக் கூறி விட்டார், அந்த மாமேதை!

"சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்,
சூதிலே வல்லான் சகுனி தொழில்வலியால்,
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய், கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீ சொல்வது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணி வந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர். ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்குந் தந்திடலாம்.
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்

நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்குப் பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண் புதைக்கும்.
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைக்கும் நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பி லாகா வகையுரைத்தேன்.
தீங்கு தடுக்குந் திறமிலேன்''.

*பீஷ்மர், தருமனின் செய்கை சாத்திர சம்மதம்தான் என்று கூறினாலும், தன்னளவில் அதனை மிருகத்தனமான அநீதியெனக் கருதுவதாகக் கூறியுள்ளார்.*

## பீஷ்மருக்குப் பதில்

*''தருமன் தன்னைத் தோற்றபின்னும் தன் மனைவியைச் சூதில் தோற்க உரிமை பெற்றிருக்கிறான்.'' என்பதாக பேரறிஞர் பீஷ்மர் சமாதானம் கூறியதை பாஞ்சாலி ஏற்க வில்லை. சினம் கொண்ட நெஞ்சினளாய் சீற்றத்துடன் பீஷ்மரைத் தூற்றுகின்றாள்.*

''சால நன்கு கூறினீர்! ஐயா! தருமநெறி
பண்டோர் இராவணனும் சீதைதன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின், கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி உரைத்திடுங்கால்
''தக்கது நீர் செய்தீர்; தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும்'' என்றுகூறி உகந்தன ராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்,

*பாஞ்சாலி என்ன செய்வாள்; கொண்ட கணவன்மா ராகிய பாண்டவர்கள் வாய்மூடி மௌனிகளாயினர். சான்றோரான பீஷ்மரோ, துரியோதனாதியருக்குச் சாதக மாகப் பேசிவிட்டார். இந்நிலையில் துரியோதனாதியரிடமே முறையிடலானாள் பாஞ்சாலி,*

''பெண்டிர் தமையுடையீர்! பெண்க ளுடன்பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ பெரியவசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்!''

என்று கூறி, அம்மாபாதகர்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள் பாஞ்சாலி.

இந்நிலை கண்டு மாவீரன் வீமன் மனம் கொதித்தான். பொறுமை இழந்தவனாகி, தருமனைச் சாடத் தொடங்கி விட்டான். சாடி முடித்த பின், தம்பி பார்த்தனைப் பார்த்து,

''இது பொறுப்ப தில்லை தம்பி!
எரி தழல் கொண்டு வா.
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்!''

என்று கூறினான் வீமன். பார்த்தனும் தருமனிடம் சினங் கொண்டவன்தான் என்றாலும், பகைவருடைய அவையிலே பண்புமிக்க தருமனைப் பழித்துரைத்த வீமன் போக்கை அவன் வெறுத்தான்.

''மனமாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்?—எங்கு சொன்னாய்?
யாவர் முன்னே?
கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்ற மென்றாய்
சினமான தீ அறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்.

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்'' எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்;

கருமத்தை மென்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தனுவுண்டு காண்டிபம் அதன்பேர்'

என்று வீமனுக்குப் பொறுமை போதித்தான் வில்வீரனுன பார்த்தன்.

## விகர்னன் வீரவுரை

இதுகாறும் பொறுத்திருந்த விகர்னன் வீறிட்டெழுந்தான். எழுந்தவன், பீஷ்மர் சொன்ன சமாதானத்தை வெறுத்துப் பேசுகின்முன்.

'பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன், பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவர் எண்ணி
ஏதெனிலும் செய்திடலாம் என்ருன் பாட்டன்,
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னுள்
வழங்குவதிந் நெறி என்ருன்; வழுவே சொன்னுன்

எந்தையர் தம் மனைவியரை விற்பதுண்டோ?
இதுகாறும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையை நீர் கேட்டதுண்டோ? விலை மாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்!

விகர்ணன் பீஷ்மரை வெறுத்துப் பேசிய பின்னர், துரியோதனன் சபையிலே, ஒரு மாறுதல் தோன்றியது. அவையில் வீற்றிருந்த சிற்றரசர் சிலர், துணிவு கொண்டு எழுந்தனர்; "ஒவ்வாது சகுனி செய்யும் கொடுமை" எனக் கண்டனக் குரல் எழுப்பினர். இன்னும் சிலர், "ஒருநாளும் உலகிதனை மறக்காது" என்றனர். வேறு சிலர், "பாண்ட

வர்களும் கவுரவர்களும் எப்படியாஞலும் போய்த் தொலே யட்டும்! பாஞ்சாலியை இழிவுபடுத்தாதீர்'' என்று கூறினர். மற்றுஞ் சிலர், ''மாதரசி பாஞ்சாலியின் மானம் குலேந் தால், போர் மூளும்'' என்று எச்சரிக்கை செய்தனர்.

இந்தக் கட்டத்தில், பெற்றவளால் கைவிடப்பட்ட காரணத்தால், துரியோதனுதியரிடம் அடைக்கலம் புகுந்து அரசபோக வாழ்வு பெற்ற கர்ணன் எழுந்தான். தன் தலேவன் துரியோதனன் விருப்பமறிந்தவஞக,

யாரடா பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையுங் களேவாய்; தையல்
சேலேயுங் களேவாய்!'

என்று, பணியாள் ஒருவனே அழைத்து, பாண்டவர்கள் மார்பை அலங்கரித்த ஆடைகளேயும் பாஞ்சாலியின் மானத்தைக் காக்கும் சேலேயையும் களேயும்படி ஆணே யிட்டான்.

இந்தக் காட்சிகள், வியாசரும் வில்லிபுத்தூராரும் காட்டாதனவாகும். ஆம்; பீஷ்மர் கூறிய சமாதானத்துக் குப்பின் பாஞ்சாலி மவுனமாகிவிடுகின்ருள் வியாச பாரதத் தில். விகர்ணனும் அங்கே நமக்குக் காட்சிப்படவில்லே. பாஞ்சாலியின் சேலேயைக் களேயச் சொன்னவன் கர்ணனு மல்லன். இதை எல்லாம் புரட்சிக்கவி பாரதியாரே சித்தரித்துள்ளார்.

செஞ்சோற்றுக் கடன் கழிக்க கர்ணன் சொன்ன சொல் கேட்டு, பணியாள் வரவில்லே, பாஞ்சாலியின் துகிலுரிய! ஆம்; பெண்மைக்கு மதிப்பளிக்கும் பண்பு அவனுக்குமிருந்தது!

## துகிலுரிந்தான்!

பணியாளும் செய்யத் துணியாத வேலையை பாராளும் வேந்தன் தம்பியான துச்சாதனன் செய்யத் துணிந்த வனுகி, அதுவரை பாஞ்சாலியின் கூந்தலை மட்டுமே தொட்டிழுத்துத் துன்புறுத்தியவன், இப்போது ஆடையைத் தொட்டிழுத்து அம்மாதரசை அவமானப்படுத்தவும் துணிந்துவிட்டான். இது நிகழ்ந்தது, அந்தப்புரத்திலன்று; அரச சபையிலே! இதனை நினைத்தாலே நம் நெஞ்சு திடுக்கிடுகின்றது. பெண்ணொருத்தியை, அதுவும் அரசமாதேவியைத் துகிலுரிய துரியோதனுதியர் தேர்ந்தெடுத்த இடம் அரச சபை.

துச்சாதனன் வெறிபிடித்தவனுக மாறி, திரௌபதியின் சேலையை உரியத் தொடங்கியபோது, நீதிமானுன விதுரன், "அச்சோ தேவர்களே!" எனக் கூறி மயக்கமுற்று தரையில் சாய்ந்தான். பாஞ்சாலியோ, முன் செய்த நல்வினையால் உள்ளுணர்வு பெற்றவளாகி, தன்னை மறந்து, "ஹரி, ஹரி, ஹரி" என்முள்; "கண்ணு உனக்கு அபயம்!" என்முள். மேலும் கண்ணனைத் துதிக்கிமுள்.

"கரியினுக் கருள்புரிந் தே—அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித் தாய்!
கரிய நன் னிற முடையாய்! —அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந் தாய்
பெரியதொர் பொருளாவாய்—கண்ணு!
பேசரும் பழமறைப் பொருளா வாய்.
ஆதியி லாதி யப்பா!—கண்ணு!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொரு ளே!
சோதிக்கு சோதி யப்பா!—என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய் திடுவாய்!
மாதிக்கு வெளியினி லே—நடு
வானத்துப் பறந்திடும் கருடன் மிசை

**சோதிக்குள் ஊர்ந்திடு வாய்,—கண்ணு!**
**சுடர்ப் பொருளே, பே ரடற்பொரு ளே!**
**வையகம் காத்திடுவாய்—கண்ணு!**
**மணிவண் ணு, என்றன் மனச் சுடரே!**
**ஐய, நின் பதமல ரே—சரண்**
**ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி!''**

*என்று, தன்னை மறந்தவளாகி, கண்ணபெருமானைத் தோத்தரித்தாள். ஆம்; துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலை உரியத் தொடங்கிய போது, தன் இரு கைகளாலும் சேலையை இறுகப் பிடித்து மானத்தைக் காத்துக்கொள்ள தன் பலம் கொண்ட மட்டும் முயன்ருள். தன் முயற்சி வெற்றி தராதென்று தோன்றியபோது, தன்னுடைய இரு கைகளையும் சிரமேற் கூப்பி, பரம்பொருளைத் தொழுது, அதனிடம் அடைக்கலம் புகுந்தாள்—அவ்வளவுதான்! அந்த நேரத்திலே, துச்சாதனன் உரிய உரிய பாஞ்சாலியின் சேலை வளர்ந்துகொண்டே இருந்தது என்பதனைப் பாரதியாரே கூறக் கேட்போம்.*

**பொய்யர்தந் துயரினைப் போல்,—நல்ல**
**புண்ணிய வாணர்தம் புகழினைப் போல்,**
**தையலர் கருணையைப் போல்—கடல்**
**சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல்,**
**பெண்ணெளி வாழ்த்திடு வார்—அந்தப்**
**பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல் போல்,**
**கண்ண பிரானரு ளால்,—தம்பி**
**கழற்றிடக் கழற்றிடத் துணிபுதி தாய்**
**வண்ணப்பொற் சேலைக ளாம்—அவை**
**வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தன வே!**
**எண்ணத்தி லடங்கா வே;—அவை**
**எத்தனை எத்தனை நிறத்தன வோ!**
**பொன்னிழை பட்டிழை யும்—பல**
**புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைக ளாய்**

சென்னியிற் கைகுவித் தாள்—அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே
முன்னிய ஹரிநா மம்—தன்னில்
மூளுநற் பயனுல கறிந்திடவே,
துன்னிய துகிற்கூட்டம்—கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட்டான்.

## ஆடை வளர்ந்தது!

பரந்தாமனின் அருளால் பாஞ்சாலியின் சேலை வளர, துஷ்டனான துச்சாதனன், வளர்ந்து கொண்டேயிருந்த சேலையை இழுத்து இழுத்துக் கைசோர்ந்து மெய்சோர்ந்து விழுந்ததைக் கண்ட தேவர்கள் பூச் சொறிந்தார்கள் என்கிறார் பாரதி. பீஷ்மர் வாய்விட்டு, "ஓம். ஜெய ஜெய பாரத சக்தி!" என்று கோஷித்தவராய் கை குவித்துக் கும்பிட்டாராம் பாஞ்சாலியை.

பாண்டவர்கள் காக்கத் தவறிய பாஞ்சாலியின் மானத்தைப் பரந்தாமன் காத்தருளிய அற்புதத்தைக் கண்ட வீமன், ஆவேசம் கொண்டு எழுந்து கீழ்வருமாறு சபதம் செய்தான்:

ஆணையிட் டி∴துரை செய்வேன்; இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் தன்னை,
மாணற்ற மன்னர் கண்முன்னே,—என்றன்
வன்மையினால் யுத்த ரங்கத்தின் கண்ணே,
தொடையைப் பிளந் துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையும் ஆங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்;—அங்கு
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்,
நடைபெறுங் காண்பிர் உலகீர்!—இது
நான்சொல்லும் வார்த்தைஎன் றெண்ணிடல் வேண்டா!
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை—இது
சாதனை செய்க பராசக்தி.........'

என்று சபதம் கூறினன். பார்த்தன் சும்மாயிருக்கவில்லை. வீறு கொண்ட சிங்கம் போன்று துரியோதனன் அவையிலே எழுந்து நின்று,

'பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழ லாணை
கார்த் தடங் கண்ணி எங் தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை!
போர்த் தொழில் வித்தைகள் காண்பாய்—ஹே!
பூதலமே! அந்தப் போதினில்!'.........

என்று சூளுரைத்தான்.

## பாஞ்சாலி செய்த சபதம்!

பரந்தாமனின் அருளுக்குப் பாத்திரமான பாஞ்சாலியும் சூளுரைத்தாள். துச்சாதனின் தன் கொடிய கரங்களால் பிடித்திழுத்தபோது, பரந்து அலைந்த தன் கூந்தலைத் திரும்பவும் எடுத்து முடிப்பதில்லை என்ற முடிவோடு, அதனை முடிக்கும் காலம் எது? முடிக்கவிருக்கும் முறை எது? என்பதனை விளக்கும் வகையில் சபதம் புகன்றாள். அதனை மகாகவி பாரதி கூறும் பாணியிலேயே பார்ப்போம்:

தேவி திரௌபதி சொல்வாள்;—'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந் நீர்,—அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான்—இது
செய்யு முன்னே முடியே' னென்றுரைத்தாள்.

ஓமென்று ரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சி உண்டாச்சு—விண்ணைப்
பூழிப்படுத்திய தாஞ்சுழற் காற்று,
சாமி தருமன் புவிக்கே—என்று
சாட்சி யுரைத்தன பூதங்களைந்தும்.
நாமுங் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க!

*பாரதி கண்ட பாஞ்சாலி தன் விரிந்த கூந்தலை எடுத்து முடிப்பதற்கு முன்பே, தன் குறுங் காப்பியத்தை முடித்துவிட்டார் மகாகவி பாரதி. அவர் படைத்த குறுங் காப்பியத்தின் பெயர் "பாஞ்சாலி சபதம்" தானே!*

முற்றும்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

ஜீவன் பிரஸ், சென்னை-5.